ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

| "நன்மை கடைப்பிடி" | "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" | "நாடோப்பன செய்" |
|---|---|---|

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சு. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹு பங்குனிமீ களஉ (29-3-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—நஎ.

### தோத்திரம்

தானேயும் இவ்வுலகம் ஒருமுதலு மாகாத் தன்மையினாற் படைத்தளிக்குந் தலைமையதுவான
கோனாக வொருமுதலிங் குண்டெனவும் யூகங் கூட்டியதுஞ் சகமுடிவிற் குலவுறுமெய்ஞ் ஞான
வானாக அம்முதலே நிற்குநிலை நம்மால் மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததும்உன் மனமே
ஆனாலும் மனஞ்சடமென் றழுங்காதே யுண்மை அறிவித்த இடங்குருவாம் அருளிலதொன் றிலையே.

—தாயுமானசுவாமிகள்.

## தமிழ்நாட்டுத் தேசியக்கவி ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார்

1. அச்சமிகும் பேடிமையின் அடிமை வாழ்வில்
அடங்கியிருந் தறம்மறந்த தமிழர் நாட்டைப்
பச்சைமரத் தாணியெனப் பதியும் சொல்லால்
பாட்டிசைத்துப் பாலர்களும் நிமிர்ந்து நின்று
நிச்சயமெந் தாய்நாட்டின் அடிமை வாழ்வை
நீக்காமல் விடுவதில்லை யெனமுன் வந்த
துச்சமெனச் சுகத்தையெல்லாம் துறந்து நிற்கத்
தூண்டியது பாரதியின் சொல்லே யாகும்.

2. படித்தறியா மிகஏழைக் கிழவ னேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென் றார்த்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமைசொல யாரே வல்லார்.

3. புத்தொளியிற் பழந்தமிழ்க்கோர் புதுமை காட்டிப்
புத்துயிரும் புதுமணமும் புகுத்தி ஞானச்
சத்தியொளி மிகவிளங்கும் சொற்க ளாலே
தாய்நாட்டின் தளையறுக்கும் தவமே பாடி
எத்திசையும் இளந்தமிழர் இன்று கூடி
இறந்தேனும் ஈன்றவளை மீட்போ மென்று
பத்தியொடு அறப்போரில் முனைந்து நிற்கப்
பண்ணினது பாரதியின் பாட்டே யாகும்.

4. எத்தாலும் பணந்தேடி இன்பம் நாடி
உண்டுடுத்து இறப்பதனை இகழ்ந்து தள்ளிப்
பித்தாகித் தான்பிறந்த பரத நாட்டின்
பிணிவிட்டல் ஒன்றினுக்கே பாடிப் பாடி
முத்தாதி மணிகளெனும் சொற்க ளோடு
முப்பழத்தின் சுவைகூட்டி முனிவி லாது
சத்தான வீரத்தின் சாறும் சேர்த்துக்
கவிசமைத்த பாரதியின் தகைமை என்னே!

5. நடித்தொழுகித் துதிபாடி நலங்கள் நாடி
நரைத்திறந்து மறந்திடும்நா வலர்போ லன்றி
வெடித்தெழுந்த பக்தியொடு பரத நாட்டின்
விடுதலைக்குப் பாடுவதே வெறியாய்க் கொண்டு
இடித்தெழுந்து தேன்பொழியும் சொற்க ளோடு
இளங்கதிரும் முழுமதியும் இணைந்தா லென்னப்
பொடித்துடலம் புளகமுற அச்சம் போக்கிப்
புகழ்புரியும் பாரதியின் புலமை தானே,

6 மேனாட்டுப் புதுமொழிகள் வளர்ந்து நாளும்
மிகக்கொழுத்துப் பளபளத்து மேன்மை மேவ
மிக்கசுவைப் பழந்தமிழ்த்தாய் மெலிந்தா ளென்றும்
தாய்நாட்டைத் தமிழ்மொழியை மறந்தீர் ஐயோ!
தமிழர்களே! தளதளத்து மூச்சு வாங்கித்
தலைவணங்கி உடல்சுகித்தீர் தவத்தால் மிக்க
வானாட்டுத் தேவர்களும் அறிந்தி டாத
வளமிகுத்துச் செழுசெழுத்து வாழ்ந்த நாட்டை
வறுமைதரும் அடிமையினில் வைத்தீ ரென்று
பாநாட்டிப் பலவழியிற் பாடிப் பாடிப்
படித்தவுடன் பதைபதைக்க வீர மூட்டும்
சுப்ரமண்ய பாரதியின் பண்தான் என்னே!

7. பாலொழுகும் சிறுகுதலை மகனைப் பார்த்துப்
"படையெடுத்தார் பகையாளர் மகனே நீபோய்
வேலொழுகும் போர்க்களத்தில் வெல்வா யன்றேல்
வெம்படையை மருமத்தில் வாங்"கென் றேவும்
சீலமிகும் பெண்மணிகள் திகழ்ந்த நாட்டைச்
சிற்றடிமைக் கொப்பிவிற்றுத் தின்றீ ரென்றித்
தாலுழுது பறைசாற்றித் தமிழ்ப்பா வோதித்
தட்டியெழப் பாரதியார் தானே செய்தார்.

8. 'அருமகனைத் தேர்க்காலில் அரைத்த வேந்தும்
பழியஞ்சித் தன்கையை அரிந்த கோனும்
தருமமிலைக் கோவலனைக் கொன்ற தென்று
தானறிந்த அக்கணமே சவமாய் வீழ்ந்தப்
பெருமையுள்ள திறல்வேந்தர் பின்னை வந்தீர்
பித்தடிமைக் குற்றேவல் பிழைத்தீ' ரென்று
உருகிமனம் விரிந்துயரும் கவிக ளாலே
உணர்வளித்த பாரதியின் உரைதான் என்னே!

9. பாரிமுதற் சடையப்ப வள்ள லென்று
பாவலர்கள் நாவிலுறை பல்லோர் வாழ்த்தச்
சீரிலகும் தமிழ்மொழியின் இனிய ஓசை
திசையனைத்தும் போயொலிக்கச் செய்த நாட்டில்
ஊரியநற் சுவையொழுகும் கவிக ளாலே
ஊக்கமிகத் தமிழ்நாட்டிற் குணர்வுந் தந்த
பாரதியார் மிகக்கொடிய வறுமை மேவப்
பார்த்திருந்தத் தமிழருற்ற பழிதான் என்னே!

10. சோற்றினுக் கறிவைவிற்றுத் தூர்த்தரைப்புகழ்ந்துபாடிச்
சோம்பரைச் செல்வரென்று தொழுதுடல் சுகித்துவாழ்ந்து
கூற்றினுக் குடலம்போகக் குப்பையிற் கவிகள்சேரக்
குறிவிடா திறந்துபோகும் கவிகளின் கூட்டம்சேரார்
வேற்றவர்க் கடிமைநீங்கும் விடுதலை வரமேவேண்டி
வீரமும் ஞானம்பொங்கச் சக்தியின் வேள்விபாடி
நாற்றிசைத் தமிழரெங்கும் நாட்டினைப் பணியச்செய்த
நாவலர் சுப்ரமண்ய பாரதி நாமம்வாழ்க.

நாமக்கல், வெ. இராமலிங்கம்பிள்ளை.

மாறு அநுபூதி வாய்க்கின் அல்லால் என்மயக்கந், தேறுதென் செய்வேன் சிவமே பராபரமே,

# சட்ட மாணவன் செய்த துட்டத்தனம்

## கடிதமும் மருந்தும்

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 26

யாழ்ப்பாணம் போலிஸ்கோட்டில் போலிஸ்நீதிபதி திரு K. ஆழ்வாப்பிள்ளை முன்பாக, சிவியாதெரு வாசியும் தற்போது கொழும்பிலுள்ள சட்டக் கல்லூரி மாணவனுமாகிய S. செல்வநாயகராசா என்பவர்மீது அவ்வூர் வாசியாகிய முத்துச்சாமி என்பவரது மகளாகிய தங்கம்மா என்னும் 21 வயதான வாலிபப்பெண்ணின் கோப்பத்தைச் சிதைக்க முயன்றதாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக நியாயதுரந்தரர் சாம் ஏ. சபாபதியின் அனுசரணையின் பேரில் நியாயவாதி T. R. நல்லையாவும், எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர் R. R. நல்லையாவின் சார்பாக நியாயவாதி V. யோசேப்பும் வாதித்தார்கள்.

கடந்த விசாரணையின்போது முத்துச்சாமியின் மகள் தங்கம்மா கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:— "நான் 1½ வருட காலமாக நேசித்து வருபவரே இவ்வெதிரி. இவர் எங்கள் வீட்டிற்கு அயலிலே வசிப்பவரானுலும் இருவரும் பாவிப்பது ஓர் கிணறுதான். நான் சிறுபிள்ளையாக இருக்கும்போதே அவரை எனக்குத் தெரியும். எனது வீட்டில் ஒருவருமில்லாதபோது எதிரி வீட்டிற்கு வருவது வழக்கம். நடு இரவில் எதிரி வந்து என்னை அழைத்துப் பக்கத்தேயிருக்கும் குடியில்லா வீட்டிற்குக் கொண்டு போவார். அங்கு எதிரி என்னுடன் தேகசம்பந்தம் வைத்துக்கொள்வார். ஏறக்குறைய 30 தரம் அவ்வீட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்றிருப்பார். நான் இப்போது 6 மாதக் கர்ப்பவதியாகவிருக்கிறேன். அவர் என்னைப்பிரிந்து கொழும்புக்குச்சென்றபோது எனக்கு மாதவிடாய் நின்றுவிட்டது. அவ்விடமிருந்து இரு கடிதங்கள் எனக்கு அனுப்பினர். அவைகளில் சு. செ. எனக் கையெழுத்திட்டிருந்தார். கொழும்புக்குப் போவதற்குமுன் என்னிடம், தான் கடிதங்களைக் கனகரத்தினத்திற்கு அனுப்புவதாகவும், அவரிடமிருந்து கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியும் கூறினர். ஓர் கடிதத்தினுள் 2 முத்திரைகளும், 1 ரூபா நோட்டொன்றும், குயினேயினும், உப்பும் இருந்தன. நான் 3 மாதக் கர்ப்பிணியாக விருக்கிறேனென எழுதியதனுலேயே அம்மருந்தைக் குடிக்கும்படி அனுப்பினர். நான் அம்மருந்தைச் சாப்பிடாது பெட்டியில் வைத்திருந்தேன். 6 மாத காலமாய்விட்டது. அவரது தகப்பனர் இதனைக் கேள்வியுற்றுக் கொழும்புக்குச் சென்று கடிதமெழுதாதவாறு தடுத்துவிட்டார். என்னையே கல்யாணம் செய்வதாகவும் கூறியிருந்தார். பின்னர் பொலீஸ் சார்ஜண்ட் 2 முறையாக வந்து வாக்குமூலம் பெற்றுள்ளார். அப்போதுதான் எனது பெற்றோர்களுக்கு நான் கர்ப்பவதியா யிருக்கிறேனெனத் தெரிந்தது.

இன்றைய தினம் கொழும்புத்துறைப்பகுதி உடையார் திரு. A. பொன்னுச்சாமியும் பொலீஸ் சார்ஜண்ட் 1641 S. M. திரவியமும் வாக்குமூலங் கொடுத்ததின்மேல் பெண்ணினதுதாயாகிய முத்துச்சாமிபெண் செல்லாச்சி கூறிய வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு :—

"சென்ற கார்த்திகைமாதக் கடைசியளவில் எதிரியினது சகோதரியே எனது மகள் கர்ப்பவதியாயிருக்கிறளெனக் கூறினள். அதன்மேலேயே எனக்கு இது விஷயம் தெரியவந்தது. எதிரி தகப்பனருக்கு இது விஷயத்தை எழுதியதி விருந்தே சகோதரி அறிந்தாளென நினைக்கின்றேன். அதன்பின்னர் நான் எனது மகளைக் கேட்டபோது அவள் இவ்வெதிரிக்கே தான்கர்ப்பவதியானளெனவும், தன்னை அவர் கல்யாணம் செய்வதாக வாக்குக் கொடுத்திருப்பதாகவும், அத்துடன் அவர் மருந்து அனுப்பி யிருப்பதாகவும் சொல்ல, நான் பெட்டியைத் திறந்தபோது கடிதங்களையும் மருந்தையுங் கண்டேன். இன்னேரத்தில் எனது கணவனிலை. பின்னர் நான் அவருக்கு எடுத்துரைத்தேன்.''

சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

நீதிபதி வழக்கை இவ்வளவில் தவணையிட்டு வழக்குக் கொப்பியைச் சட்ட நிபுணர்க்கு அனுப்புவதாகக் கூறி வழக்கை வருகிற 16-ந் திகதிக்கெனத் தவணையிட்டார்.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு

## மனிதனை உளியால் குத்திய பெரைரா

யாழ்ப்பாணம் 23.

யாழ்ப்பாணம் சுப்ரீம்கோட்டில் நீதியரசர் திரு. M. T. அக்பார் அவர்களதும் ஆங்கிலம்பேசும் ஜூரிக் கனவான்களதும் முன்பாக சென்ற ஐப்பசி மாதம் 6-ந் திகதியளவில் மட்டக்களப்பைச்சேர்ந்த ஜோன் பெரைரா என்பவன் அவ்வூர் வாசியாகிய நீக்கிலாஸ்அப்பு என்பவனை உளியினுல் குத்திக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி லூயிசும் எதிரியின் சார்பாக குணம் ஸ்பென்சரும் விவாதித்தார்கள்.

### வழக்கின் சாராம்சம்.

காலஞ்சென்றவனுகிய நீக்கிலாஸ் அப்பு என்பவன் மகாப்பில்லுமலை பிலிப் றப்பியேல் என்பவனைச் சந்தித்து ஜோன்பெரைரா (எதிரி) எங்கேயெனக் கேட்டதுடன் "அவன் ஓர் எண்ணத்தை மனதில் வைத்திருக்கிறன். நான் அதனை ஒருபோதும் நிறைவேறவிடேன்'' எனச் சொல்லியிருக்கிறன். பின்னர் இருவருமாக மகாஓயாவுக்குச் சென்றிருக்கிறர்கள். சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே தம்பிமுத்து என்பவர் வீட்டுக்கருகில் ஓர் அறையில் எதிரி வசித்தவன். நீக்கிலாஸ் நித்திரையினின்று எழுந்ததும் ஒரு கோப்பை தண்ணீர் தரும்படி கேட்டானும். அப்போது நீக்கிலாஸ் என்பவன் "ஐயா ஏன் இப்படி அடிக்கிறய் நான் உனக்கு என்னகுற்றம் செய்தேன்'' என்றேர் சப்தம் கேட்டதாம். பின்னர் உளியாலும் குத்தினனும்.

றப்பியேல், ஜேம்ஸ், மேரிநோனு முதலியவர்கள் சாட்சியம் கூறியதன்மேல் எதிரி குற்றவாளியல்லவென ஜூரிமார்கள்கூறிய அபிப்பிராயத்தின்படி நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார். ந. நி.

## நீதிபதியின் சமையற்காரனுக்கு 6வருடம்

### வேலு செய்தவம்பு.

சென்ற வருடம் மார்ச்சுமீ 8-ந் திகதி கொழும்பு உதவி டிஸ்திறிக் நீதிபதி O. L. டி. கிறெற்சோ அவர்களின் சமையற்காரனுகவிருந்த வேலு வென்னும் தமிழ் வகுப்பைச்சேர்ந்தவன் அவனுடன்கூட வேலையாகவிருந்த சைமன் என்பவனின் சாப்பாட்டுக்குள் பொடியாக்கப்பட்ட கண்ணுடித் துண்டுகளையும் திராவக வஸ்துக்களையும் கலந்துவைத்துக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு சுப்பிறீங்கோட்டில் நீதியரசர் F. J. சோற்ஸ் அவர்கள் முன்பாக விசாரணைசெய்யப்பட்டது. முடிவில் யூரிமார்கள் ஏகமனதாக தீர்ப்பின்பேரில் எதிரிக்கு ஆறு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## இனிப்புக் கொடுத்துக் காப்பைக் களற்றிய முத்துத்தம்பி

யாழ்ப்பாணம் 24.

யாழ்ப்பாணம் பொலீஸ் கோட்டில் நீதிபதி திரு. K. ஆழ்வாப்பிள்ளை முன்பாக மானிப்பாய் வாசியாகிய முத்துத்தம்பி என்பவர்மீது, சி. சுப்பையா என்பவரது பௌத்திரியாகிய 2 வயசுப் பிள்ளையின் கையில் இனிப்பைக் கொடுத்து அதனை ஏமாற்றி அதனது காப்புகளைக் கழற்றியதாக ஓர் வழக்குத் தொடரப்பட்டது.

அப்போது மாவிட்டபுர வாசியாகிய சுப்பையா என்பவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"நான் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலிருக்கும் கடையொன்றில் தேனீர் வாங்கிக்கொண்டு வரும்போது எனது பௌத்திரி முத்துத்தம்பி என்பவருடன் விளையாடிக்கொண்டு நிற்பதைக் கண்டேன். அப்போது அவளது கைகளில் காப்புகள் இருந்தன. நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டேன். பின்னர் அக்குழந்தை அழுது கொண்டுவர நான் வெளியேபோய் முத்துத்தம்பி ஓடுவதைக்கண்டு அவனைப் பின்தொடர அவன் மறைந்துவிட்டான்.

நீதிபதி வழக்கை வருகிற 3-ந் திகதிக்கெனத் தவணையிட்டார். ந. நி.


# வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய

புதிய
## தமிழ் எழாந்தரக் கணிதம்

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கும் உபயோகிக்கத்தக்கது.

கண்ணைக்கவரும் அழகியபதிப்பு! கருத்தைக்கவரும் உயரிய விளக்கம்!

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில் வெளிவந்ததேயில்லை.

பிரதி விலை ரூபா 1-00

புதிய
## தமிழ் அக்ஷர கணிதம்

[3-ம் பதிப்பு]

வித்தியாசாலைகளினுபயோகத்துக்குரியதென 13-8-32-ல் வித்தியாகர்த்தரின் அங்கீகாரம்பெற்றது

பிரதி விலை சதம் 80

சகல புஸ்தக வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

*Publishers :–*
வட லங்கா புத்தகசாலை, பருத்தித்துறை (Point Pedro)


தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை, யஃதிலார் மேற்கொள் வது.

பத்திரக்கிரயம்
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, காற்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—௬. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹு பங்குனிமீ ௧௰௨ (29-3-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—௩௭

## ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாறும் வண்டமிழ் வளர்ச்சியும்.

(கொழும்பு "ஆகாயவசனி" நிலையத்தில், வெள்ளவத்தை, குல. சபாநாதன் அவர்கள், இம்மாதம் 26-ந் தேதியன்று நிகழ்த்திய சொற்பொழிவு.)

"வெள்ளிதழ்த் தாமரை நள்ளணங் கிணையடி, உள்ளுதூஉந் தமிழ்வளங் கொள்ளுதல் குறித்தே"

இலங்கையில் சிறந்தோராகக் கொண்டாடப்படும் அறிஞர்கள் பெரும்பாலும் ஒவ்வோர் துறையில் சிறப்புற்று விளங்கினமை குறிப்பிடற்பாற்று. சின்னத்தம்பிப் புலவர் கவித்திறமையானும், நாவலர் அவர்கள் வசனநடைத்திறமையானும், தாமோதரம்பிள்ளையவர்கள் தமிழிலக்கண விலக்கிய நூல்களை அச்சுவாகன மேற்றிய திறமையானும், முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் சரித்திர வாராய்ச்சி வன்மையானும், கதிரைவேற்பிள்ளையவர்கள் சிறந்த வகராதி தொடுத்தமையானும், இவர்கள் யாவருஞ்செய்த பெரும்பணி தமிழகத்திற்கே பெருஞ் சிறப்பை யளித்ததெனின், ஈழத் தன்னையின் மகிழ்ச்சியும் பெருமையும் எம்மாற் கூறுந்தரத்ததோ.

இன்று ஸ்ரீமான் தாமோதரம்பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றியும் அவர் பழந்தமிழ் நூல்கள் செல்லுக்கிரையாகி இறந்து படாவண்ணம் அச்சுவாகனமேற்ற முயன்றதில் பட்ட இன்னல்களைப்பற்றியும் எமக்கு நியமிக்கப்பட்ட நேரத்துள் சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன். இதனால் சில முக்கியமானவற்றைக் குறிப்பிடத் தவறின் மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புத்தூரிலே சிறுப்பிட்டியெனுஞ் சிற்றூரிலே சைவ வேளாளர் குலத்திலே வயிரவநாதபிள்ளையவர்கட்கும் மனைத் தக்க மாண்புடைய பெருந்தேவியெனும் கற்புக்கரசிக்கும் 1832-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ந் தேதி தலைமகனாய் அவதரித்தவரே ஸ்ரீமான் தாமோதரம்பிள்ளையாவர். இவரைச் சிறுவயதிற்றானே தமிழ் கற்குமாறு அக்காலத்து விளங்கிய சுன்னாகம் முத்துக்குமார நாவலரிடம் அனுப்பினார்கள். இவ்வாசிரியரிடம் தமிழ் முறையாகக்கற்று நைடதம், இராமாயணம், கந்தபுராணம்முதலிய தமிழ் நூல்களையும் பாடங்கேட்டுத் தெளிந்துகொண்டார். இவர் செய்த நன்றியைக் குறித்தே பிள்ளையவர்கள் ஆசிரிய வணக்கம் கூறுமிடத்து இவருடைய பெயரையே குறிப்பிடுதல் வழக்கம்.

"எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன், முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னை, கத்துயர் மரபினன் முத்துக் குமார, வித்தக னடிதலை வைத்து வாழ்த்துவனே."

இத்தகைய வணக்கம் பிள்ளையவர்கள் செய்நன்றிமறவாச் செம்மையாளர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாதல் காண்க. இங்ஙனமே தமக்கு உதவிபுரிந்தார்க்கு உரியவிடங்களில் தமது செய்நன்றியைக் காட்டியிருக்கிறார்.

பிள்ளையவர்களின் பெற்றோர் தமிழ்க் கல்வியொடு ஆங்கிலக் கல்வியும் பயிற்ற விரும்பி அக்காலத்தில் தலைசிறந்துவிளங்கியகல்விக்கழகமாய Batticotta Seminary எனப் பெயரிய அமெரிக்கன் மிஷன் கல்லூரியிற் சேர்த்துவிட்டனர். இதனை ஒரு கல்லூரியென்னாது சர்வகலாசாலையென்றலே பொருந்தும். இந்தச் செமினரி 1823-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இதற்கு டக்டர் பூர் என்ற பெயர்பூண்ட ஒரு அமெரிக்கமிஷன் பாதிரியாரே தலைவராக நியமிக்கப்பட்டார். இக் கல்விக்கழகத்தில் படிப்பித்த பாடங்களையும் படிப்பித்த காலத்தையும் கவனிக்கும்பொழுது பிரித்தானிய வரசாட்சியின்கீழ் மேனாட்டு முறையைத் தழுவி இலங்கைத் தமிழர்கட்குக் கல்விபயிற்றிய பெருஞ்சிறப்பு அமெரிக்க மிஷனைச் சாருமென்பதற் கையமில்லை. இந்தச் செமினரியில் கணிதம், தருக்கம், நிகண்டு, நன்னூல், சரித்திரம், குறள், வானசாஸ்திரம், இரசாயனம், பூமிசாஸ்திரம், மொழியாராய்ச்சி முதலிய பல்வேறுவகையான பாடங்களைப் படிப்பித்தனர். இதனாற் றமிழில் முன்னில்லாத பல நூல்களை மொழிபெயர்த் தச்சிட்டனர். அன்றியும், தமிழ்ப் பண்டிதர்களே வாசித்தறியக் கஷ்டப்படும் சித்தாந்த நூலாகிய சிவஞானபோதத்தை முதன்முதல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் அமெரிக்கமிஷன் பாதிரியாரே. (Rev. Hoisington) இந்த மிஷனரிமார் அச்சிட்ட தமிழ்நூல்கள் பல இக்காலத்திற் கண்ணுற்பார்த்தற்கே யகப்படாது மறைந்துவிட்டன. அமெரிக்கமிஷனரிமார் தமிழுக்காகச் செய்தநன்மையை யாம் ஒருபோதும் மறத்தல்கூடாது. இந்த மிஷனரிமார் வந்தபின்பே ஆங்கில மொழியும் அதிக பணச்செலவின்றிக் கற்கும் பெறுபேறு பலவாறுய பிள்ளைகட்குக் கிடைத்தது. இந்த மிஷனரியில் ஆசிரியராக வமைந்தவர்களும் மிகச் சிறந்த கல்வியுடையாரென்க்கூறவேண்டியதில்லை. ஸ்ரீமான் நெவின்ஸ், கறல் விஸ்வநாதபிள்ளை, கதிரைவேற்பிள்ளை முதலிய அறிஞர்களை ஆசிரியராகப் பெற்ற பிள்ளைகளின் பாக்கியமே பாக்கியம். அப் பாக்கியத்தில் பங்குபெற்றவர்களுள் ஸ்ரீமான் தாமோதரம்பிள்ளையவர்களுமொருவராவர். "விளையும்பயிரை முளையிற்றெரியும்" எனும் பழமொழிக்கொப்ப, பிள்ளையவர்கள் கல்வி கற்கும் திறனால் ஆசிரியர்கள் விரும்பும் தலைமாணாக்கனாக விளங்கினார்கள். நெவின்ஸ் ஆசிரியர் பிள்ளையவர்களின் கல்வியறிவையும் ஊக்கத்தையும் கண்டு வியப்புற்று மகிழ்ந்து "இவனால் தமிழ் சிறப்படையும்; இவன் இப்பொழுதே பெரும் பண்டிதன்" என்றுகூறி, அங்ஙனம் பண்டிதனெனவே யழைப்பதுண்டு. இத்தகைய சிறந்த ஆசிரியரிடம் கல்விபயின்று தமது பாடசாலைப் படிப்பை ஒருவாறு ஒதுக்கியபின்னர், 1852-ம் ஆண்டு தமது இருபதாம் வயதில் கோப்பாய் போதனாசத்தி வித்தியாசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றுத் தமது தொழிலைச் செவ்வனே புரிந்து வந்தார். இவரது தமிழ்த் திறனை அடிக்கடி கேள்வியுற்ற பார்சிவல் பாதிரியார் தாம் இந்தியாவில் நடத்திவரும் "தினவர்த்தமானி" எனும் பத்திரிகைக்கு ஆசிரியராக வருமாறு கேட்டனர். இதற்குடன்பட்ட பிள்ளையவர்கள் இந்தியாவுக்குச்சென்று அப்பதவியை யேற்றுச் சீரிய முறையினைக் கைக்கொண்டு அப்பத்திரிகையின் வளர்ச்சிக்குக் காரணராயினர். பத்திரிகாசிரியர் பதவியில் இருக்கும்பொழுது காலம் வாய்ப்புழி ஆங்கிலேய வறிஞர் பலர்க்குத் தமிழ் கற்பித்து மிகச் சிறந்த ஆசிரியராக விளங்கினமையின், சென்னை இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமனம்பெற்றார். கல்லூரியாசிரியராகவிருந்து கடமைபுரிந்து வருங்காலத்தில் சென்னைச் சர்வகலாசாலை நிறுவப்பட்டமையான், பிள்ளையவர்கள் இக்கலாசாலையாரால் 1857-ம் ஆண்டு முதன்முதல் நடாத்தப்பட்ட பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்தினர். நான்கு திங்கட்குப் பின்னர் நடந்தேறிய முதன்முதல் பீ. ஏ. பரீட்சையிற் பிள்ளையவர்களும், கறல் விஸ்வநாதபிள்ளையவர்களும் சித்தியடைந்தனர். பரத கண்டத்திலே சென்னைமாநகரில் முதன்முதல் நடந்தேறிய பீ. ஏ. பரீட்சையில் சித்தியெய்திய பிள்ளைகளிருவரும் ஈழத்தன்னையின் இரு கண்மணிகளாம். இம்மக்கள் சான்றோரெனக் கேட்ட ஈழத்தன்னை தான்பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழ்ந்தாள் என்பதற் கையமுண்டோ?

பிள்ளையவர்கள் கள்ளிக்கோட்டையில் சிலகாலம் ஆசிரியராகவிருந்து, பின்னர் சென்னை இராசாங்க வரவு செலவு கணக்குச்சாலையில் ஓரிடம் பெற்றார். இக்காலத்திற்றான் பிள்ளையவர்களும் இல்லறவாழ்க்கையி லீடுபட்டார். அரசாங்கவேலையில் மிக ஊக்கத்துடன் உழைத்துவந்தார். ஒருமுறை இவருடைய தலைவர் குறித்ததோர் வேலையினைத் தான் செய்வதாயின் ஒருவாரம் செல்லுமென்றும் அதனைப் பத்துநாட்களுள் முடித்துத்தருமாறும் பிள்ளையவர்கட்குக் கட்டளையிட்டனர். பிள்ளையவர்கள் அதனை நான்கு நாட்களுள் முடித்துக்கொடுத்ததும் தலைவர் வியப்புற்று, "என்ன நீர் இவ்வேலையை உமது இரு கரங்களாலுஞ் செய்துமுடித்தீரா"வென வினவியதோடு இவர்பால் பெருமதிப் புண்டாயிற்றெனின் பிள்ளையவர்களின் ஊக்கத்தைப் பற்றிக் கூறவும்வேண்டுமோ? இன்னும் ஓய்வுநேரத்தில் தமிழ் கற்பதில் மிக விருப்புடையராயிருந்தார். இம்மட்டோடமையாது ஆங்கிலத்திலும் நன்குகற்று 1871-ல் பீ. எல். பரீட்சையிலும் தேறினரெனின் இவரது இடைவிடா மெய்ம்முயற்சிக்கு ஓர் எல்லையுண்டோ? பலவகைப்பட்ட துறைகளிலும் சிறந்து விளங்கினர், எதைத் தொடங்கினும் அதனைச் சிறப்பாக நிறைவேற்றும் ஆற்றல் இவர்பால் அதிகமுண்டு. பல்வேறு துறைகளிற் சென்றாரெனினும் தமிழுக்குத் தொண்டாற்றுதலே தனது பெருங் கடமையென்பது இவரது அடிப்படையான கொள்கை. சங்க காலத்தே வீற்றிருந்த தமிழரசி தலையிற் சூடியிருந்த ஒப்பிலா இலக்கணக் கிரீடத்திலிருந்து பல திக்கும் ஒளிகான்ற தொல்காப்பிய இரத்தினமானது மாசுரரால் ஒளிமங்கி மறைப்புண்டு இருந்தவிடமுந் தெரியாது கிடந்த நிலைமையினைக் கண்ணுற்ற பிள்ளையவர்கள் ஆற்றொணாத் துயரக்கடலுலாழ்ந்து கண்ணீருகுத்து, "இக்கிரீடத்தை மீட்டும் எமதன்னையின் சென்னியிற்சூடி மகிழ்வித்து அழகுபார்க்கும்வரை யான் வாளாவிரேன், எனது வாழ்நாள் முற்றும் இப்பணியிற்றானே செலவிடுவேன" எனத் தீர்மானித்துக்கொண்டார். இத்தகைய தீர்மானத்தின் முதற்படியாக பிள்ளையவர்கள காலத்தே வசனநடையும் சைவநெறியும தழைத்தோங்க அவதரித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்ஐயா அவர்கள பரிசோதித்தளித்த தொலகாப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையத்தை பிள்ளையவர்கள் தமது பெயரால் அச்சிட்டனர். எனவே இவருடைய பணிக்கு ஆசிகூறி ஏடு தொடக்கியவர் நாவலர் அவர்கள என்றல் புனைந்துரையாகாது. இங்ஙனம் தொல்காப்பியத்தின் ஏனைய வதிகாரங்களையும் அச்சிடற்காக ஏடுகளைப் பரிசோதித்து வரும் நாட்களில் வேறோர் இரத்தினம இவர் கைக்கெட்டியது. இதுவரை பஞ்சலக்கணம் நிறைந்த நூலொன்றேனும் அச்சிடப்படாமையான் இப்பெருங்குறையை நீக்குவான்புககு "வீரசோழியம்" எனும் சமணகாலத்து இலக்கணநூலைப் பரிசோதித்து அச்சிட முயன்றார். ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள் தாம பாடிய கந்தபுராணத்தை அரங்கேற்றியஞான்று "திகடசக்கரம்" என மொழிபுணர்ந்தமைக்கு விதிகூறுமாறு ஆண்டுக்குழுமியுள்ள புலவர்களின வினாவிற்கு விடையளித்தற் குதவிபுரிந்ததும, அக்காலப்புலவர்கட்கே அரிதாகவிருந்ததுமாய வீரசோழியத்தை: பல நூற்றாண்டு கழிநத பின் அச்சிட முயலுதல் எவ்வளவு சிரமம என்பது சொல்லியறிதல முடியாத காரியம. இந்நூலின ஏட்டுப பிரதிகள் பாணவாய்ப்பட்டும் எழுத்தொன்றற்கு பாணவரி மூன்றாகவும், ஏடுகளை யொன்றைவிட்டொன்று பிரித்தெடுத்தலே பேரற்புதமாகவும் இருந்த நிலைமையைக் கண்ணுற்றும் தளர்வுறாது உழைத்துவநதார். இதன்பயனாக இந்நூல பல சிறப்புக்களுடன் 1881-ம ஆண்டு அச்சுவாகனமேறிற்று. இதனைக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

முற்பிறப்பிற் றவஞ்செய்யாதவர்கள் தவத்தை மேற்கொள்வது வீணாகும்.

# தண்டியலங்காரம்.

(பருத்தித்துறை, ஆசிரியர், திரு. M. S. நாகலிங்கம் அவர்கள்)

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத், திருப்பிலே இருந்துவைகை ஆற்றிலே தவழ்ந்தபேதை, நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரேன, மருப்பிலே பயின்றபாவை மருங்கிலே வளருகின்றாள்."

என்று கற்றோரானும் மற்றோரானும் பாராட்டப்பட்டது நமது தாய்மொழியாம் தமிழ்மொழியன்றோ. வளர்பிறைபோல வளர்ந்துவந்த இம்மொழி தற்காலம் தேய்பிறை ஒப்பத்தேய்த்து வருவதை நோக்க நோக்க யார்தாம் மனமுடையார். இம்மொழி கத்தியரூபம் எனவும், பத்தியரூபம் எனவும் இரு உருவங்களுடன் மிளிர்கின்றது. அவற்றைச் செய்யுள்நடை, வசனநடை என்ப. இம்மொழி வழங்கும் தேசவாசிகளாய எம்மவர்களாற் கற்கப்படுவதற்குரியன, நம் தமிழ்மொழியிலே உறுதி பயப்பனவாயுள்ள நூல்களாம். அவை நாலடியார், திருக்குறள் முதலிய சங்கமருவிய சான்றோர் நூல்களும் பெரிய புராணம், கந்தபுராணம், பாரதம் இராமாயணம், முதலிய சான்றோர் நூல்களுமாம்.

இந்நூற்களெல்லாம் செய்யுள் நடையிலேயே அமைந்திருக்கின்றன. 'முன்னூலொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார் தமக்கென்னூலாரும் இணையோ" எனப்பெருமைபாராட்டற்குரிய நன்னூலை இயற்றிய பல்கலைக்குரிசிலாம் பவணந்தியாரும் தம் நூலுள்ளே

"பல்வகைத்தாதுவின் உயிர்க்குடற்போற் பல, சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினுள், வல்லோரணிபெறச் செய்வனசெய்யுள"

எனச் செய்யுளிலக்கணத்தைக்கூறிப் போந்தாரன்றோ. ஆகவே முற்கூறிய அறிவைத் தரக்கூடிய நூல்களை எல்லாம் அடக்கிவைத்திருக்கின்ற செய்யுட்களை நாம் ஐயந்திரிபறக் கற்கவேண்டுமாயின், இலக்கணம் (எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி) தருக்கம், நிகண்டு முதலிய நூல்களைக் கற்கவேண்டும். இவற்றுள்ளே சொற்பொருட்களை முட்டறுத்து விளக்குவது இலக்கணமாம். இவ்விலக்கணமும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துவகையையுடையது. இவ்வைந்தனுள்ளும் பாஷைகளுக்கெல்லாம் பொதுவாக நின்று அவற்றினைச் சிறப்பிப்பது அணியிலக்கணமாம். அணி எனினும் அலங்காரம் எனினும் ஒக்கும். வடநூலார் சிலர் சரீரத்துக்கு அலம் (ஆபரணம்) போன்று கவிகளுக்கு நிறைவைக் கொடுக்கும் விசேடமாயுள்ளது தானே அலங்காரம் எனப்படும் என்பர்.

இதுகாறும் கூறியவற்றான், நம் தமிழ்மொழியின் பெருமைகளையும், அம்மொழியிலுள்ள அறிவைத் தரக்கூடிய நூல்களையும், அவற்றை ஐயந்திரிபறக் கற்குமாற்றையும் அறிந்தேம். இனி தண்டியலங்காரம் என்றதைப்பற்றி ஒரு சிறிது கூறுதும். இது தண்டி, அலங்காரம், என இரு சொற்களாய்ப் பிரியும். இதை விரிப்புழித் தண்டியாசிரியராற் செய்யப்பட்ட அணி இலக்கணம்என விரியும். வடமொழியாம் சமஸ்கிருதத்திலே அலங்காரம், பலரானும் செய்யப்பட்டுப் பரந்த பலநூல்களாய்க் கிடக்கின்றன. அவ்வலங்கார நூல்கள் காவ்யாதர்சம், காவியதர்ப்பணம், குவலயானந்தம், சந்திராலோகம், சித்திர மீமாஞ்சை முதலாயன. இவற்றுள்ளே சில நூல்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தண்டியலங்காரமும் காவியாதர்சம் என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும். இத்தண்டி எனும் ஆசிரியரே வடமொழியில் காவ்யாதர்சம் என்னும் இலக்கணநூலையும், தென்மொழியில் இவ்வலங்காரத்தையும் இயற்றினர் என்பர் ஒருசாரார். வடமொழியில் இயற்றிய தண்டியாசிரியர் வேறு எனவும் தென்மொழியில் இயற்றிய தண்டியாசிரியர் அம்பிகாபதியின் மகனெனவும் கூறுவர் வேறோர்சாரார்.

கந்தபுராணம், சேதுபுராணம், பாரதம், இராமாயணம் முதலாம் இலக்கியங்களிலேவரும் விசித்திரமான எத்தனையோ கவிகளின் பொருள்களை எல்லாம் உள்ளவாறறிதற்குப் பெரிதும் உபகாரமாய் நிற்பதும் இத்தண்டியலங்காரமாம். அவற்றை எடுத்துக்காட்டின் விஷயம் விரியுமென்றஞ்சி விடுக்கின்றாம்.

அவையெல்லாம் இவ்வலங்காரப் பயிற்சியில்லார்க்கு எளிதிற் புலப்படா. இவ்வலங்காரம் பொதுவியல் என்றும், பொருளணியியல் என்றும், சொல்லணியியல் என்றும் முப்பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. பொதுவியலிலே முத்தகம், குளகம், முதலிய கவிவகைகளும், செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்று சொல்லப்படுகின்ற பத்துக்குணவகைகளும், அடக்கப்பட்டிருக்கின்றன. பொருளணியியலிலே பற்பல பாகுபாடுடைய தன்மை, உவமை, உருவகம், தீவகம், முன்வருநிலை, அதிசயம், தற்குறிப்பேற்றம் முதலாய முப்பத்தைந்து அணிகள் அடக்கப்பட்டிருக்கின்றன.

சொல்லணியியலிலே மடக்கு வகைகளும், கோமுத்திரி, கூடசதுக்கம், மாலைமாற்று, எழுத்துவருத்தனம், காதைகரப்பு, கரந்துறைச்செய்யுள், முதலாம் விசித்திர கவிகளின் தன்மைகளும், செய்யுளிலே வரக்கூடாத பிரிபொருட் சொற்றொடர், மாறுபடு பொருண்மொழி, மொழிந்தது மொழிவுமுதலாம் வழுக்களும், அவைவரிற் பிழையுறா இடங்களும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வலங்காரத்தைக் கற்றிருப்பதனல் யாம் யாதேனும் ஒரு செய்யுளைப் பார்க்கும்போது அச்செய்யுளில் அமைந்த பொருள்களும், இன்பங்களும் தெள்ளிதில் அறிதல் கண்கூடு.


"முன்னைத்தம் சிற்றில் முழங்கு கடலோத மூழ்கிப்போக, அன்னைக் குரைப்பனறிவாய் கடலேஎன் றலறிப் பேரும், தன்மைமடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம் தயங்குகானற், புன்னை யரும்பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே எம்மூர்"

என்ற இச்செய்யுளில் எவ்வளவு சொல்லின்பம் நிறைந்திருக்கின்றது. இது போன்ற செய்யுள்களைப் படிக்கப்படிக்க இன்பம்நிறைந்து வழியுமல்லவா? இவ்வின்பம் இவ்வலங்காரப் பயிற்சியற்றவர்க்குக் கிட்டுமா? ஆகவே நாம் இவ்வலங்காரத்தை ஓர் நல்லாசிரியனிடம் கற்று, செய்யுட்களின் சொற்பொருளின்பங்களை ஆராய்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடார்த்தங்களையும் அறிவித்தற்குரிய நூல்களை ஐயந்திரிபறக் கற்று, அவற்றின் வழிநின்று, தமிழ்த்தாயைப்பேணி அவட்குத் தொண்டாற்றுவோமாக!

M. M. L. MOHAMED ABDUL CADER HADJIAR & Bro.
GENERAL HARDWARE STORE
Grand Bazaar, JAFFNA.

THE BEST IN THE MARKET

KEY BRAND GERMAN CEMENT




துறப்பு மார்க் ஜெர்மன் சீமெந்து

MADE IN GERMANY

இந்த துறப்பு மார்க் ஜெர்மன் சீமேந்து மற்ற எல்லாவித சீமேந்துகட்கும் மேலானதும், அளவு கூடியதும், நல்ல பசையுள்ளதும், நற்சாட்சிப்பத்திரம் பெற்று உலக முழுவதும் அதிக விருப்பத்துடன் வாங்கிப் பாவிப்பதுமான சீமேந்தும் இதுவே. இந்த துறப்பு மார்க்கு சீமேந்தையே உங்கள் தேவைகளுக்கு வாங்கிப் பாவியுங்கள். ஒருமுறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.
(95) 8-3-36.

## விளம்பரம்

கதிரமலையி லுறைகின்ற கதிர்வேலே! நினது திருவடி அடையவருகின்ற பக்தகோடிகளுக்குத்தொண்டு புரிவதற்காக விடையளிததாய். 1927-ம் ௵ மாணிக்ககங்கையி லிருந்து கதிரமலைசிகரம்வரை றோட்டைத் திறக்க கதிர் வேலே! நீ நல்லோர்மனதில் நடனம் புரிந்து பணம்கொடுப்பித்த கருணையால் முற்றுப்பெற நெருங்கிவிட்டது. அன்றுதொடக்கம் நின்னைப்பின்பற்றி வரும் பக்தகோடிகள் தாகசாந்தி செய்தற் பொருட்டு கதிரமலைச் சிகரத்தே தண்ணீர்ப்பந்தலை அமைப்பித்தாய். பின்பு ஆங்கோர் திருக்குள மமைக்கும் பொருட்டும் விடைதந்தாய். அத்திருக்குளத் திருப்பணியை நடப்பிக்க யாழ்ப்பாணவாசிகளிற் சிலர் ஊக்கத்தைத் தருவித்து கார்த்திகை மாசம் துவக்கம் இதுவரையில் வேலை நடப்பித்து, பணவசதிக் குறைவினாலும் ஒருவரும் பணஞ்சாதபடியாலும் வேலையை நிறுத்த உத்தேசித்திருக்கிறேன். பொருட்பாக்கிய முள்ள தனவந்தர்களாகிலும் கதிர்வேலே ஈகின்றாரில்லை. ஈந்தால் இவ்வருஷ முடிவிற்குள் நிறைவேற்றத் திடமுண்டு.

இதற்குப் பணமனுப்பும் விலாசம்:
ரமணசங்குசாது,
திசைமாறு போஸ்ட்.
(8) 9-2-36-12-4-36

## ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாறும் வண்டமிழ் வளர்ச்சியும்

(முன்பக்கத் தொடர்ச்சி)

கண்டுகளித்த புலவர்கள் பலர் பிள்ளையவர்கட்குப் பல பாமாலைகளைச் சூடிப் போற்றி மகிழ்ந்தனர். பல பாமாலைகளுள் சதாவதானம் இராமசாமிச் செட்டியார் அனுப்பிய மாலையொன்றை நீங்கள் கேட்டின்புறுமாறு படித்துக் காட்டுகின்றேன். சிறிது கவனமாகக் கேளுங்கள்.

"இறந்தபூம் பாவை யெலும்பினச்சம் பந்தர், சிறந்தபெண் ணுய்ச்செய்த சிறப் பாங்--கிறம்பலசேர், தாமோ தரன்வீர சோழியத்தார் சாற்றுருவம், பூமீ தியைத் ததெனப் போற்று."

பிள்ளையவர்கள் எடுதத பிரயாசையினை ஓரளவில் இச்செய்யுள் எடுத்துக் காட்டுகின்றது. தொழூஉர் வேலாயுத முதலியாரும் மிகவழகான ஒரு மாலை சூட்டியிருக்கின்றார்கள். அதனையும் பிறவற்றையும் "வீரசோழிய" நூலின்கட் கண்டின்புறுக. இந்நூலின்கண் பிள்ளையவர்கள் எழுதிய பதிப்புரையினைத் தமிழர்கள் கட்டாயம் படித்தல் வேண்டும். பல சிறந்த ஆராய்ச்சி முடிபுகளும் தமிழைப்பற்றிய வாராய்ச்சியும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றைப்பற்றிப் பின்னர்க் கூறுவேன்.

வீரசோழியம் அச்சேறியதன் பின் ஓராண்டுவரை வேலைபார்த்துப் பின்னர் தமிழுக்காக உழைக்கவேண்டும்என்னும் அவாவினால் உத்தப்பட்டு உபகாரச்சம்பளம்பெற்று உத்தியோகத்தினின்றும் இளைப்பாறினர். உத்தியோகத்தினின்றும் பிள்ளையவர்கள் இளைப்பாறிய காலமே தமிழ்நூல்களை அச்சிடற்கு ஊக்கத்தோடு இராப்பகலாய் வேலைசெய்யத்தொடங்கிய காலமாக மாறிற்று. எனவே ஒருவகையில் இளைப்பாறினாரெனினும் இன்னொரு வகையில் இடையீடின்றி உழைக்கத் தலைப்பட்டார். (தொடரும்)

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

# "ஈழகேசரி ஆண்டுமலர்"

## தாதுஹூ சித்திரைத்திங்கள் க-ம் (13-4-36) நாளின்முன் வெளிவரும்

சிறந்த காகிதத்தில் 100 பக்கங்களுக்குமேலுள்ளதாயும்
இலங்கை, இந்தியாவிலுள்ள
சிறந்தபோறிஞர்களின் அரியபெரிய கட்டுரைகளுடனும்
நிழலுருவப்படங்களுடனும் இவ்வாண்டுமலர் வெளிவரும்

பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புவோர்
முற்பணமனுப்பித் தங்கள் பெயரைப் பதிவுசெய்துகொள்ளுதல்வேண்டும்

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றின் விலை சதம் 50. | அணு 8. | மலாய்நாட்டுக்கு காசு 50. |
| தபாற்செலவு சதம் 16. | அணு 3. | காசு 20. |

'ஈழகேசரி' அதிபர், சுன்னுகம்.

விளம்பரம் செய்வதற்கு விசேட வசதி!

# உடல் நூல்.

(சாவைகேசர், ஆசிரியகலாசாலைப் பிரசாரகர்
திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

(உரிமை ஆக்கியோனுக்குரியது)

## 6-ம் அதிகாரம்

## கழிவு மண்டலம் (The Excretory System)

இவ்வதிகாரம் என்னுதலிற்றோவெனின், நந்தேகத்திலிருந்து கழிக்கப்படும், கழிவுபொருட்களோடு சம்பந்தப்பட்டுள்ள உறுப்புக்களைப்பற்றிக் கூறுவது.

சுவாசாசயத்திலுள்ள பிராணவாயுவை இரத்தமெடுத்துச் சென்று; ஆகாரதகனத்துக் குபயோகப்படுத்துகின்றது. நம் ஆகாரங்கள் தகனிக்கப்படும்போது தேகபோஷணைக்குதவாத சலம், கரிவாயு, மூத்திரம்போன்ற அநேக கழிவுகள் ஏற்படுகின்றன. இக்கழிவுகள் இரத்தத்துடன் கொண்டுசெல்லப்பட்டு ஆங்காங்கு பிரிந்து வெளியேறுகின்றன. இக்கழிவுகள் வெளியேருது இரத்தத்துடன் சேர்ந்து இரத்தோட்டத்தைத் தடைபண்ணுது சில உறுப்புகள்வேலைகொள்ளப்பட்டுகுறித்த கழிவுகளை வெளியேற்ற வேண்டியது அவசியமே. இத்தொழிலை ஆற்றுவன கழிவு உறுப்புகளெனப்படும்.

1. சுவாசப்பை :— (the lungs) இதைப்பற்றிய விபரம் முன் அதிகாரத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வுறுப்புமூலம் கழிக்கப்படும் கழிவுப் பொருள்கள் சலம் கரிவாயு சிறு சடபதார்த்தங்கள்.

2. தோல் :— (the skin) இதன் உபயோகங்கள் இதன் சிறப்பை நன்கு விளக்குகின்றன.

உபயோகங்கள் :—

A. நந்தேகத்திற்கு ஓர் காவற்கவசமாய் அமைந்திருக்கின்றது.

B. இவ்வோர் உறுப்பால் மாத்திரம் நாள் ஒன்றுக்கு ஒரு பைந்துநீர் வெளியேறுகின்றது.

C. தோலுள் அமைந்திருக்கும் நரம்பங்கொடிகளால் நாம் உணர்ச்சி அடைகின்றோம்.

D. தோலின்கண் உள்ள சுவேத நீர்க்கோளங்கள் நீரைச் சுரக்கச்செய்து, தோலை நனைத்துத் தேகசூட்டைச் சாந்தியாக்குகின்றன.

### தோலின் அமைப்பு.

தோல், மேற்தோல் கீழ்த்தோல் என்னும் இருபடைகளை உடையது. மேற்தோல் இடத்துக்கிடம் தடிப்பாய் இருக்கின்றது. தடிப்பான படையமைந்துள்ள இடங்கள் குதிக்கால், முதுகு, உள்ளங்கை என்பனவாம். ஒவ்வோர் படையும் கண்ணறைகளாலாயது. கண்ணறைகள் ஒழுங்கற்ற வடிவமுடையவை. இவைகளுக்கூடாகச் சுவேதநீர் ஓடிக்கொண்டிருக்கும். மேற்தோலின் கீழ்க்கண்ணறைகளுள் ஓர் வகை வர்ணப்பசை படிந்திருக்கும். அதன் நிறமே தோலின் நிற பேதத்துக்குக் காரணம். ஆபிரிக்காவிலுள்ள "காப்பிலிச்" சனங்களில் இவ்வர்ணப்படை கபிலநிறமாயிருப்பதால் அவர்கள் நிறம் இருண்ட நிறமாயிருக்கின்றது. இம் மேற்தோல் தேகத்துக் கோர் பாதுகாப்பாக விளங்குகின்றது.

கீழ்த்தோல் :— இதுவே உண்மையான தோல். இப்படை வலை போன்றது; மாமிசத்தாலானது; இரத்த நரம்புகள் செறிந்துள்ளது. இப்படையிற் காணப்படுபவை உணர்ச்சி நரம்புகள், இரத்த நரப்புகள், கோளங்கள், மயிர்களின் வேர்கள் என்பனவாம். இப்படையே தேக உணர்ச்சியைத் தொழிற்படுத்துவது. இப்படை சிலவிடங்களில் எலும்புடனும் சிலவிடங்களில் மாமிசத்துடனும் தொடர்புபடுத்தப் பட்டிருக்கின்றது.

இப்படையிற் காணப்படும் கோளங்கள் இருவகை:

1. சுவேத நீர்க்கோளம் (The Sweat gland)

2. நிண நீர்க்கோளம் (The Sebaceous glands)

முன்னதிலிருந்து சுவேத நீரும் பின்னதிலிருந்து நிண நீரும் சுரக்கின்றன. சுவேதநீர் வெயர்வையாகக் கழிந்து தேகச்சூட்டை மட்டுப்படுத்துகின்றது. நிணநீர் தோலுக்கும் மயிருக்கும் அழகைக் கொடுக்கின்றது. மேலும் நிணநீர்க் கோளங்கள் மயிர்களின் அடிவாரத்துள் அமைந்திருப்பதால் மயிர்கள் காய்ந்து பிளவுபடாமற் காக்குமாறு நிணநீரை வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன.

தோலில் அநேக கண்ணறைகள் காணப்படுகின்றன. இவைகளின் தொகை இடத்துக்கிடம் வித்தியாசப்படுகின்றன. உள்ளங்கையில் ஒருசதுர அங்குலத்தில் 3000 கண்ணறைகள் உண்டு. முதுகில் 600 மாத்திரமுண்டு. இத் துவாரங்கள் அல்லது போறைகள்மூலம் வெயர்வை வெளியேறுகின்றது. வெயர்வையில் இருவகை உண்டு.

1. உணர்வற்றவெயர்வை:—இது சிறு சிறு திவலைகளாக வெளியேறியதும் காய்ந்து நீராவியாய்ப் போகிறது.

2. உணர்வுள்ள வெயர்வை:—நாம் களைக்க வேலைசெய்யும்போதும், உஷ்ண காலங்களிலும் வெளியேறு மதிகமான வெயர்வையின் தொகுதியாம். இது தொகுதியாய் வெளியேறுவதினுல் நமக் குணர்வைப் பிறப்பிக்கின்றது. அன்றியும் நீராவியாகிப் பரிணமிக்கும்போது தேகத்தின் உஷ்ணநிலையைக் குறைக்கின்றது. இக்காரணம்பற்றியே தேகத்திலிருந்து கழியும் கழிவு பொருள்களும் 90 வீதமான பாகம் நந்தோலாற் கழிக்கப்படுகின்றது என்று நூலோர்கூவுர். வெயர்வையாவதென்ன? உப்பும் சிறு சடபதார்த்தங்களும் கரிவாயுவும் சலத்துட் கலந்தவோர் கலவைப்பொருளேயாகும்.

மயிர்கள்:—இவைகள் மேற்தோலிலிருந்து கிளைப்பனபோற் தோன்றினுலும் கீழ்த் தோலிலிருந்து கிளைப்பனவாயிருக்கின்றன. பல மயிர்கள் ஒருங்கு சேர்ந்தவை. கொழுப்புப் பொருள் போன்றவை. தூசிகள் வீழ்ந்து தோற் கண்ணறைகளை அடைத்துப்போடாவண்ணம் அவைகளைத் தடுத்து வைக்கின்றன.

நகங்கள்:—இவைகளும் தோலின் ஓர் பாகமானவை. இரு கூறுகளை உடையவை. தோலினுள் மறைந்திருக்கும் பாகம் வேர் என்றும் தோலின் மேற் காணப்படும் பாகம் நுனி என்றும் அழைக்கப்படுகின்றன.

(தொடரும்)

# சுற்றுடல்.

—"வாராந்தன்"

நமது பிரதிநிதிகளை எப்போதுகாண்போமினி. தினமும் குறைந்தது ஐந்துமுறை நமஸ்கரிக்கும் கரங்களுடன் தங்கள் இரதங்களில் பிரசித்த வீதிகளாலும் ஒழுங்கைகளாலும் சென்றமாசந் திரிந்தனரே! யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்று. மற்றைய விடங்களிலும் பிரதிநிதிகளைப் பலர் தேடித்திரிகிறார்களாம். காலம் இரவும் பகலுமாக மாறுவதுபோல் சென்றசில நாட்களின் முன்பிரதிநிதிகள் வாக்காளரைத் தேடித்திரிந்தனர். தேர்தல் முடிந்ததும் வாக்காளர் பிரதிநிதிகளைத் தேடித்திரிய வேண்டியதாயிற்று. வடமாகாணப் பிரதிநிதிகளில் இருவர் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்கள். மற்ற இருவரும் எங்கு சென்றிருக்கிறார்களோ தெரியவில்லை.

* * *

## மீசைவளர்ப்ப தெப்படி ?

இந்த மாசம் முதற் பகுதியில் பட்டாளத்தில் சேர்ந்தவர்கள் மீசைவளர்ப்பதைப்பற்றி பாராளு மன்றத்தில் சில கேள்விகள் பிறந்தன. ஓர் அங்கத்தவர் ஒரு யுத்தவீரன் மீசை வளர்த்ததுகாரணமாக ஓர் விசாரணை நடந்ததுபற்றிசில கேள்விகள் கேட்டார். யுத்தவிஷய மந்திரியார் மீசை வளர்த்ததுக்காக விசாரணை செய்யப்படவில்லை யெனவும் கட்டளைக்குட்படாது நடந்ததற்காக விசாரணை செய்யப்பட்டதெனவும் சேனைத்தலைவனின் விருப்பப்படியே மீசைவளர்க்க வேண்டுமெனவுங் கூறினர். திரு. T. வில்லியம்ஸ் என்னும் அங்கத்தவர் யுத்தவிஷயமந்திரியார். எப்படியாக யுத்தவீரர்கள் மீசை அணிந்திருக்க வேண்டுமென்பதைச் சபையிற்காட்ட வியலுமாவெனக் கேட்டார். இதற்கு மறுமொழி கிடைக்கவில்லை யாயினும் சிரிப்பு அதிகமாக விருந்தது.

* * *

## காதல் விலைக்கிருக்கிறது!......

இலங்கையில் ஓர் அதிசயமான செடி கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. இச்செடியின் வித்து, காதல் கொள்வதற்குத் துணைபுரியுமாம். இதன்பெயர் நாகமாறுஅலே. இந்த வித்துக்கள் ரசாயன பரீட்சை செய்வதற்காக லண்டனில் இலங்கை வியாபார காரியஸ்தராகவிருக்கும் டாக்டர் போல் பீரீஸ் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தவித்தை தண்ணீர்ப்பதார்த்தத்துடன் சேர்த்து ஒருவர்தாம் விரும்பியவருக்கு அருந்தக்கொடுத்தால் அருந்துபவருக்கு கொடுத்தவரிடம் காதல் ஏற்படுமாம், இந்த வித்தை விலைக்கு வாங்குபவர் காதலை விலைக்கு வாங்குபவராவர். அதனால் இந்த வித்து சுகதுக்கங்களுக் கேதுவாகும். இவ்விதமாகக் காதலிப்பது நரகம் அடைவதற்கு குடிநீர் குடிப்பதுபோலாகும்.

* * *

## வசியப்பொடியால் வந்த கேடு.

இந்தக்காதல் வித்து 1932-ல் நடந்த ஓர் வழக்கை ஞாபகத்துக்குக் கொண்டுவருகின்றது. ஸ்ரீமதி வில்கின்சன் என்னு மோர் பெண் தான் வைத்திருக்கும் வசியப் பொடி மூலமாக ஸ்ரீமதிகள் டோறூலின், மேபல்லின், என்னும் இரு கன்னியருக்கு தகுந்த மணவாளர்களை சம்பாதித்துக் கொடுப்பதாகக் கூறி அவர்களிடம் நூற்றுக்கணக்கான பவுணை வாங்கியதாகக்குற்றஞ்சாட்டப்பட்டாள். இந்திய இராசப் பிரதிநிதியாக விருந்த இர்வின் பிரபுவே கன்னியர்கள் சார்பாக வழக்கை நடாத்தினர். முடிவில் எதிரியாகிய பெண்ணுக்கு 18 மாசக்கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆதலின் இவ்வகையான காதல் சுலபமான காரியமன்று. இப்பெண் அக் கன்னியர்களை மூடாத்துமாக்களென பகிரங்கப்படுத்தியது மல்லாது அவர்களிடமிருந்த ஆடைஆபரணங்களையும் அபகரித்து விட்டனளாம்.

* * *

## அனுவசியமான பட்டம்

இந்தியாவிலிருந்து இளைப்பாறிச்செல்லும் இராசப் பிரதிநிதி வில்லிங்டன் பிரபு அலிக்காவிலுள்ள முஸ்லிம் சர்வகலாசாலைக்குச் சென்று கைதராபாத் நிசாம் அவர்களிடத்தே (Doctor of Law) என்லும் பட்டம் பெற்றனராம். இந்தப் பட்டத்தால் இராசப் பிரதிநிதியை நிசாம் மகிமைப்படுத்தியிருக்கலாம். ஆனால் இது வில்லிங்டன் பிரபுக்கு ஒருவிதமான பிரயோசனமுமில்லை. இது மகாத்துமாகாந்திக்கு சேர்பட்டம் அளிப்பது போலாகும். இந்தப்பட்டத்தை சர்வகலாசாலை ஆசிரியர் ஒருவருக்களித்தால் அவர் அதைக்கொண்டுபொருளீட்டக்கூடும். பொருளீட்டா விட்டாலும் அது ஓர் கௌரவமாகும். நிசாமுடைய வெள்ளி விழாக்கொண்டாட்டத்தில் பங்குபற்ற வில்லிங்டன் பிரபுக்கு தருணங்கிடைக்கமாட்டாது. லின்லித்கோ பிரபுவே அப்போது இராசப்பிரதிநிதியாய் இருப்பர்.

* * *

## ஒரு சவப்பெட்டி!

மூன்றுமாசங்களுக்குமுன் மருதானைப் புகைரத ஸ்தானத்தில் சில சாமான்கள் ஏலத்தில் விற்கப்பட்டது. நூற்றுக்கணக்கான தொப்பிகள், சப்பாத்துகள், கைப்பிரம்புகள், குடைகள் முதலிய சாமான்கள் இதில் காணப்பட்டன. எல்லாச் சாமான்களும் ஏலத்தில் விலைப்பட்டன. ஓர் சவப்பெட்டி மாத்திரம் விலைப்படாதிருந்தது. வெந்தீஸ்மேத்தர் அப்பெட்டி சில சமையங்களில் எவ்வளவு உபயோகமாக விருக்குமென்று பலவிதமாகவும் எடுத்துக் கூறியபோதிலும் ஒருவராவது அதை வாங்கிக்கொள்வதற்கு முன்வரவில்லை. ஈற்றில் அவருக்கு ஓர் யோசனைவந்தது. சில மான் கொம்புகளையும் சவப்பெட்டியையும் ஒரு கூட்டமாகப் போட்டு ஒருமிக்கச்சேர்த்து விலைகூறினர். சிலர் விலைகேட்கத் தொடங்கினர்கள். முடிவில் எல்லாமாக 75 சதத்துக்கு விலைப்பட்டன. சவப்பெட்டியை வாங்கினவன் அதை என்னசெய்வதென்றறியாது வைத்துக்கொண்டு நின்றான். இந்தப் பெட்டி சிலநாளின் முன் யாருக்காகவோ றெயில்மூலம் வந்தது. ஆனால் ஸ்தானத்தில் ஒருவராவது தம்முடையதென அதை எடுக்க வரவில்லை. அடுத்த விற்பனவு யூன்மாசம் நடைபெறும்.

* * *

## குறித்துக்கோள்ளுங்கள்

வைத்தியர்: நீ சீக்கிரம் மறுவிவாகஞ் செய்துகொள்ளவேண்டும்.

கைம்பெண்: ஓகோ! நீங்கள் இதற்காகத்தான் வந்தீர்களா?

வைத்தியர்: அம்மா, இதுமாத்திரம் உன் ஞாபகத்தி லிருக்கட்டும். வைத்தியர் மருந்து குடிக்கச்சொல்வதேயல்லாமல் தான் மருந்து குடிக்கிறதில்லை.

# இந்தியச் செய்திகள்.

## மகாத்மாவுடன் பேட்டி

தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர்களுள் ஒருவரும் இந்திய சட்டசபையங்கத்தவருமான ராய்பகதூர் M. C. இராஜாஎன்பவர் மகாத்மா காந்தியடிகளைச் சென்ற ஞாயிற்றுக்கிழமை சந்தித்து அதிகநேரம் பேசிக்கொண்டிருந்தனர். ஹரிஜனங்களின் வருங்கால நிலைமையைக்குறித்தே இருவரும்பேசினர். அம்பேத்காரின் பிரச்சினையில் பல்லாயிரவர் ஒரேயடியாகச் சமயம் மாறும் விஷயம் இருவராலும் அதிக நேரத்துக்கு ஆலோசிக்கப்பட்டது. மேல், புதிய அரசியற்றிட்டத்தில் ஹரிஜனங்கள் தங்கள் வாக்குரிமையை அளிக்குந்தன்மை யாதாயிருக்குமென்றும் கலந்து பேசினர். பூனாவில் மகாத்மா செய்துகொண்ட நிபந்தனைக்கு விரோதமாக இப்போது அரசினர் புதியமுறைகளைக் கைக்கொள்வதும் ஆலோசிக்கப்பட்டது. இவ்விஷயமாக இந்திய மந்திரிக்கு மனுச் செய்வது அவசியமென எண்ணினர்.

மகாத்மா டெல்கியிலிருந்து புறப்பட்டு அடுத்தமாதம் 5-ந் திகதிவரையில் அலகபாத் நகரை அடைவாரெனச் சொல்லப்படுகிறது.

## சுபாஷ் சந்திரவஸு

அடுத்தமாதம் லக்நோ நகரில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மகாசபையில் சமுகமளிப்பதற்காக ஐரோப்பாவிலிருந்து வசு அவர்கள் இந்தியாவுக்கு வருதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தனர். இதற்குப் பிறிட்டிஷ் அரசினர் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார். இந்தியாவிற்குள் அவர் வந்தால் பின் கைதியாக்கப்படுவாரெனச் சொல்லப்படுகிறது. அரசினர் இவ்விதம் நீதியீனமாக நடந்துகொள்வதைக் கண்டு யாவரும் திகிலடைய வேண்டியிருக்கிறது. சென்ற பத்துவருடங்களுக்குமேல் ஓர் அரிய தலைவனை இடையீடின்றி நீதிமன்றத்தில் விசாரணைசெய்யாது சிறையில் வைப்பது நீதியாகுமா? ஒருவரில் குற்றமுளதாயின் அதை விசாரணைசெய்து தண்டிப்பதே முறை. 1931-ம் வருஷம் தொடக்கம் இவர் சிறையிலேயே வசித்து வருகின்றனரெனலாம். இவ்வுத்தரவைக் கண்டித்து இந்தியச் சட்டசபையில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசினரின் சார்பில் உள்நாட்டு மந்திரியார் கூறியவை ஏற்கக்கூடியனவாயில்லை. இவர் அராஜகமுயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாற்றான் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதெனக் கூறுகின்றனர். வங்காளத்தில் இவ்விஷயமாக அதிகம் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது. அரசினர் உத்தரவினை மீறி இந்தியா வந்து சேரும்படி வங்காள வாசிகள் இவர்க்குச் செய்தியனுப்பியிருக்கின்றனர்

## விலை குறைக்கப்படுமோ?

ஆரம்பத்தில் இந்தியாவில் போஸ்ற்காட்டின்விலை காலணாவாகவேயிருந்தது. அதாவது மூன்று பைசா. பின் அதன்விலை காலத்துக்குக்காலம் கூட்டப்பட்டதும் அதனை உபயோகிப்போரும் அருகிவந்தனர். காலணாவிலிருந்து அரையணாவாகவும், பின் முக்காலணா (ஒன்பது பைசா)வாகவும் அதிகரிக்கப்பட்டது. இலங்கையில் ஒரு போஸ்காட்டின்விலை அரையணாவே. இந்திய அரசினர் பணக்காரரின் நன்மையை நாடினரேயன்றி ஏழைகளின் நன்மையை நாடினரில்லை. சமீபத்தில் இந்திய சட்டசபையில் இவ்விஷயம் விவாதிக்கப்பட்டது. போஸ்ற்காட்டின் விலை அரையணாவாகக் குறைக்கப்பட வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, இத்தீர்மானத்தை அரசினர் கைக்கொண்டால் அது பொதுசனங்கட்குப் பெரு நன்மையாகும்.

## சர்தார் வல்லபாய்படேல்

தற்போது டெல்கி நகரில் வைகும் வல்லபாய் படேல் அவர்கள் சடுதியாகச் சுரநோயால் பீடிக்கப்பட்டு வருந்துவதாக அறிகிறோம். அதுகாரணமாக காங்கிரஸ் நிர்வாக சபையின் கூட்டமும் பின்போடப்பட்டிருக்கிறதாம். சென்ற திங்கட்கிழமை சுரம் 103 டிக்கிரியில் காய்ந்ததாகவுங் கூறப்படுகிறது. விரைவில் இவர்சுகமடைந்து தேசத்தொண்டில் ஈடுபடுவாராக.

## நிச்சயமில்லையாம்

அடுத்த மாதம் லக்னோ நகரில் கூடும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு மகாத்மா சமுகமளிப்பது நிச்சயமில்லை யென்று கூறப்படுகிறது. அவருடைய தேகாரோக்கியம் சிறிது சாந்தமடைந்துளதாயினும் அவருக்குத் தற்சமையம் ஆறுதல் மிகவும் அவசியம். அவருடைய தேகநிலையை Dr. சேயர் என்பவர் டெல்கிநகரில் பரீட்சித்துப் பார்த்து அப்படியே கூறியுளதாக அறிகின்றேம். மகாத்மாவின் காரியதரிசியாகும் மகாதேவ தேசாய் வெளியிட்ட அறிக்கையும் அவ்வாறே கூறுகின்றது.

**The Jaffna Timber Depot & Workshops**

யாழ்ப்பாண

**மரக்காலையும் மரத்தொழில் நிலையமும்**

ஆஸ்பத்திரி ரேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

கிளை நிலையம் :-

புதிய மரக்காலை, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

**உள்நாட்டுக் கைத்தொழிலையே ஆதரியுங்கள்**

வித்தியாசாலைகளுக்கும் வீடுகளுக்குமுரிய மரத் தளபாடங்கள்
தற்காலத்திற்கேற்ற சிறந்த புதிய மாதிரிகளில்
திறமைவாய்ந்த தொழிலாளரைக்கொண்டு செய்விக்கப்பெற்று
விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

கதவு நிலைகள், யன்னல்கள் முதலியன செய்வதிற் பிரக்யாதிபெற்றவர்கள்

எல்லா ஓடர்களும் கூடிய கெதியில் கவனிக்கப்படும்.

விலை சகாயம்! சிறந்த வேலை!

இலங்கையிலுள்ள பலவகையான மரங்களும்
எங்களிடம் விற்பனைக்கு இருக்கின்றன,
வீடு கட்டுவதற்கும் தளபாடங்கள் செய்வதற்கும் வேண்டிய அளவுகளில்
எல்லாவிதமான மரங்களும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை வந்து பரீட்சித்துப்பார்த்துத் திருப்தியடையுங்கள்!

தந்தி :- "FURNISH", Jaffna.

A. P. செல்லையா
*Managing Proprietor*

(96) 15-3-36

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு, மெண்ணிற் றவத்தான் வரும்.

# "கவர்னரின் பேச்சுக்குக் கண்டனம்"

## மந்திரித் தேர்தலின் மாருட்டம்

## ஒற்றுமையின்மையால் கண்ட பலன்

## லண்டன் "ரைம்ஸ்" பத்திரிகையின் கூற்று

## திரு. தம்பிமுத்துவின் சாட்டு

## மந்திரி பண்டாரநாயக்காவின் துரிதம்

## யாழ்ப்பாணத்துக்கு முனிசிப்பல் கவுன்சில்?

[நமது அரசியல் நிருபர்]

கொழும்பு 27

அரசாங்கசபை அலங்காரத் திறப்புவிழாவன்று தேசாதிபதி கூறிய சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் சிலரிடையே ஏற்பட்டிருக்கின்றது இவரது பேச்சினைக் கண்டித்து வருகிற செவ்வாய்க்கிழமை அரசாங்க சபையில் டக்ரர் என். எம். பேரேரா ஓர் நிர்ணயம் பிரேரிப்பார்.

சனத்தோகை குறைந்த சாகியத்தாரில் ஒருவருக்கேனும் மந்திரிப்பதவி கிடையாததற்குக் காரணம் அவர்களிடத்தே காணப்பட்ட ஒற்றுமைக் குறைவும் சிங்களச் சாகியத்தாரிடமுள்ள ஒரே நோக்கமுமேன்பது வெளிப்படையாகின்றது.

லண்டன் 'ரைம்ஸ்' பத்திரிகை இலங்கைத் தேர்தல் முறைகளைக் கண்டித்துப் புதிய விசாரணைக் கோஷ்டி ஒன்று இலங்கைக்கு அனுப்பப்படவேண்டுமேனக் கூறுகின்றது

சுயாட்சி ஸ்தாபன மந்திரியார் திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா தாம் செய்யப்போகும் முயற்சிகளைப்பற்றியும் யாழ்ப்பாண நகரசபையை முனிசிப்பால்ற்றியாக்குவதற்கு ஓர் யோசனையிருப்பதாகவும் கூறுகின்றார்.

சென்ற வெள்ளிக்கிழமை அரசாங்கபை அலங்காரத் திறப்புவிழாவில் தேசாதிபதியவர்கள் கூறிய விஷயங்களில் அநேகரிடையே அபிப்பிராயபேத மேற்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. பொதுவாகக் கூறுமிடத்துத் தேசாதிபதி கூறியவை முழுவதும் உண்மையே. ஆயினும் அவர் தம்மிடத்தேயிருக்கும் அதிகாரத்தைப்பற்றி ஒன்றுங் கூறவில்லை. நடந்தேறிய தெரிவில் ஏற்பட்ட குறைகள் காரணமாகச் சர்வசன வாக்குரிமையை நீக்கவேண்டுமாயின் மந்திரிமார் தெரிவிலும் அங்கத்தவருக்கிருக்கும் வாக்குரிமையை நீக்கிவிடுவதே முறையாகும். சனப்பிரதிகளாக அங்கத்துவம் பெற்றவர்களும் சனத் தலைவரெனக் கொண்டாடப்படுவோரும் சுயநலப்பற்றும் சாதிசமயக் கோட்பாடுங்கொண்டு பதவிவேட்டையாடத் தொடங்குவார்களாயின் அவர்களின் நாமதேயங்களுக்கு முன்னும் பின்னும் கௌரவ அடையாளமொழிகளிருப்பதின் பயன்தான் என்ன? இவர்களுக்கு ஏழுபேரை மந்திரிமார்களாக்கும் தெரிவுரிமை கொடுத்ததின் பலன்தான் என்னே! இவர்கள் இவ்வாருக ஒழுகுவார்களாயின் கல்வியறிவற்ற பாமர சனங்கள் எவ்வாருக நடப்பார்கள்? சிங்களத் தலைவர்கள் காங்கிரசில் குறிக்கப்பட்ட பெயர்வழிகளுக்கே மந்திரிப்பதவிகளுக்கு உதவிபுரிந்தார்கள். இந்த ஏழு மந்திரிமாரும் ஒரே சாகியத்தாராயும் ஒரே கொள்கையுடையராயுமிருத்தலால் விஷயங்களைக் கையாளுவதற்கும் அரங்கேற்றுவதற்கும் சுலபமாக விருக்குமெனப் போலி நியாயங்கள் கூறியும் எழுதியும் வருகிறார்கள். ஆனால் பல கட்சியாரும் சேர்ந்து பலவித நியாயங்களையும் செவ்வனே விவாதித்துத் தீர்ப்பெடுத்தலே சிறந்த முறையாகுமென வேறு சிலர் கூறுகின்றனர்.

### ஒற்றுமை

சனத்தொகை கூடியவர்களெனக் கூறப்படும் சிங்களச் சாகியத்தார் மந்திரிமார் தெரிவில் காட்டிய ஒற்றுமை சனத்தொகை குறைந்த ஐரோப்பியர், பறங்கியர், தமிழர் காட்டவில்லையென்றே கூறவேண்டும். பெரும்பாலும் ஒவ்வொருவரிடத்தேயும் மந்திரிப்பதவி அபேட்சையிருந்திருக்கிறதாம். இவர்கள் தங்களுள் ஒருவரைத் தெரிந்து அவருக்காக உதவிபுரியவேண்டுமென்ற பெருங் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லையென்பது வெளிப்படை. ஆயினும் இவர்கள் ஒருவராவது இப்பதவிகளுக்குப் போட்டிசெய்யாதொழிந்ததே பெரிதும் போற்றத்தக்கது.

லண்டனில் வெளிவரும் 'ரைம்ஸ்' என்னும் பத்திரிகை இலங்கைத் தேர்தல் முறையை அதிகம் கண்டித்து எழுதுமிடத்துசர்வசனவாக்குரிமையளித்தது பெருந்தவறெனவும் அதிசீக்கிரத்தில் லண்டனிலிருந்து இலங்கைக்கு விசாரணைக்கோஷ்டி ஒன்று அனுப்புதல் அவசியமெனவும் வரைகின்றது. டொனமூர்த் திட்டத்தின் ஊழல்கள் சென்ற பொதுத்தெரிவில் வெளியானதென்று கூறுதல் ஒவ்வாது. இத்திட்டத்தைப் பரீக்ஷிக்கமுன்னும் 1931-ம் ஆண்டில் பரீக்ஷித்தபின்னும் இதன் குறைகள் நன்கு உணரப்பட்டது. விசாரணைக் கோஷ்டியார் அண்ணன் தம்பிமாராகவிருந்தால் 'சும்மாவிருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் பண்டாரம்' என்றவாருக முடியலாம். இதற்கிடையில் இலங்கைச் சட்டசபைத் தலைவர் நடந்தேறிய தேர்தல் நடவடிக்கைகளைப் பற்றி ஓர் அறிக்கை சீக்கிரத்தில் தேசாதிபதிக்குச் சமர்ப்பிப்பாராம். தேசாதிபதி குடியேற்றநாட்டு மந்திரியாருக்கு அதை அனுப்புவார். விசாரணைக் கோஷ்டியாரும் ஒருசமையம் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள். அடுத்த அரசாங்கசபை வேறு திட்டத்தின்கீழ் கூடலாம். ஆனால் அடுத்த திட்டம் எவ்வாறான திட்டமாகவிருக்குமோவென்பதே கேள்வி.

சென்ற புதன்கிழமைகாலையில் மந்திரிசபை முதன்முதலாகக்கூடிச் சில விஷயங்கள் ஆலோசனை செய்தபொழுது, திட்டத்தைத் திருத்தும் விஷயத்தையிட்டே அதிகம் முயற்சிசெய்யவேண்டுமெனத் தீர்மானித்தது. தற்போதுள்ளமாதிரி மந்திரிமாரைத் தெரிவுசெய்யும்முறை இவர்களுக்கும் திருப்திகரமாயில்லையாம். சர்வசன வாக்குரிமையில் தீண்டுவது அவசியமில்லையெனவே இவர்களும் கூறுகிறார்கள். இதற்கிடையில் திரு. E. R. தம்பிமுத்து அவர்கள் 'விழுந்தவன் மீசையில் மண் படவில்லையென்ற பிரகாரம் தான் உபதலைவர் பதவிகருப் போட்டிசெய்து ஆக 7 வோட் பெற்றுத் தோல்வியுற்றதற்குப் பத்திரிகை வாயிலாக நியாயங் கூறியிருக்கிறார். சிங்களர் தனக்கு உதவி செய்யப் பின்னிற்கவில்லையாம். ஆனால் தான் ஒருவரிடமும் போய்த் தனக்காக வோட் பண்ணும்படி கேட்கவில்லையாம். நகரசங்கத்தில் கிளாக் வேலை பெறுவதற்கு அங்கத்தவர்களைப் போய்க் காண்பது சட்டவிரோதமென்றால் இவ்வகையான வோட் கேட்பதும் சட்டவிரோதமாகுமாம். இவர் ஓர் நியாயவாதியென்பது உண்மை. ஒருவரின் தகுதியை அல்லது நட்பைக்குறித்துச் சனப்பிரதிநிதிகளால் வாக்களிக்கும் விஷயத்தில் ஒருபோதும் அவர்களைப் போய் வோட் கேட்கத் தேவையுமில்லை; முறையுமாகாது. நட்பிருக்குமாயின் கேளாமலே அவர்கள் 'வோட்' கொடுப்பார்கள் என்பதை எவரும் ஒத்துக்கொள்வர். அரசாங்க சபைத்தலைவர் கௌரவ திரு. வை. துரைசுவாமியவர்களைக் குறித்துப் பத்திரிகைகள் எல்லாம் புகழ்மாரி பொழிகின்றன. இவர் 1921 தொடக்கம் 1931 வரையில் 10 வருடகாலம் கடந்த சட்டசபையிலிருந்த காலத்தில் ஒரு நாளாவது சபைக்குச் செல்லாதிருக்கமாட்டார். பிரதானமான விஷயங்கள் வருங்காலத்து தன்னால் இயலக்கூடிய சாமார்த்தியத்துடன் சொற்பொழிவு மாற்றியிருக்கிறார். இவர் டொனமூர்க் கோஷ்டியார் இலங்கைக்கு வந்த பொழுது இலங்கைக்குப்பொறுப்பாட்சியளிக்கவேண்டுமெனவும் கூறியிருக்கிறார் இவர் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சென்றிருக்கிறார். இவர் தமக்குக் கிடைத்த பெருங் கௌரவத்தையிட்டு பெருமை காட்டாது தம்போதும் யாழ்ப்பாணத்தில் சட்டவாசிகசாலையில் தமது நண்பர்களுடன் கலந்து உரையாடிக் கொண்டிருக்கிறாரென எனதுநண்பர் ஒருவர் கூறினார் இவர் திறப்புவிழாவில் கூறிய மொழிகளை யாவரும் புகழ்ந்துரைக்கிறார்கள்.

புதிதாகத் தெரிவுபெற்ற மந்திரிமாருள் உத்தியோகமுறையில் அதிக ஊக்கம்காட்டி நிற்பவர் திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா என்று கூறுதல் மிகையாகாது. இவர் சுயாட்சி ஸ்தாபனங்களின் தற்போதைய நிலையை நன்குணர்ந்தவர். இவர் தமது கொள்கைகளையும் தாம் செய்யப்புகும் முயற்சிகளையும் பத்திரிகை நிருபர்களுக்கு வெளியாகக் கூறியிருக்கிறார். தற்போது U. D. C. யாகவிருக்கும் சில சிறிய நகர சபைகளை (Municipality) முனிசிப்பாலிற்றியாகும் பெரிய நகரசபைகளாக்கமுயற்சி செய்வாராம். யாழ்ப்பாண நகர சபையையும் முனிசிப்பல்றியாக்க வேண்டுமென கேட்கப்பட்டிருக்கிறதாம். சீக்கிரத்தில் இவ்விஷயம் நிர்வாக சபையில் எடுத்துக்கொள்ளப்படுமாம். கிராமச்சங்கங்களிலும் அநேக விஷயங்கள் திருத்தப்படவேண்டியிருக்கிறதாம். இலங்கையிலுள்ள ஆறுகளிலும் வாவிகளிலும் பல சாதி மீன்கள் உற்பத்தியாகச்செய்து மீன்பிடிக்குந் தொழிலை ஊக்கப்படுத்துவாராம்.

புதிய மந்திரிமாரில் சேர். D. B. ஜயத்திலகா, திரு. D.S. சேனநாயக்கா, திரு. C. W. W. கன்னங்கரா என்போர்முன்மந்திரிமாராகவிருந்தவர்கள். திரு. S.W.R.D. பண்டாரநாயக்கா,சென்ற அரசாங்கசபையில் வாயாடியாகக்கீர்த்திபெற்றதுமல்லாது சுயாட்சியில் அதிகம் பற்றுடையார். திரு. G. C. S. கோறியா உள்நாட்டு மந்திரியாகப் பதில்க்கடமை பார்த்திருக்கிறார். திரு. J. L. கொத்தலாவலை கமத்தொழில்மந்திரியாகப் பதில்க்கடமை பார்த்திருக்கிறார். திரு. W. A. de சில்வா சட்டசபையில் 6½ வருடமும் அரசாங்க சபையிலும் அங்கத்தவராகவிருந்தும் வயதுபோனதினால் அனுபவ முடையவராயுமிருக்கிறார். ஆனால் திரு E. C. விலியேஸ் போக்குவரத்து மந்திரியாக பதில்கடமை பார்த்தபோதிலும் தெரிவுபெறுதது வருந்தத்தக்கதே. மந்திரிப்பதவியை விரும்பியிருந்தவர்களுக்குமனவருத்தமிருக்கலாம். ஆனால் அவர்களின் சாகியங்களைச்சேர்ந்த ஐரோப்பியர், பறங்கியர், தமிழர், எவருக்காவது அது பற்றி ஒருவிதமான துக்கமுங் கிடையாதென்றே கூறலாம். ஆனால் டொனமூர் திட்டத்தின் நோக்கத்துக்குச் செய்கைமுறை முழுமாருகவேயிருக்கிறது.

அரசாங்க சபை வருகிற செவ்வாய்க்கிழமை கூடும். அத்தருணம் 14 நிர்ணயங்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்படும். அரசரின் பிரிவையிட்டு அனுதாபங்காட்டும் நிர்ணயம் ஒன்றை சேர். ஜயத்திலக்கா பிரேரிப்பார். மரணதண்டனை நீக்கப்படவேண்டுமென்பதும் நிர்ணயங்களில் ஒன்றாகும். எதிர்க்கட்சித்தலைவர் டக்டர் N. M. பெரேரா அவசியமில்லா ஆரவாரஞ் செய்வதில் ஓர் பெருந் தீரனாகக் காணப்படுகிறார். இவர் தேசாதிபதி அரசாங்கசபைத் திறப்புவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவைக் கண்டித்து ஓர் நிர்ணயங் கொண்டு வருவாராம். உள்நாட்டு நிர்வாகசபைக்குத் தெரிவுபெற்றபின் அங்கத்துவம்வகிக்கமறுத்துநின்ற திரு. பிரான்சிஸ் டீ சொய்சாவைப் போக்குவரத்து நிர்வாகசபையினின்று திரும்பவும் உள்நாட்டு நிர்வாக சபைக்கு மாற்றிக்கொள்ளுவதற்குஉத்தரவளிக்கும்படி உள்நாட்டு மந்திரி ஓர் பிரேரணை கொண்டுவருவாராம். இவ்விதமாக மாற்றம் பெறுவது திரு. சொய்சா அவர்களுக்கே பெரும் வெட்கமான காரியமாகும்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 6529.

அளவெட்டி

1. வயிரமுத்து-சின்னத்துரையும்
2. பேண் அன்னம்மாவும்,

—வழக்காளிகள்.

காலஞ்சென்ற
சிற்றம்பலம்–சின்னத்தம்பி சுன்னகம்.
நியமிக்கப்பட்ட
சின்னத்தம்பி கந்தவனம் சுன்னகம்.

—எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 6529-ம் இலக்க வழக்கில் 1936-ம் ௵ பங்குனி மீ 19-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936-ம் ௵ சித்திரை மீ 18-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுன்னாகம் "மலப்புலம்" (Malappulam) பரப்பு நிலை இலாச்சம் 14¾ கும் செப்பயிர்களும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றிற்பங்கும வழக்கமான வழிவாய்க்காற்பாவிப்புரித்தும். எல்லை: கிழக்கு குமாரு வைத்தியலிங்கத்துக்கும் வடக்கு வீரப்பு இளையதம்பிக்கும் பங்காளருக்கும் மேற்கு முருகர் இளையதம்பிக்கும் தெற்கு காத்துகேசர் இளையதம்பிக்கும் உரிய ஆதனங்கள். இதிற் சொரியலாய் ⅓ பங்கு

யாழ்ப்பாணம் 1936-ம் ௵ பங்குனிமீ 20வ

C. Candiah Chettiar,
கொம்மிஷனர்.

(103) 29-3-36.


ஒருவனைக்கெடச்செய்தலும், உயரச்செய்தலும் தவவலியான் நினைத்தபோதேசெய்யமுடியும்




வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவஷூ பங்குனிமீ 'களஉ

## காங்கிரஸ்சபையும் உத்தியோக பதவிகளும்

சமீபத்தில் காங்கிரஸ் காரிய நிர்வாகசபையினரின் விசேஷ கூட்டமொன்று டெல்கி நகரில் நடத்தப்பட்டது. அச்சபையில் அநேக பிரதானமான நிர்ணயங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளுள் மிகவும் விசேஷமானது காங்கிரஸ் நிர்வாகசபையினர் மந்திரிப்பதவி முதலிய உத்தியோகங்களை ஏற்பதைக் குறித்ததுவே. அச்சபையில் பண்டிதர் ஜவஹரலால்நேரு அங்கத்தவரல்லாவிடினும் அதில் செய்யப்பட்ட தீர்மானங்கள் அவரது மனப்போக்கினைச் சாடியதாயிருப்பது பெரிதும் நோக்குத்தரத்து. காங்கிரஸ் சபையினர் தற்போது முன்னேற்றமான கொள்கைகளை அனுட்டிப்பதில் தாமதமுடையராயிருப்பதைக்கண்டு, அதைப் பொறுக்க மாட்டாராய்ஒருபகுதியினர் குரோதங்கொண்டு, அதில் நின்று விலகுவதற்கும் யோசிக்கின்றனர். இன்னொருசாரார் காங்கிரஸ் கொள்கைகள் அனுட்டானத்தில் செய்து முடிக்க வியலாதனவாய் விட்டனவென்றும், ஆகையால் அக்கொள்கைகளை மட்டுப்படுத்த வேண்டுமென்றும் மிக நெருங்கி வாதாடுகின்றனர். இவர்கள், காங்கிரஸ் சபையினர் சட்டசபைகளில் அங்கத்துவத்தைக் கைப்பற்றுவதோடு நில்லாது மந்திரிப்பதவி முதலிய உத்தியோகங்களையும் கைப்பற்றித் தேசநலத்துக்கிசைய அரசியலை நடத்தவேண்டுமென்றும், அதற்கு அரசினரால் தடைகள் ஏற்படின் புதிய அரசியற்றிட்டம் தொழிற்படாது செய்யவேண்டு மென்றும் கூறுகின்றனர். இவ்விதமாக வாதித்து நிற்பவர்கள் பிரதானமாகத் தமிழ்நாடு, ஆந்திராதேசம் முதலிய இடங்களிலுள்ள காங்கிரஸ் வாதிகளே. இவர்களை ஒருபோது பம்பாய் முதலிய சில மாகாணக் காங்கிரஸ் சபையினர்கள் ஆதரிக்கக் கூடும்.

ஆனால், புதிய அரசியற்றிட்டம் சிறிதும் ஒவ்வாததும் உதவாததுமென காங்கிரஸ் சபையினரும் மற்றும் அரசியல்வாதிகளும் பன்முறையும் நன்குவிவாதித்து விளக்கியபின், அதனை அங்கீகரிப்பது பெரிதும் விரோதமான விஷயமாகாதா? சட்டசபையில் அங்கத்துவத்தை நாடித் தேர்தலில் பங்குபற்றி நிற்பதற்கும் உத்தியோக பதவிகளை ஏற்பதற்கும் வித்தியாசமில்லை. தேசாதிபதியினதும், இராசப்பிரதிநிதியினதும் கையில் முழு அதிகாரமுமிருக்கக் காங்கிரஸ் கட்சியினர் உத்தியோகப் பதவிகளைப் பெற்று யாது நன்மையைத்தான் ஊருக்குச் செய்யக்கூடும்? டெல்லி நகரில் கூடிய காங்கிரஸ் காரிய நிர்வாகசபையினரும் மந்திரிப் பதவி முதலியனவற்றை ஏற்பதை ஆதரித்தாரில்லை. இது முற்றுகச் சரியான தீர்மானமென்பதே எமது அபிப்பிராயம். போலி அதிகாரத்தைப்பெற்று ஒன்றுஞ் செய்யவியலாது தடுமாறுவதிலும் வெளியே நிற்பதே விசேடம்.

ஆனால் மந்திரிப்பதவி முதலியவற்றை ஏற்றுப் பெரு நயத்தை நாட்டிற்குக் கூட்டிவைக்கலாமென எண்ணின், அப்படிச் செய்வதை எவருங் கண்டிக்க மாட்டார். ஒரு நன்மையும் உண்மையில் ஏற்படாதாக, அதைப் பெற்றுத்தான் என் செய்வது? ஆனால் சிலர் இன்னொருவிதமாகக் குறிப்பிடு கின்றனர். காங்கிரஸ்வாதிகள் உத்தியோகங்களை ஏற்காவிடினும், காங்கிரஸ்வாதிகளின் கொள்கையில் கூடிய அனுதாபமுள்ள வேறு கட்சியினரைப் பதவிகளைப்பெறும்படி செய்யலாகாதா வெனவும் வாதிக்கப்படுகிறது. இவ்விஷயம் பெரிதும் ஆராய்ந்து நோக்கற்பாலது. ஒவ்வொருகட்சியினரும் தந்தம் நயத்தையே அந்தரங்கத்தில் நாடியவராயிருக்கும் வரையும், அவர்களை உண்மையில் நம்புவது எப்படி? காங்கிரஸ் கட்சியினரின் உதவியைப்பெற்று அதிகாரத்தைப் பெற்றவுடன் அவர் தாம் நினைத்தபடி செய்ய ஆரம்பித்து விடுவார்களல்லவா?

இவைகள் ஒருவாறுகப் பொதுசனங்கள் பெருநன்மையை எக்கட்சியிலிருந்து பெறலாமோ அக்கட்சியையோ பெரிதும் நாடிநிற்பரென்றும் ஆகையால், காங்கிரஸ் வாதிகள் உத்தியோக பதவியைப் பெறுவதில் கருத்தில்லாவிடின் தேசமக்களின் ஆதரவைப் பெறவியலாதென்றும் கூறப்படுகிறது. உத்தியோகப் பதவிகளை நாடாது காங்கிரஸ் வாதிகள் வெளியே நிற்க, சிறுகட்சியினராகும் சுயநலவாதிகள் உட்புகுந்து தேசத்துக்குப் பெரும் ஊறுகள் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். விஷயமிவ்வாறுகச் சீவியத்துக்கு வழியின்றி அலையும் ஏழைச்சனங்களும் இவர்கள்பின் செல்ல எத்தனிப்பர். இவைகளை நோக்கியே தமிழ்நாட்டிலும் ஆந்திரதேசத்திலுமுள்ள காங்கிரஸ்வாதிகள் மந்திரிப்பதவி முதலியவற்றை கைப்பற்றுவது அவசியமென வாதிக்கின்றனர்.

எப்படியாயினும் இவ்விஷயம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மகாசபையில் விவாதிக்கப்பட்டு முடிவுசெய்யப்படுமெனச் சொல்லப்படுகின்றது. இவ்விஷயம் சாமானியமானதன்று. இந்தியமக்களின் மரியாதையையும் முன்னேற்றத்தையும் பெரிதும் பொறுத்தது. இவ்விஷயம் அங்கீகரிக்கப்படினும் பல நட்டங்கள் ஏற்படுவதாகின்றன. மறுக்கப்படினும் சில வேற்றுமைகள் கிளம்பக்கூடும். ஆனால் இந்தியா முழுவதையும் ஒருங்குநோக்கிக் கூடிய நன்மை எதனால் வாக்கூடுமோ அதையே பிரதிநிதிகள் செய்வார்களாக. ஆனால் இதுவரையும் இந்தியர் பெருமை இழுக்கடையாதிருந்து வருகின்றது. இன்னும் அவ்வாறே விஷயங்கள் கைகூடவேண்டுமென்பது எமது விருப்பம்.

காலநிலை: சென்ற 2, 3 தினங்களாக இடிமுழக்கம் மிக அதிகமாக இருக்கின்றது. இடையிடையே மழை சிறு தூறலுடன் காணப்படுகின்றது. புழுக்கமும் மிகஅதிகம்.

## மாணவருக்குப் பெரும்வசதி

இதுவரையும் இலங்கையில் லண்டன் சர்வகலாசாலையாரின் உயர்தரப்பரீட்சைகள் கொழும்பு நகரிலேயே நடத்தப்பட்டுவந்தன. அப்பரீட்சைக்குப் பற்பல மாகாணங்களிலிருந்தும் செல்லும் மாணவர்க்கு ஏற்படும் சிரமங்களும் செலவுகளும் இம்மாத்திரமன்று. சில பிரதம நகரங்களிலாவது இப்பரீட்சைகள் நடத்தப்படின் பெரு நன்மையாகுமென பன்முறையும் எடுத்துக்காட்டப்பட்டதும், அரசினரும் அவ்வேண்டுகோளுக்குச் சிறிது இணங்கியுள்ளார். சர்வகலாசாலை கீழ்வகுப்புப்பரீட்சைகள் (Intermediate Arts & Science) இனிமேல் யாழ்ப்பாணத்திலும் நடைபெறுமெனக் கூறப்படுகின்றது. லண்டன் சர்வகலாசாலையாரின் உயர்தரப் பரீட்சைகளும் (B. A. & B. Sc) மற்ற பகிரங்க பரீட்சைகளும் இங்கேயே நடத்தப்படின் மாணவர்க்கு பெருநன்மையாகும். அரசியல் விஷயத்தில் மாத்திரமன்றிக் கல்விப்பகுதியிலும் யாழ்ப்பாணம் உயர்ந்த நிலையையடைந்துளதென்பதை எவரும்மறுக்கார். ஆகையால் அரசினர் வேண்டியவேண்டிய சௌகர்யங்களை மாணக்கருக்கும் மற்றையோர்க்கும் அளிப்பதில் பின்னில்லாதிருத்தல் வேண்டும். இவ்விஷயங்கள் சாமானியமானவையாகையால் அரசினர்க்கும் இதை நிறைவேற்றுங்கால் பெருங்கஷ்டம் ஏற்படாதென்பதே எமதபிப்பிராயம்.

## அங்கும்—இங்கும்

தேர்தற் காலமும் வந்து போய்விட்டது. ஆரவாரங்களும் அடங்கின. சிற்சிலவிடங்களில் பனைகளிலும், தென்னையிலும் சில அபேட்சகர்கள் இன்னும் தொங்கவிடப்பட்டிருப்பது பரிதாபத்துக்கிடமாகின்றது. காற்று, மழை, வெய்யில் என்பன இவர்களைத் தாக்கியும் இன்னும் ஆட்டத்திலேயே நிற்கின்றனர். எல்லாம் முன் விதிப்படியாக்கும். * *

சில அரசாங்க சபையங்கத்தவர் உத்தியோகப் பதவி ஏதாவதொன்றும் கிடையாதுவிட்டதால் பெரிதும் மனஸ்தாபம் அடையலாயினர். அங்கத்துவத்தை விட்டு விலகினாலோவென்றும் யோசிக்கின்றாராம். அங்கத்துவத்தால்வரும் ஊதியத்திலும் வேறுவழியில் தாம் அதிகம் உழைத்துவிடலாமெனக் கூறுகின்றனர். அப்படியாயின் இவர்கள் முன்னரேயே முன்வாராதுவிடலாமே. அரசாங்கசபையை வியாபார ஸ்தலமாக எண்ணி மோசம்போயினர் போலும்.

* * *

ஜெர்மனியரின் யுத்த சன்னதத்தைக் கண்டு ஐரோப்பிய நாடுகள் திகிலடைகின்றன. மற்றைய வல்லரசுகள்போல் தாமும் சமத்துவமடையவேண்டுமென்பதே ஜெர்மனியரின் உள்நோக்கம். அதற்கு மற்றைய அரசினர்க்குப் பிரதானமாகப் பிரன்சியருக்கு விருப்பமின்று. என்ன செய்வது? குற்றம் செய்த அவ்வக்காலத்தில் கண்டித்தால் நன்மையேற்பட்டிருக்கும். சமாதான உடன்படிக்கையை மீறி ஜெர்மனியர் சேனைகளை முன் அதிகரித்தபோது சர்வதேச சங்கத்தினர் யாது செய்தனர். பேச்சளவில் எதிர்த்தாரேயன்றி அனுட்டானத்தில் ஏதாவது நடபடிக்கையைக் கையாண்டாரா? அன்று. அப்படி நடக்க இடங்கொடுத்தமையாலேயே ஜெர்மனியர் இப்போது மிகத் துணிவாக எந்த அநீதியையும் செய்ய முன்வந்துள்ளார். * *

இத்தாலியரும் தம்மலுவலிலேயே கண்ணாக நிற்கின்றனர் லோக்கானோ உடன்படிக்கையை மீறினது பிழையென வெளியாகக் கூறிநிற்கின்றனர். உண்மையாக அவர் விரும்புவது யாது? ஜெர்மனியர் விடாப்பிடியாக நிற்கவேண்டுமென்பதே. இதற்குக் காரணம் யாது? அப்படிச் செய்தாற்றான் அபிசீனியரைத் தாம் நினைத்தபடி நசிக்கலமென எண்ணுகின்றனர். அநீதிக்குக் கடவுள் துணையாவரோன இவர் நம்புவது எப்படி? அபிசீனியர்க்கும் உதவி எங்கிருந்தாவது வந்து சேருமே!

யாழ்ப்பாணப் பட்டின சங்கம் (U.D.C.) இனி நகரசங்கமாகத் திருத்தி அமைக்கப்படுதற்கு வேண்டிய எத்தனங்கள் செய்யப்படுகின்றனவாம். இலங்கையின் பிரதான பட்டினங்களில் ஒன்றுயிருந்தும் இன்னும் ஒரு நகரசங்கம் (Municipality) ஏற்படாதது பெருங்குறையே. யாழ்ப்பாணத்திலும்பார்க்கச் சனத்தொகையிலும், மற்றும் விஷயங்களிலும் பன்மடங்கு விசேஷம் குறைந்த காலி, கண்டி முதலிய பட்டணங்கள் நகரசங்கங்களால் பரிபாலிக்கப்பட்டுப் பல நன்மைகளையும் அடைய யாழ்ப்பாணம் கீழ்நிலையிலிருப்பதா? தண்ணீர் வசதி, சுகாதாரம் முதலியன நன்கு விருத்தியடைவதற்கு நகரசங்க அரசியலே பெரிதும் அவசியமாகும்.

## இந்தியச் செய்திகள்

### காங்கிரஸ் பிரதிநிதிகள்

இவ்வருடம் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு 700 பிரதிநிதிகளே சமுகமளிப்பாரெனச் சொல்லப்படுகிறது. காங்கிரஸ்சபையின் புதிய அமைப்புத்திட்டப்படியே பிரதிநிதிகள் தெரியப்பட்டிருக்கின்றனராம். எல்லா மாகாணங்களிலும் கூடய பிரதிநிதிகள் ஐக்கிய மாகாணத்திலிருந்தே வந்து சமுகமளிப்பராராம். அடுத்தபடியாக பிரதிநிதிகள் தொகைப்படி வரும் மாகாணங்கள் பிஹார், குஜராத், தமிழ்நாடு, ஆந்திரதேசம் என்பன, எந்த எந்த மாகாணங்களில் அநேக அங்கத்தவர் காங்கிரஸ்சபையில் அங்கத்தவராகத் தெரியப்பட்டிருக்கின்றாரோ அம் மாகாணங்களே அநேக பிரதிநிதிகளைத் தெரியும் உரிமை பெற்றுள்ளன.

### காங்கிரஸ்சபை கூடும் தினம்

அடுத்தமாதம் முதற் பதினைந்து நாளும் லட்சுமணபுரியில் மோத்திலாலநேருவின் பெயரால் அமைக்கப்பட்ட நகர் மிக ஆரவாரமாகவேயிருக்கும். ஏப்பிறில் 7-ம் 8-ம் திகதிகளில் காங்கிரஸ் காரிய நிர்வாகசபையாரின் கூட்டம் நடைபெறும். அதன்பின்னர் காங்கிரஸ் மகாசபையில் விஷயங்களை ஆலோசிப்பதற்காக அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபைக் கூட்டம் ஏப்பிறில்மாதம் 9-ம் 10-ம் 11-ம் திகதிகளில் கூடும். காங்கிரஸ் மகாசபையின் பகிரங்கக் கூட்டம் 12-ம் 13-ம் 14-ம் திகதிகளில் நடைபெறுமெனச் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் நடபடிக்கைகளைக் கண்டு களிப்பதற்குச் செல்வோர்க்கு நான்கு வகுப்புப் பிரவேசத்துண்டுகள் முறையே 500 ரூபா 100 ரூபா 50 ரூபா 10 ரூபாவுக்குக் கொடுக்கப்படுமெனவும் விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறது.

விஷயங்களை ஆலோசிக்கும் (A I C. C.) சபையில் சமுகமளிப்பவர் 10 ரூபா பிரவேசத்துண்டு பெற வேண்டுமாம்.

### பதவி யேற்பதா?

புதிய அரசியற்றிட்டப்படி அடுத்த வருடமளவில் இந்தியாவில் தேர்தல் நடத்தப்படுமாம். காங்கிரஸ்கட்சியினர் தேர்தலில் பங்குபற்றி நிற்கின்றனரென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் அத்துடன் நில்லாது மந்திரிப்பதவி முதலிய உத்தியோகங்களை ஏற்கவேண்டுமென ஒரு கட்சியினர் வாதிக்கின்றனர். தேர்தலில் சித்தியடைந்தால்மாத்திரம் போதாதாம். உத்தியோகம்பெற்றாற்றான் ஊருக்கு நன்மை செய்யலாமென்பது இவர்கள் நோக்கம். இவ்விஷயம் காங்கிரஸ் நிர்வாகசபையில் ஆலோசிக்கப்பட்டது. ஆனால் அதில் பெரும்பாலோர் இவ்விஷயம் லக்ோநகரில் கூடும் மகாசபையில் தீர்மானிக்கப்பட வேண்டுமென முடிவுசெய்தனர். ஆனால், இவ்விஷயம் இவ்வளவு அவசரமாக முடிவுசெய்யப்பட வேண்டியதில்லையென்றும், இன்னும் ஒருவருடஞ்சென்று முடிவுசெய்யலாமென்றும் அவர்கள் கூறுகின்றனர். மேலும் காங்கிரஸ் கட்சியினர் உத்தியோகம் நாடில் அதனால் எந்த எந்த மகாண அரசியலைக் கைப்பற்றலாமெனவும் ஆலோசிக்கின்றனர். விரைவில் இவ்விஷயம் முடிவுசெய்யப்படும்.

## மதிப்புரை

### "நான்கண்டதும் கேட்டதும்"

இந்நூல், மகா மகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தமது இளமைப்பராயந்தொடங்கி முதுமைப்பராயம்வரையும் கண்ணுற் கண்டனவும், காதாற் கேட்டனவுமான நிகழ்ச்சிகளைப் பன்னிரண்டு கதைகளாகத் தொகுத்து எழுதப்பெற்றது. இக்கதைகள் அவ்வக்காலங்களில் தென்னிந்தியத் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளனவேனும் தற்காலத்தினரும், பிற்காலத்தினரும் படித்துணரும் வண்ணம் ஒருங்குசேர்த்துப் புத்தகரூபமாக்கப்பட்டுள்ளது. எவரும் படித்துணரத்தக்கதாக மிக இலகுவான வசனநடையில் அமைந்துள்ளது. பிரதியொன்றின் விலை அணா 6 (சதம் 38.) விலாசம்: "தியாகராஜவிலாசம்", பிள்ளையார்கோவிற்றெரு, திருவெட்டீசுரவன்பேட்டை சென்னை.

### தமிழ்ப் பேரகராதி.

சென்னையரசினரால் இற்றைக்கு 25 வருடங்கட்குமுன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பேரகராதி ஒருபடி இப்போது பூரணமாய்விட்டது. இவ்வகராதிச் சபையின் முதல் அக்கிராசனர் கனம். G. S. சான்டலர் என்னும் அமரிக்க பாதிரியாராவர். இவர் ஆரம்பத்தில் செய்த அரிய வேலைகளே இவ்வகராதி தற்போது மிகப் பூரணமாய்முடிதற் குதவியாயது. ஆரம்பத்தில் ஒரு லட்சம் ரூபாவுடன் எழுதியச்சிடலாமென அரசினர் எண்ணினர். இப்போது இவ்வகராதியின் பொருட்டுச் செலவான பணம 410000 ரூபாவாகும். சான்டலர் துரையின்பின், அநேகர் இவ்வகராதி வேலையைத் தலைமை வகித்து நடத்தி வந்தனர். இப்போது இச்சபையின் தலைமைவகிப்பவர் ஸ்ரீமான் K. V. கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்களே அரசினர் இவ்வேலை அதிக செலவோடு கூடியதாயிருக்கக்கண்டதும் அதை சர்வகலாசாலையாரிடம் ஒப்புவித்துவிட்டனர். இப்போது சர்வகலாசாலையினர் தமது வருமானத்தில் சேமஞ்செய்தே இவ்வேலைக்குச் செலவுசெய்து வந்தனர். அதிக பணம் செலவிடவேண்டியதாகுமோவென அஞ்சி ஒருமுறை இவ்வகராதி வேலையை இடையில் நிற்பாட்டுவதைக் குறித்து ஆலோசனையும் நடந்தது. ஆனால் ஆரம்பித்துப் பெரும்பணம் செலவுசெய்துவிட்டுப் பின் இடையில் கைவிடுவதாயின் பெருநட்டமாகுமென வெண்ணி சர்வகலாசாலை நிர்வாக சபையினர் எப்படியாயினும் இவ்வேலையைப் பூர்த்திசெய்ய முற்பட்டனர், இருபத்தைந்து வருடமாக ஆரம்பித்த அரிய வேலை முடிவெய்தியது தமிழ்நாட்டிற்குப் பெரும் பேறேயாகும். இவ்வகராதியில் ஒரு லட்சம் தமிழ்ச்சொற்கள் உளதாகும். தமிழ்ப்பாஷைக்கு இவ்வகராதி பெரிய பேறேயாகும். இவ்வரியவேலை பூர்த்தியானதைக் குறித்து ஒரு கொண்டாட்டம் சமீபத்தில் சென்னையில் கொண்டாடப் பட்டது. அப்போது இவ்வகராதியின் வைபவம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப் பட்டது. அகராதி வேலையில் இடைவிடாது சேர்ந்து உழைத்து வந்த வித்துவான் மு. இராகவையங்கார், வையாபுரிப்பிள்ளை என்பவர்களுக்கு தமிழ் நாடு என்றும் கடமைப்பட்டுளது.

### இலங்கைக்கு ஆகாயத் தபால்

அடுத்த ஜூன்மாதம் தொடக்கமாகக் கொழும்புக்கும் சென்னபட்டினத்துக்குமிடையில் ஆகாயக்கப்பல் போக்குவரத்து ஒழுங்காக ஏற்படுமெனச்சொல்லப்படுகிறது. இவ்விஷயமாக இலங்கை அரசினர் றற்று கம்பனியாருடன் வேண்டிய உடன்படிக்கைகள்செய்கின்றனர். இலங்கையரசினர் முதலாவதாகச் சிலவருடங்கட்குஒரு தொகை ரூபா இனமாக அளிக்கவேண்டுமென மேற்படி கம்பனியார் கேட்கின்றனர். போதிய தபால்கள் ஆரம்பத்தில் கிடையாவிடின் பெருநட்டம் ஏற்படுமென்றும் அந்நட்டத்தை இலங்கையரசினரே பொறுக்கவேண்டுமென்பதுமே அதன்கருத்தாகும். மேலும் இலங்கையில் ஆகாயக் கப்பல் விஷயத்தில் சனங்களுக்கிடையில் அக்கறையுண்டாகச் செய்வதற்காக அரசினர் இருவிமானங்கள் விலைக்குப்பெறுவதற்கும் பணங்கொடுப்பாரென்றும் எதிர்பார்க்கப் படுகின்றது அன்றியும் ஆகாயக்கப்பல் தங்கும்மண்டபமும் அரசினரால் றற்மலனைவில் அமைக்கப்படுமாம்.

# அபிசீனிய மகாயுத்தம்

## அபிசீனிய யுத்தவீரனின் அருந்தப்பு

## ஆகாயப்படையில் இத்தாலியர்க்கு நம்பிக்கை

இத்தாலியர் எடுத்துக்காட்டிய திட்டங்களை அபிசீனியர் அங்கீகரியாதிருக்கும்வரையும் தாம் யுத்தத்தை நிற்பாட்ட வியலாதென முசோலினி கூறுகின்றார். வடக்குப் போர்முனையில் இத்தாலியரே முன்னேறுகின்றனராம். ஜெர்மனியருக்கும் பிரான்சியருக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கு முடிவுக்கு வருவதை இத்தாலியர் விரும்பவில்லை. அது நெருக்கடியாக விருந்தாற்றான் அபிசீனியரைத் தாம் நினைத்தபடி செய்விக்கலாமென இத்தாலியர் எண்ணுகின்றனர்.

தெற்குப் போர்முனையில் இத்தாலிய விமானங்கள் ஜிக்காவென்னும் நகரத்தின்மீது இடைவிடாது குண்டு போடுகின்றனவாம். இவ்வாறு செய்வதற்குக் காரணமுண்டு. பிறிட்டிஷ் சோமாலிலந்து மூலமாகப் புகைரதமார்க்கமாய் யுத்த தளபாடங்கள் அபிசீனியாவுக்குள் கொண்டுவருவது குண்டுகள் போடுவதால் தடைப்படுமென இத்தாலியர் எண்ணுகின்றனர். இந்நகரத்தில் ஓர் மாளிகையில் ராஞ் நாசிபு என்ற சேனைத் தலைவர் வாழ்ந்துவந்தனர். இவர் காத்திராப் பிரகாரமாய்த் தமது அரண்மனையை விட்டு வெளியேறிய சில நிமிடத்துள் விமானங்கள் போட்ட குண்டுகள் வீட்டில் விழுந்து பெருஞ்சேதத்தை விளைத்தனவாம். அவர் அங்கிருந்தால் அப்போது உயிர் துறந்திருப்பார். ஜிக்கா நகரம் இப்போது பாழடைந்த ஊராகக் காணப்படுகிறது.

நச்சுப்புகையை இத்தாலியர் உபயோகிக்கிறதைக் குறித்தும் அபிசீனிய அரசர் சர்வதேச சங்கத்தினர்க்கு அறிவித்துள்ளார். இதுவிஷயமாகத்தானும் அச்சங்கம் நடபடிக்கைகளைக் கையாளவில்லை.

தெற்குப் போர்முனையில் இத்தாலியர் ஒக்டன்மாகாணத்தில் அதிகம் முன்னேறியுளதாகவும், அவர்கள் சசபனு, கபற்று என்னுமிடங்களைக் கைப்பற்றியுளதாகவுங் கூறப்படுகிறது. இத்தாலிய சேனாதிபதியாகும் பாடகிளியோ தமது வெற்றியில் பெரிதும் நம்பிக்கை யுடையவராகவும் காணப்படுகின்றார்.

இத்தாலியர் தமது ஆகாயப் படையிலேயே பெரிதும் தங்கியிருப்பதாகக் கூறுகின்றனர். அபிசீனியாவில் மாத்திரமன்று மத்தித்தரைக் கடலிலும் இத்தாலிய விமானங்கள் மிகவும ஆதிக்கமுடையனவாம், 30 அந்தர் நிறையளவுக்குக் குண்டுகளை மத்தித்தரைக்கடலில் எவ்விடத்துக்கும் கொண்டுபோகக்கூடிய அனேக விமானங்கள் இத்தாலியரிடமுண்டு. புதிதாக இத்தாலியரால் அமைக்கப்பட்ட விமானங்கள் 6 யந்திரப்பீரங்கிகளைக் கொண்டுசெல்லக்கூடியனவாம். இத்தாலிய யுத்தம் ஆரம்பித்தபின் எறித்திரியாவில் 25 விமானங்களையும் இத்தாலிய சோமாலிலாந்து தேசத்தில் 54 விமானங்களும் புதிதாக அமைக்கப்பட்டன.

### அனுராதபுரத்தில் கொள்ளை நோய்

அனுராதபுரத்தில் கொள்ளை நோய் ஏற்பட்டமையால் பெருங்கவலை ஏற்படலாயிற்று. எல்லா வீடுகளிலும் பொறிகள் ஏற்றி எலிகள் அகப்படுத்தப்படுகின்றன. கொள்ளைநோய் ஏற்பட்ட இடங்களிலுள்ள வீடுகளெல்லாம் வெறுமையாக்கப்பட்டிருக்கின்றன. வெளியான இடங்களில் இல்லங்கள் அமைக்கப்பட்டு அவைகளில் சனங்கள் வசிக்க வயதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கடைகளிலுள்ள பொருட்கள் யாவும் உபயோகிக்கப்படாது அகற்றப்பட்டன. புதியகடைகள் ஏற்படுத்தப்பட்டு சனங்கள் தமக்குவேண்டியன பெறும்படி சகலவயதிகளும் அரசினர் அளித்துள்ளார்.

சுகாதாரப்பகுதி உதவி வைத்தியத் தலைவராகும் Dr. S. F. செல்லப்பா அவர்கள் இவ்விடத்துக்கு வந்து சுகாதார முறைகளைக் கையாளும்படி செய்கின்றனர். இதுவரையில் இறந்தோர்தொகை மூன்றேயாகும். இந்நோயால் இதுவரையில் பீடிக்கப்பட்டோர் தொகை 130 பேராகும்.

## மதிப்புரை

### நாட்டுச்சீவன சாஸ்திர பாடபுத்தகம்

கலைமகள் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாய் ஆனந்த விருத்தாந்தம் செய்யுமிக்காலத்திலே இத்தேசத்திலே அரசாங்க வித்துவ கோஷ்டியார் "புதியன புகுதலும்" என்னுந் தந்திர விதிக்கேற்ப வித்தியார்த்திகள் நாட்டுச்சீவன சாஸ்திரத்திலும் தேர்ந்த விற்பன்னராகும் பொருட்டுப் பிரமாணந் தந்தனர். பிள்ளையானவன் தன்னைச் சூழவுள்ளவற்றினதும் தாவர பிராணி வர்க்கங்களினதும் அமைப்பு, தொழில், விருத்தி, ஏற்ற சுவாத்தியம் முதலியவற்றை யவதானித்து ஆராய்ந்து அமைவாக் கொள்ளுமாறு பிரமாணவிரிவு மேற்படுத்தினர். தேனீ மலர்தோறுஞ் சென்று தேனைச் சேர்ப்பதுபோல, ஆசிரியர் இ. தர்மலிங்கமவர்களும் நூல் தோறுஞ் சென்று இனிதினோக்கி யாராய்ந்து வேண்டியவற்றைச் சேர்த்து மாணுக்கனுக்குச் சுலபமாக அறிவூட்டுவான் விரும்பித் தெள்ளிய சாதாரண நடையில் இந்நூலையாக்கினர். இதனாலிதுவரையும் ஆசிரியர்க்கும் மாணுக்கர்க்கு மிருந்த கஷ்டம் நீங்கியதென்க. கல்வியுலகிதனை யுவந்தேற்று ஆக்கியோனைத் தைரியப்படுத்து மென்பதே யெமது நம்பிக்கை.

மாவிட்டபுரம்
13—3—36

கா. இளையதம்பி
ஆசிரியர்.

### கடிதம்

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு:

அன்புமிக்குடையீர்!

தங்கள் 'ஈழகேசரி' வெளியீடு 23—2—36—ல் வெளியிட்ட 'மலாயன் ஊரெழு சேவைச் சங்கம், குவாலலம்பூர்' என்னும் விஷயத்தைக் கண்ணுற்றுக் களிபேருவகை கொண்டேம். இச்சங்கம் பூரண ஆயுளுடனும் 'ஒற்றுமை பெலம்' என்னும் அசையா உறுதியுடனும் மலாயனில் வசிக்கும் ஊரெழு வாசிகள் யாவரும் வேற்றுமையின்றிப் பரிசுத்தமான மனப்பான்மையுடன் ஸ்ரீ கணேச வித்தியாசாலையின் கலா அபிவிர்த்திக்கும் கிராம முன்னேற்றத்திற்கும் சலியா உழைப்புடன் சீரிய முறையில் உயர்ந்த நோக்குடன் உழைத்துவருகின்றார்கள்.

இங்ஙனமாக, ஊரெழுவில் வசிக்கும் மக்கள் கட்சிபேதங்கொண்டு இரு பிரிவினராகிப் புரியுஞ் செயல்கள் யாவரும் வெறுப்பதுமன்றி இறுதிப் பயன் வித்தியாசாலைக்கும் கேடுவருமென்பதை எண்ணாது, அல்லோலகல்லோலஞ் செய்கின்றார்கள். இவர்களின் தன்மையைக் கேள்வியுற்று இச்சங்கத்திலுள்ளோர் மனம்புண்ணாகி விடாமுயற்சியுடன் நாலுநாட்களாகக்கூட்டங்கூடிவெளியீடொன்றை வெளியிட்டிருக்கிறார்கள். (வெளியீடு நம்பர் இத்துடன் அணைத்திருப்பது.)

பத்திராதிபர் அவர்களே! தாங்கள் இதுபோன்றவிஷயங்களை இக்காலத்தில் அநேகம் பார்த்து அலுப்புற்றிருப்பீர்கள். இருப்பினும் அந்நிய நாட்டில் வதியும் ஊரெழுவாசிகள் ஒற்றுமையுடன் ஓர் சங்கத்தை நிறுவி இத்தகைய தொண்டு இயற்றுகின்றார்களேயென்ற அரிய செயலை கைக்கொள்ளாது "கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும்முன்னே" என்றபடி மதிகெட்டு இருக்கின்றார்கள். என்னே இவர்கள் மதியீனம்! இவர்களின் நோக்கந்தான் யாதோ.

பண்டைக்காலத்தில் கவிவாணர்களும் கொடும்போர் புரியும் சக்கிரவர்த்திகளை ஒற்றுமையாக்கிச் சமாதானமடையச் செய்திருப்பதைப் பலபுலவர்கள் சரித்திரமூலமாக அறியக்கிடக்கின்றது. 'ஈழகேசரி' வெளியீட்டின் மூலமாகவும் தாங்கள் வெளியிடுவதையறிந்து இறும்பூதெய்துகின்றோம். ஆகையால் பத்திராதிபர் அவர்களே! ஊரெழுவாசிகளின் சமாதானத்திற்கு நீவிர் ஓர் தகுந்த முறையை உபயோகிக்கமாட்டீர்களா? இவர்களின் நோக்கந்தான் யாதென அறிந்து தகுந்த நீதி புகட்டுவீராக. உங்கள் புத்திக்கு யுத்தமாகத் தோன்றியமுறையில் சமாதானத்தை நிலைநாட்ட உங்கள் உதவியைப் பெரிதும் நாடி நிற்கின்றார்கள்.

தங்கள் பணிவுள்ள
கு. வேலுப்பிள்ளை.
(குவாலாலம்பூர்)

### நொத்தாரிஸ் பிரவேச பரீட்சை

தமிழ்மொழியிலேனும் சிங்கள பாஷையிலேனும் பிரசித்த நொத்தாரிஸ் பரீட்சை வகுப்பிற் பிரவேசிக்க விரும்புவோர் பொருட்டு, ஒரு பிரவேசப் பரீட்சை, இலங்கை வித்தியாபகுதியாரால், கொழும்புக் கொம்பனித் தெருவில் (Slave Island) உள்ள அரசினர் துவிபாஷாவித்தியாசாலையில் 1936ம் ஆண்டு டிசெம்பர்மீ 1உ தொடக்கம் சில தினங்கட்கு நடத்தப்படுமெனச் சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த அரசினர் "கஜற்" வெளியீட்டில் வெளியிடப்பட்டிருக்கின்றது. இன்னும் இப்பரீட்சை விஷயமாகவுள்ள விதானங்களையும் விபரங்களையும் குறித்த கஜற் பத்திரிகையிற் பார்த்துக் கொள்ளலாகும்.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு

## பிணமாகக் காணப்பட்ட அன்னப்பிள்ளை

### 1-ம் எதிரிக்கு 10 வருடக் கடூழியச்சிறை

யாழ்ப்பாணம் 24.

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் நீதியரசர் திரு. M. T. அக்பார் அவர்களதும் ஆங்கிலம் பேசும் ஜுரிக் கனவான்களதும் முன்பாகச் சென்ற செப்டெம்பர் மாதம் 15-ந் திகதியளவில் பொன்னுத்துரை பெண் அன்னப்பிள்ளை என்பவளது மரணத்தை உண்டாக்கியதாக 1. சூரன்-அருணி 2. குமாரசாமி முதலிய இருவர்கள் மீதும் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. ஹூயிசும் எதிரியின் சார்பாக நியாயவாதி C. C. சபாரெத்தினமும் விவாதித்தார்கள்.

விசாரணையின் போது தம்பையா பெண் செல்லமுத்து என்பவள் கூறியவற்றின் சாராம்சம்வருமாறு:—

"கொலையுண்ட அன்னப்பிள்ளையை எனக்குத் தெரியும். அவள் இருப்பது ஒழுங்கையில் எனது வீட்டிற்குப் பக்கமாகவேயிருந்தவள். சம்பவம் நடைபெற்றவன்று எனது வீட்டிற்கு வந்தாள். அப்போது அருணியினுடைய மனைவியும் நின்றாள். பின்னர் அருணியும் வந்தான். அன்னப்பிள்ளையினது கழுத்தில் 100 ரூபா பெறுமதியான தாலிக்கொடியிருந்தது. ஆனால் அவள் பிணமாகக் கிடந்தபோது அது காணப்படவில்லை. காலஞ் சென்றவள் அன்றைய இரவில் வீட்டிற்கு விளக்கேற்றினாள். அப்போது தான் அவளைக் கடைசியாகக் கண்டேன். அடுத்த நாள் எதிரி அவளது வீட்டில் இளநீர் குடிக்கக் கண்டேன். நான் முகங் கழுவப் போனபோது எழுப்ப முபற்சிக்கையில் பிணமாகக் காணப்பட்டாள். உடனே கத்தினேன்.

பின்னர் நன்னிமார்க்கண்டு, அப்புக்குட்டி, வைத்திலிங்கம் முதலியோர் சாட்சியம்கூறியதின்மேல் ஜுரிமார்கள் 1-ம் எதிரி கொலைக்குற்றமல்லா தகைபிழைபாட்டுக் குற்றத்திற்குக் குற்றவாளியெனவும் 2-ம் எதிரி நிரபாரதியெனவும் அபிப்பிராயம் தெரிவித்ததின்மேல் நீதியரசர் 1-ம் எதிரிக்கு 10 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

## அல்லாரை சுப்பன் சின்னவன் கொலைவழக்கு

### விசாரணை நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம் 27

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் நீதியரசர் திரு M. T. அக்பார் அவர்களதும் திரு இராசரத்தினம் அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஆங்கிலம் பேசும் ஜுரிக் கனவான்கள் முன்பாகவும் சாவகச்சேரியைச் சேர்ந்த அல்லாரை என்னுமிடத்தில் கடந்த அக்டோபர்மாதம் 28ந் திகதியளவில் சுப்பன் சின்னவன் என்பவனைக் கொலைசெய்ததாக வல்லி சுப்பன் அல்லது சின்னத்தம்பி என்பவன்மீது தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

முடிக்குரிய நியாயவதி திரு. ஹூஸ் வழக்கை நடாத்த நியாயவாதி S. D. தபபு எதிரிக்காக விவாதித்தார்

### வழக்கின் வரலாறு.

சம்பவம் நடைபெற்றவன்று காலஞ் சென்றவரும் எதிரியும் அல்லாரைக் கள்ளுத்தவறணையில் குடிவெறி மிகுதியினால் பேச்சுப்பட்டுக் காலஞ் சென்றவன் எதிரியைத்தாக்க எத்தனிக்கையில் கள்ளு வியாபாரி கூழையன் எதிரியை நீ போ என அனுப்பிவிட்டான். இருவரும் ஓர் வளவிலேயே குடியிருப்பவர்கள். காலஞ் சென்றவன் பின்னரும் குடித்துவிட்டு வீட்டுக்குப் போனபோது இருவரும் பேச்சுப்பட்டு அடிபட்டதாகவும் இருபகுதிக்கும் ஆட்கள் சேர்ந்து அடிபட்டபோது எதிரி காலஞ் சென்றவரைக் குத்தியதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் எதிரிக்கும் தலையிலும் கையிலும் காயங்கள் காணப்பட்டதாம்.

சின்னப்பொடியன் சுப்பன், சுப்பன் அப்புக்குட்டி, சுப்பன் பெண் சின்னப்பிள்ளை முதலியோர்களை விசாரணை செய்யப்பட்டது.

வழக்கு நடைபெறுகின்றது.

நமது நிருபர்

## ஜெர்மனியரின் ஆவேசம்

லொக்கார்னோவில் செய்த உடன்படிக்கைக்கு மாறாக ஜெர்மனியர் றைன்லந்து பிரதேசத்தில் சேனைகளைக் கொண்டுசென்று நிறுத்தினதன் பயனாக ஏற்பட்ட சங்கடங்கள் இன்னும் முற்றடையவில்லை. பிரான்சியர் ருஷியருடன் செய்த உடன்படிக்கை லொக்கார்னோ உடன்படிக்கைக்கு மாறானதென்றும் அவ்வுடன்படிக்கைநிராகரிக்கப்படும்வரையும் தாம் சேனையை நிறுத்திநிற்பது நிச்சயமென்றும் கூறுகின்றனர்.

சமீபத்தில் லண்டன் நகரில் லொக்கார்னோ அரசுகள் செய்த தீர்மானப்படி இவ்விஷயம் (ருஷிய-பிரான்சிய உடன்படிக்கை) ஹேக் நகரிலுள்ள உயர்தர நீதிமன்றத்தில் விவாதித்து முடிவுசெய்யப்படவேண்டுமெனவும்; அதுவரையும் ஜெர்மனியர் தமது படைகளை அகற்றிவிடவேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இப்போது ஜெர்மனியர் தாம் படைகளை அகற்றவியலாதெனத் திடமாகக் கூறுகின்றனர். சமீபத்தில் ஜெர்மனியில் ஹிற்லர் சொன்னதாவது:-

"இரும்புபோன்ற திடமான நெஞ்சுடைய நாங்கள் மற்றைய வல்லரசினரால் அவமானப்படுத்தப்பட இடங்கொடுக்கமாட்டோம். லொக்கார்னோ விஷயமாக லண்டன் நகரில் செய்த தீர்மானங்களை நாங்கள் முற்றாக ஏற்கவில்லை இப்போது சமாதானத்துக்கு மாறாக நிற்பவர் ருஷியரே. அவர்களாற்றான் எல்லாச் சங்கடங்களும் ஏற்படுகின்றன. ஜெர்மனியர் இவ்விதமான நீதியீனமான கேள்விகட்கு எப்படி இடங்கொடுப்பது? ஒருவரிருவரல்ல; ஜெர்மனியரெல்லோரும் வல்லரசினரின் கோரிக்கைகளை முற்றாக எதிர்க்கின்றனர். ஜெர்மனியர் மற்றைய ஐரோப்பிய அரசினர்போல் எல்லா விஷயங்களிலும் சமத்துவமான உரிமைகளைப் பெறவேண்டும். பாரபட்சமாக நடப்பதை நாம் எப்படி ஆதரிப்போம்."

இப்போது ஜெர்மனியில் பிரதிநிதிகள் தெரிவு நடப்பதாகவும் அதன்பின்பே விரிவான விடை அனுப்புவதாகவும் ஹிற்லர் கூறுகின்றனர்.

ஜெர்மனியரின் பதிலைக்கண்டு பிரிட்டிஷார் பெரிதும் ஆச்சரியமடைகின்றனர். பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாராகும் அன்ரோனிஈடன் இப்போது சிலவிஷயங்கள் வெளியிட்டுள்ளார். என்ன சம்பவிக்கினும் எக்கஷ்டங்கள் நேரினும் தாம் லொக்கார்னோவல்லரசுகளுடன் சேர்ந்து நின்று உடன்படிக்கையைப் பாதுகாப்பதாகக் கூறுகின்றனர். அதாவது பிரிட்டிஷார் பிரான்ஸியர், பெல்ஜியருடன் தாம் கடைசிவரையும் சேர்ந்து நிற்பதாகக் கூறினர்.

சமாதான உடன்படிக்கைகளைப்பற்றி ஹிறலர் கூறும் அபிப்பிராயம் மிகவும் துக்கத்துக்கு இடமாகின்றது. ஹிற்லர் சொல்வதாவது:-உடன்படிக்கைகளை நாம் சரியென்று அறிந்தபடியே விளங்குவோம். மற்றையோர் சொவ்வதை நாம் எப்படி அங்கீகரிப்போம். இவ்வாறு இவர் கூறுவதைப்பலர் கண்டிக்கின்றனர். தாம் நினைத்தபடி உடன்படிக்கைக்குக் கருத்துக் கூறுவதாயின் அது எப்படி நீதியாகும்.

ஹிற்லர் இப்போது கையாளும்முறையை லொயிட் ஜோர்ஜ் மிகவும் கண்டிக்கிறார். தீவர்த்தியைக் கையில் கொண்டு ஹிற்லர் வெடிமருந்து வைத்திருக்கும் வீட்டுக்குள் செல்வது பெரும் கெடுதியை விளைக்கும். யுத்தம் ஏற்படின் கோடிக்கணக்கான உயிர்கள் மடிய நேரிடும்.

வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர் கழகத்தினர்

நிகழும் யுவ ஆண்டு பங்குனித் திங்கள் ரு-ம் நாள் (17-3-36)

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில்

மேலை வேலணை ஆசிரியர்

## திருவாளர் சே. க. சண்முகம்பிள்ளை அவர்கள்

ஆசிரியர்அலுவலில்நீங்கி அரசியலெழுத்தாளராகப்போதல் குறித்துக் கூடிய

பிரியாவிடைக் கூட்டத்தில் சொல்லிய

## பிரியாவிடை வாழ்த்துப்பாக்கள்

நந்தா வொளிசேர் நற்றமிழை நன்காய்ந் துளம்நனி சிறந்து
நன்றே யெமக்கு நயந்தளிக்கும் நலம்சேர் எங்கள் நற்றவமே
சிந்தா மணியே செம்மைமலி திருவேயின்பச் செழுங் கனியே
சிறந்தே யாங்கள் நலமடையச் சிந்தை யுவக்கும் செம்பொருளே
கொந்தார் குவளைப் பூங்கொடையாய் கோதில் அமுதே குலவிளக்கே
குறைவு தவிர்ந்த வறம்புணருங் கோனே யன்பின் கொள்கலமே
சிந்தார் செய்ய திரு முடிகொள் சிவனார்க் கன்பா சென்றுவருக
திருவார் சண்முக பிள்ளையெனும் செம்பெயர்ச் செல்வா சென்றுவருக 1

தேனூற்றும் செந்தமிழும் ஆங்கிலமு முணர்ந்த பெருந்திருவே சென்றுவருக
செம்மைதவழுளமுடையார் சிந்தைகொளும் செழுந்தேறற்பாகே சென்று
வானூற்ற வளங்கெழுமு மேலைவே லணையிலருள் வாழ்வே சென்றுவருக [வருக
வண்மைதவழ் பெருங்குடியின் சீர்தந்த வளர்மதி யேர்மன்னுசென்றுவருக
கானூற்றுந் திருமூலர் பொருட்பாட்டிற் கனிந்த குளக்கன்றே சென்றுவருக
காண்டரிய வானநூற் புலமைசேர் நலம்படைத்த கண்ணே சென்றுவருக
ஆனூற்றும் நறும்பாலும் ஆலையூற்றும் நேருமின்சொல் அரசே சென்றுவருக
அடிபோங்க ளகவிருளி ரியவறிவொ ளியளித்த செங்கதிரே சென்றுவருக 2

வருகவெங்கள் வாழ்க்கைநெறி வண்மை மலிந்து வளஞ் சுரக்க
வருகசெந்தாமரை யாளும்மடி மீதிருத்தி வாழ்த் தெடுக்க
வருகவான்றோய் புகழ்பரப்பி மன்னுமன் பால்யாம் வாழ்த்த
வருகமேலை வேலணையோர் மகிழ்ந்து தூக்கி மார்பணைக்க
வருகவுன்றன் றனையு ணர்ந்தோர் மலர்தூய் நின்று வரவேற்க
வருக அந்நா ளெங்களுளம் மகிழ்ச்சி வரையின் முடியிருப்ப
வருக செய்யமுகம் மலர்ந்து மன்னுநெறி களெமக் குரைக்க
வருக செம்மைக் குணக்குன்றே மணியே சென்றுவருகவே. 3

தண்ணுருளமும் பெருந்தகையும் தரித்தோய் வருக சால்பொருண்மை
தழைத்த வாழ்க்கைத் துறைநுழையுந் தக்கோய் வருக சார்ந்தவெமக்
குண்ணு ரமுதே யொளியுறையே உயிரே வருக உறவினர்கள்
உவகைக் கடலின் துறைமூழ்க வுய்த்தோய் வருக வொப்பில்லா
அண்ணு வருக அலுவலிற் சோர்ந்தே வருக வலையாவுள
மமைந்தோய் வருக அரசியலார் அளிநன் கடைந்தே வருகவரும்
கண்ணுர் பொருட்கலை யேவருக கடவுண் நெறிதோய் கனிந்தவுளக்
களிறே வருக வெங்களையுங் காணச் சென்று வருகவே. 4

வருக வன்பர் மகிழ்சிறந்து வாழ்த்தித் தூக்கி மடியிருத்த
வருக வுங்கள் குணச்செவ்வி வான்போற் சென்று மழைபொழிய
வருக வுங்க ளுடன்பயின்றூர் வழியில் நின்று வரவேற்க
வருக வுங்கள் பிரிவினால் வருந்தும் யாங்கள் மகிழ்வடைய
வருக பெரிதும் நலங்கெழுமி மன்னு நிறைமை வழிசிறக்க
வருக அறிஞர் உவந்தளித்த மாண்பு தவழும் மணிகளுடன்
வருக வந்நாள் வாழ்த்தியாம் நிறைகுடம் வைத்துவர வேற்பேம்
வருக வெங்கள் உளமகலா வாழ்வே சென்று வருகவே. 5

(101) 29-3-36—1.

## யாழ்ப்பாணத்துக்குப் புதிய பொலிஸ் நீதிபதி

காலியில் அப்புக்காத்தாகவிருந்த திரு. வீ. எஸ். ஜெயவிக்கிரம அவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதியாக நியமனம்பெற்றிருக்கிறார். இவர் சென்ற சனிக்கிழமை (28-3-36) காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துவிட்டார். இதுவரையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதியாகக் கடமைபார்த்த திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் ஊவாமாகாண அரசியல் உதவித் தலைவராக வதுளைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

## சிறையாளர்க்கு லீவுவசதிகள்

சிறையாளர் சுகவீனம்கண்டிருந்தால் அச்சுகவீனம் அவர்களது இனத்தவர் மத்தியில் மாறும் எனக் காணப்பட்டால், அவர்கட்கு (சிறையாளர்க்கு)ச் சொற்பகால லீவு கொடுத்தல் வேண்டும். லீவுக் காலம் முடிந்ததும் அவர்கள் மீண்டும் சிறைக்கு வரல் வேண்டும் எனச் சிறையாளரைப் பராமரிப்பது சம்பந்தமான விசாரணை புரிந்த பிரிட்டிஷ் சபையினர் தமது அறிக்கையிற் சிபாரிசு செய்கின்றனர். இன்னும் தமது சுற்றத்தவர்கள் மத்தியில் நிகழும் சுப அசுப தினங்களுக்குச் சிறையாளர் போக லீவு அளிக்க வேண்டுமெனவும் ஷெ சபை அறிவித்திருக்கிறது. இச் சிபாரிசுகளைப் பிரிட்டிஷ் அரசினர் அங்கீகரித்திருக்கின்றனர்.

## தேகவியோகம்

சென்ற 23-ந் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில், மல்லாகம் வாசரும் இரங்கோன் இம்பீரியல் வங்கிச் சிறுப்பராகவும், பிரபல மரத்தொழிற்சாலை அதிபராகவுமிருந்த திரு. ந. அப்பாசிப்பிள்ளை அவர்களின் புதல்வியும், உடுவில் பிரபல நொத்தாரிஸ் திரு. சபாபதிப்பிள்ளையின் புதல்வனும் பிரபல வழக்கறிஞருமாகிய திரு. கனகசபாபதி அவர்களின் பிரியபத்தினியுமாகிய ஸ்ரீமதி தனலக்ஷிமி அம்மையார் அவர்கள் தமது 24-வது வயசில் காத்திராதுண்டான நோய்காரணமாகத் தேகவியோக மடைந்தமை கேட்டுத் துயருறலானேம். இவருக்கு மூன்று ஆண்மக்களும் ஓர் பெண்மகவும் உண்டு. இவரது பிரிவாற் றுயருறுவார்க்கு எமது அனுதாபமுரியதாகுக. ப-ர்.

## 4 கோடியே 30 லட்சம் வெள்ளி.

அமெரிக்காவில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்குச் சேத நிவாரணத்தின் பொருட்டு அமெரிக்க பிரஜாதிபதியான மிஸ்ரர் றூஸ்வெல்ற் 4 கோடியே 30 லட்சம் வெள்ளி செலவிட அனுமதித்திருக்கிறார். இவ்வெள்ளப் பெருக்கினால் எல்லாமாக இன்றைவரை 168 பேர் இறந்துவிட்டனர் என்று தெரிகிறது.

# கலம்பகம்

கல்வியறிவில்லாதவர்களும், அரசியலனுபவமற்றவர்களும், சமயவிஷயங்களில் அபிப்பிராய பேதமும் நிறைந்த சனங்களிடையே 21 வயதின் மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை யளிக்கப்பட்டதானது, ஐந்துவருடங்களின்முன் இலங்கையில் அனுசாணைக்கு வந்த அரசியற் சீர்திருத்தத்தின் மிகத் துணிவான பரீட்சையாகும் என லண்டன் "ரைம்ஸ்" பத்திரிகை எழுதியிருக்கிறதாம். o o

முக்கால்அணுவிகிதத்திலிருந்த போஸ்ற்கார்ட்டை அரையணுவாகக் குறைக்க வேண்டுமென்றும், றிப்பிளைக்கார்ட்டுகளை ஒரு அணுவாக்க வேண்டுமென்றும் இந்தியசட்டசபையிற் கொண்டு வந்த பிரேரணை நிறைவேறியிருக்கிறதாம்.

o o o

மேனுட்டிற் செய்யப்பட்டு இலங்கையில் விற்பனையாகும் "சிடர்" என்னும் மதுபானத்தைப்போன்ற பானத்தைத் தென்னங்கள்ளிலிருந்து செய்யும்முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கரையூரில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை என்பவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பிரயாணச் சீட்டின்றிப் புகைரதத்திற் பிரயாணஞ் செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 10 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம். o o

கண்டியில் நடைபெற்ற சுப்பிறீங்கோட்டு விசாரணைக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்ட திரு. பிலிப் டி சில்வா என்ற யூரி குறித்த தினத்தில் அங்கு சமுகமளிக்காமையால் 50 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o o

கம்பளை வைத்தியசாலைக்குப் பால்விற்பனை செய்யும் ஒருவர் குஷ்டரோகிகள் வாசஞ்செய்யும் ஒரு வீட்டின் அறையில் பாலைச்சேகரித்து வைத்திருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 150 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o o

லூக்காஸ் பெர்னண்டோ என்பவனும் அவனது சகோதரனும் சேர்ந்து களுத்துறைக்குச் சமீபமாகவுள்ள மகல்கந்தை என்னுமிடத்தில் ரியூபன் என்பவனைக் கொலைசெய்ய எத்தனித்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டு முதலாமெதிரிக்கு 2 வருடக் கடுங்காவற் றண்டனையும் 2-ம் எதிரிக்கு 6 பிரம்படியும் விதிக்கப்பெற்றார்களாம். இத்துடன் 2-ம் எதிரி மக்கோனவிலுள்ள இளம் குற்றவாளிகள் பள்ளிக்கூடத்தில் 2 வருடம் இருக்கவேண்டுமாம். o o

உடுபுசாலாவையைச்சேர்ந்த டெல்மார் தோட்டத்தில் வேலு என்னும் ஒருவன் தனது மனைவியைக் கத்தியால் குத்திவிட்டுத் தானும் தனது வயிற்றில் குத்திக் காயப்படுத்திவிட்டான். காயமடைந்த பெண் வைத்தியசாலையில் உயிர்துறந்தாள். வேலு ஆபத்தானநிலைமையிலிருக்கிறானும்.

o o o

வல்லுவெட்டியைச்சேர்ந்த சபாபதிப்பிள்ளை என்பவர் அரைறாத்தல் அபினைச் சட்டவிரோதமாக வைத்திருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 100 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o o

சென்ற செவ்வாய்க்கிழமை காலை அவிசாவலைப் புகைரதப் பாதையில் தண்டவாளத்தின் மீது குறுக்கே ஒரு இரும்புத்துண்டு வைக்கப்பட்டிருந்ததாம்.

o o o

இங்கிலாந்திலிருப்பது போன்று இலங்கையிலும் கர்ப்பத்தடை ஸ்தாபனமொன்று சீக்கிரத்தில் ஏற்படுமாம்.

o o o

கொழும்பு மத்திய ரெலிபோன் சாலையில் அமைக்கப்படப்போகும் புதிய கருவியினால், அங்கு வேலைசெய்யும் 150 பெண்களுக்கு வேலையில்லாமற் போய்விடுமாம். o o

பால்கன் பிரதேசத்தைச் சேர்ந்த ஸொஜோவா என்னுமிடத்திலுள்ளதும் 15-ம் நூற்றுண்டில் கட்டப்பட்டதுமான மசூதி ஒன்று இடிந்து மணற்றிடராய்விட்டது.

மருதானைப் பொலிஸ்ரேஷனைச் சேர்ந்த டபிள்யு. எம் புஞ்சிபண்டா என்னும் பொலிஸ் உத்தியோகஸ்தர் எம். ஜே. யோசேப் என்னும் பொலிஸ் உத்தியோகஸ்தரைக் கத்தியால்குத்திக் காயப்படுத்தி விட்டாராம். o o

அமெரிக்காவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு சேத நிவாரணத்தின்பொருட்டு 4 கோடியே 30 லட்சம் வெள்ளி அரசினாற் செலவிடப்படுமாம்.

o o o

பிறிட்டிஷ் நாவலாசிரியரான திரு. ஜன்றின் மக்கார்த்தி என்பவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்துவிட்டாராம். o o

காலியில் பிரசவ ஸ்திரீகளின் மரணம் அதிகமாயிருப்பதற்குக் காரணம், சனங்கள் திறமையில்லாத மருத்துவப் பெண்களை உதவிக்கு அழைப்பதுதான் என டாக்டர் ஆண்ட் என்பவர் கூறுகிருர். o o o

பலப்பிட்டியைச் சேர்ந்த நிகாமுனி பீரிஸ்மென்டிஸ் என்பவன் நீராடிக்கொண்டிருக்கையில், சீத்தின் அம்பு, போட்டின் என்னுமிருவரும் வாள்கொண்டு அவனைத் தாக்கிப் பலத்தகாயங்களை உண்டு பண்ணி விட்டனராம்.

o o o

அநுராசபுரத்திற் சில பகுதிகளில் பிளேக்நோய் காணப்பட்டிருப்பதால் யாத்திரையின்பொருட்டு அங்குசெல்வோர் இம்முறை போகாமலிருப்பது நல்லது என்னும் அறிவித்தல் சுகாதாரப்பகுதியினரால் வெளியிடப்பட்டிருக்கிறதாம்.

o o o

பீகார் முசபர்ப்பூர் மத்திய சிறைக்கூடக் கட்டிட வளவில் அனுமதியின்றி ஓர் ஆலயத்தை அமைத்தமை காரணமாக 16 சிறைச்சாலைச் சேவகர்கள் வேலையினின்றும் நீக்கப்பட்டனராம்.

o o o

கந்தானையைச் சேர்ந்த கரோலிஸ் அப்பு என்பவன் அனுமதிப்பத்திரம் பெருது ஒரு மாட்டைக் கொலைசெய்து 90 றாத்தல் இறைச்சியை வைத்திருந்தானெனக் குற்றஞ் சாட்டப் பெற்றிருக்கிறுராம்.

o o o

ராணிப்பேட்டை என்னுமிடத்தில் நடைபெற்ற நகரசங்கத் தேர்தலில் வெற்றியடைந்த காங்கிரஸ் வாதியைப் பாராட்டுவதற்காக லாலாபேட்டைக்குச் சென்ற காங்கிரஸ் வாதிகள் சிலரை யாரோ வழிமறித்து அடித்துக் காயப்படுத்தி விட்டனராம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 6134.

சுன்னுகம்
1. செல்லப்பா-கதிரித்தம்பி வழக்காளி.

சுன்னுகம்
1. முருகன்-இளையவன் எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 6134-ம் இலக்க வழக்கில் 1936-ம் ஹு பங்குனி மீ 10-ந் தேதி யைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936-ம் ஹு சித்திரை மீ 20-ந்தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுன்னுகம் "ஊரிச்சாட்டி" (Oorichaddi) பரப்பு நிலை இலாச்சம் 8½. எல்லை: கிழக்கு கணபதிநாகனின் ஆதனம்; வடக்கு கணபதி நாகனும், பெண் இலட்சுமியும் கந்தர்பெண் நன்னியும், வயிரவன் பெண் பெரியாளின் ஆதனமும் புன்னன் வல்லியனின் ஆதனமும் பெண் புதியாளின் ஆதனமும்; மேற்கு ஒழுங்கை; தெற்கு கை ஒழுங்கை.

யாழ்ப்பாணம் 1936-ம்ஹு பங்குனிமீ 20உ

C. Kandiah Chettiar
கொம்மிஷனர்.

(202) 29-3-36.

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 8326.

தெல்லிப்பழை மேற்கு
1- தம்பிராசா கைம்பெண் மேரி இராக்கற்பிள்ளை
2. தம்பிராசர் ரத்தினசாமி
வழக்காளிகள்.

தெல்லிப்பளை மேற்கு
1. வயிரவி கந்தையா
2. சின்னத்தம்பி வயிரவி எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 8326-ம் இலக்கவழக்கில் 1936-ம் ஹு பங்குனிமீ 9-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936-ம் ஹு சித்திரைமீ 18-ந்தேதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## மானநஷ்ட வழக்கு சமாதானமாக முடிந்தது.

"டெயிலிநியூஸ்" பத்திரிகை மன்னிப்புக்கேட்டது.

### திரு. குலரத்ன 50,000 கேட்டு 2,000 வாங்கினுர்.

கொழும்பு டிஸ்திறிக்கோட்டில் கண்டி தர்மராசாக் கல்லூரி பிரதம ஆசிரியர் திரு. பீ. டீ. எஸ். குலரத்ன சென்ற ஆக்கஸ்ட்மீ 9-ந் திகதி "சிலோன் டெயிலிநியூஸ்" பத்திரிகை தமக்கு மானநஷ்டத்தை விளைக்கக்கூடிய ஓர் கடிதத்தைப் பிரசுரம் செய்ததற்காக ரூபா 50,000 நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டுமென பத்திரிகை கம்பனிமீதும் பத்திராசிரியர் திரு. H. A. J. குலுக்கலைமீதும் கொடுத்த வழக்கு இந்தமீ 23-ந் தேதி திரு. V. M. பெர்னன்டோ அவர்கள் முன்பாக எடுத்துக்கொள்ளப்பட்டது. சிறிதுவாக்குவாதத்தின்பின் பத்திரிகைக்காரர் ரூபா 2,000 திரு. குலரத்னவுக்குக் கொடுப்பதாகவும் கடிதம் பிரசுரித்ததற்கு திரு. குலரத்னவை பத்திரிகை மூலமாக மன்னிப்புக் கேட்பதாகவும் சமாதானம்பேசித் தீர்த்தனர்.

### விபரம்.

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்வடக்கு தெல்லிப்பழைக் கோயிற்பற்று தெல்லிப்பளை இறை தாவைதோட்டம் பரப்பு நிலை இலாச்சம் 3 உம் குளி ½ யும் கிணறும். எல்லை: கிழக்கு மூத்ததம்பி சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம், வடக்கு முதலாம் வழக்காளியின் ஆதனம். மேற்கு முதலியார் பெண் சிசிலியாவுக்குரிய ஆதனம், தெற்கு இறைவாய்க்காலும் சின்னப்பா வயித்தியலிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதிற்சொல்லப்பட்ட கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வாய்க்காலுரித்தும் மறுபேருக்குமுரிய வாய்க்காலுக்கு மேலாக உள்ள வழி உரித்தும், பிற நீங்கலாக முழுவதும்.

2. ஷை இறை "தாவை" பரப்பு நிலை இலாச்சம் 1 ம் குளி 12ம். எல்லை: கிழக்கு சின்னப்பு ஞானமுத்துவுக்கும் வடக்குசின்னப்பா வயித்தியலிங்கத்துக்கும்பங்காளருக்கும் மேற்கு சின்னத்தம்பி வயிரவிக்கும் தெற்கு காசி வன்னித்தம்பிக்குமுரிய ஆதனங்கள். இவ்வெல்லைக்குட்பட்ட முழுவதும் தாவையென்று சொல்லப்பட்ட கிழக்கிலிருக்கும் காணிக்குளிருக்கும் கிணற்றில் பங்கும் வழக்கமான வாய்க்கால் வழிஉரித்தும்.

யாழ்ப்பாணம், 1936-ம்ஹு பங்குனிமீ 20உ

C. Kandiah Chettiar.
கொம்மிஷனர்.

(104) 29-3-36.


## தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள்

எங்கே சகாயம்?

இரணைவாளி, சொரிவாளிச் சூத்திரங்கள்

இவைக்குரிய ரேதைகள் வாளித்தகடுகள்
இரும்புத்தீராந்திகள், துலாக்களும்,
மற்றும்சாமான்களும்

கையினுல் இறைக்கும் செமி ரேற்றறி பம்புகள், இவைக்குரிய குழாய்கள் முடக்குகள், பென்டுகளும், மறு சாமான்களும், தண்ணீர் நிரம்புவதற்குரிய தாங்கிகளும் கைவசம் இருக்கின்றன.

உங்கள் தேவைக்கேற்றபடி எல்லாம் பூட்டிக்கொடுக்க தயாராய் இருக்கின்றேம்.

Estimates FREE

Prices on Application

**CEYLON HARDWARE STORES**

**VALVETTITURAI.**
(வல்வெட்டித்துறை)

Head Office :- "Jubilee Buildings"
Old Moor Street, COLOMBO

## கடிதம்

### ஸ்ரீமதி கமலாநேருவின் மரணத்தைக் குறித்த அநுதாபச் செய்தி.

"ஈழகேசரி"ப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயா!

"தோன்றிற் புகழொடு தோன்றுக —அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்றார் பொய்யாமொழிப் புலவர். உலகத்தின் நீண்ட சரித்திரத்தில் இந் நாயனுருடைய இவ்வாக்கிற்கு இலக்காகத் திகழ்ந்து காலஞ்சென்ற மாபெருந்தலைவர்களில் ஒருவரும், பாரதநாட்டின் மானத்தைக் காப்பாற்றுவதற்காகவும், அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காகவும், தமக்குள்ள யாவற்றையும் முகமலர்ச்சியோடு தியாகஞ் செய்த தியாகமூர்த்திகளில் ஒருவரும், பாரதநாட்டின் கௌரவத்தைப் பல்லாயிரமடங்கு அதிகப்படுத்திய தனிப் பெருஞ் சிறப்பைத் தனக்கே உரிமையாக்கிக்கொண்டவரும், உடலில் உயிர் ஒட்டிக்கொண்டிருக்கும்வரை, தான் பிறந்த தாய்நாட்டை அந்நியரின் கையினின்று விடுவிப்பதற்கு அரும் பாடுபட்ட சுத்த சுதந்திர வீரமணியுமான ஸ்ரீமதி கமலாநேருவின் அகால-சடுதிமரணம் அகில உலகத்தையும் திடுக்கிடச்செய்துவிட்டது. ஐயா! அவருடைய சாவு மின்னுமல் இடிவிழுந்ததைப் போலிருக்கின்றது. நேரு அம்மையாரின் மரணம் பாரதநாட்டிற்கு ஈடுசெய்துகொள்ள முடியாத மகத்தானவோர் நஷ்டமென்பது சொல்லாமலே விளங்கும். என்செய்யலாம்! ஸ்ரீ பாரத தேவியின் பெருங்கருணை இருந்தவாறென்னே!! ஐயா! அவளுடைய கருணையை நான் என்னென்று சொல்வேன்!!

அந்தோ! பாரதமாதா தன் அருந்தவப் புதல்வியை இழந்துவிட்டாள்; சுதந்திரதேவி அரியதோர் பக்தரை இழந்துவிட்டாள்; இந்தியா முடிசூடா இளவரசியை இழந்துவிட்டது; பாரதமக்கள் மாபெருந் தலைவிகளில் ஒருத்தியை இழந்துவிட்டார்கள். தேசநலத்திற்காகத் தேகத்தைப் பலிகொடுத்த தேவி கமலாநேருவின் பெயர் இந்திய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுமென்பது நிச்சயம். காலஞ்சென்ற கமலாநேருவின் மரணத்தைக்குறித்து உருக்கமாகப்பேசி, தங்கள் தங்கள் அநுதாபத்தைப் பத்திரிகைகள்மூலம் தெரிவிப்பதால் கிடைக்கக்கூடியது ஒன்றுமில்லை. பாரதநாட்டில் பற்றுடைய ஒவ்வொருவரும் தமது உயிரைக்கொடுத்தேனும் அத்தேவியின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும். தாய்நாட்டின் விடுதலைக்காக இந்திய மக்கள் யாவரும் ஸ்ரீமதி கமலாநேருவைப் பின்பற்றித் தத்தம் சக்திக்குத் தக்கவாறேனும் நடந்துகொள்வார்களாயின் அவ்வம்மையாருடைய மனம் திருப்தியடையும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஸ்ரீமதி கமலாநேரு அம்மையாரின் மாபெரும் குடும்பத்திற்கும், அவரது உற்றார் உறவினர்க்கும் எனது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்தேவியாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை நான் என்றென்றும் வழுத்துகின்றேன். ஜே! ஜே!! ஸ்ரீமதி கமலாநேருவுக்கு ஜே!!!

இங்ஙனம்,
இலங்கைவாழ் இந்தியநேசன்
இ. சின்னத்துரை

கொழும்பு, 23-3-36.

### நீதிபதி நியமனத்திற்கு ஆட்சேபனை.

அரசாங்கசபைத் தலைவராயிருந்தவரும், இற்றைக்குச் சின்னுட்களுக்குமுன் அவிசாவலைப்பகுதித் தேர்தலில் தோல்வியடைந்தவருமான மிஸ்ரர் F. A. உபயசேகரா என்பவர் கொழும்பு சுப்பிறீம்கோட்டு நீதிபதியாகநியமிக்கப்பட்டிருக்கிறார். அவரின் நியமனத்தை ஆட்சேபித்து மிஸ்ரர் R. L. பெரீரா, மிஸ்ரர் H. V. பெரீரா, மிஸ்ரர் A. E. கூனிமன், மிஸ்ரர் N. E. வீரசூரியா, ஸ்ரீ N. நடராசா முதலாம் பிரபல நியாயவாதிகள் உயர்தர நீதிமன்றத்துப் பிரதம நீதிபதியைக் கண்டு பேசினர்.

## "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவாபிமானிகளே!


திருக்கதிர்காம க்ஷேத்திரத்திற்குச் செல்லும் யாத்திரிகர்களிற்சிலர் தாங்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளுக்கு மாறாக, அதாவது எவரும் அருவருக்கத்தக்க விதமாக நடந்துகொள்ளுகிறார்களென்பதும், திருக்கதிர்காம க்ஷேத்திரகாரியஸ்தர்களும் தங்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்கிறார்களில்லை யென்பதும், அவ்வாலயத்தில் வருஷக்கணக்காக வசிக்கும்தபோதனர்கள்பலரால் அறியக்கிடக்கின்றது. இவ்வக்கிரமங்களைத் தடுப்பதற்கு ஏற்ற முறைகளைக் கையாளாவிடின் கதிர்காம க்ஷேத்திரத்தின் மகிமை குன்றி நம் சைவ சமூகத்திற்கே பெரும் அபாயம் நேருமெனக் கதிர்காமஆலயஎல்லைக்குட்பட்ட வனத்தில் வருஷக்கணக்காக வசிக்கும் தபோதனர்களே அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விஷயத்தை ஆலோசிக்கும்பொருட்டு 1936-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ந் திகதி திங்கட்கிழமை சாயந்தரம் 6 மணியளவில் வதுளை சிங்கர்மெஷின் கம்பனிக்காரியாலயத்தில் கதிர்காமத்தையனின் ஏவலாளராகிய வேலன் என்னும் தபோதனர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அத்தருணம் அக்கிராசனர் அவர்கள் கதிர்காமக் க்ஷேத்திரத்தில் நடக்கும் அட்டூழியங்களைத் தடுப்பதற்கு "கதிர்காம க்ஷேத்திரத் தொண்டர் மகா சபை" என்னும் ஓர் சபையை ஏற்படுத்த வேண்டுமென்றும், அத்தொண்டர்கள் அங்குசென்று நேர்முகமாய் எல்லாவற்றையும் பார்வையிட்டதன்மேல் செய்யவேண்டியனவற்றைச் செய்யும்படியும் கந்தனின் அநுக்கிரகத்துடனேயே தான் இத் திருத்தொண்டை நிறைவேற்ற முன்வந்திருப்பதாகவும்கூறியதன்மேல் அத்தருணம் சமுகமளித்தவர்களுடைய பூரண சம்மதத்துடன் "கதிர்காம க்ஷேத்திரத் தொண்டர் மகா சபை" ஸ்தாபிக்கப்பட்டு இருக்கின்றது. இச்சபைக்கு ஷை தபோதனர்கள் அவர்களே அக்கிராசனராக ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

சைவ சமயிகளுள்ள ஒவ்வொரு இடங்களிலும் இச்சபையை ஸ்தாபித்துத் தங்களாலியன்ற தொண்டைச் செய்யுமாறு வேண்டுகின்றோம். திருவிழாக்காலங்களிலும் மற்றும் விசேஷ தினங்களிலும் கதிர்காம க்ஷேத்திரத்தில் ஷை தொண்டர் மகாநாடு நடைபெறும். முதன்முறையாக வருகிற சித்திரைமாதம் 13-ந் திகதி வருஷப்பிறப்புத் தினத்தன்று கதிர்காம க்ஷேத்திரத்தில் தொண்டர் மகாநாடு கூட எத்தனித்திருப்பதால் தாங்களும் கூடுமானுல் வருஷப்பிறப்புத் தினத்தன்று கதிர்காம நாதனைத் தரிசித்து இவ்வரிய தொண்டிலும் ஈடுபடுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

போ. ஆறுமுகம்
வே. தில்லையம்பலம்
இணைக்காரியதரிசிகள்
கதிர்காமக்ஷேத்திர தொண்டர்மகாசபை
வதுளை 18 3-36

இங்கே SYLVIA SIDNEY
என்ற ஸினிமாப் பெண்மணி உங்களுடன் பேசுகிறாள்.




*Star of Paramount Pictures.*




ஹொலிவுட்டிலும், இங்கிலாந்திலுமுள்ள 857 முக்கிய ஸினிமா பெண்களில் 846 பேர்கள் சருமம் மிருதுவாயிருப்பதற்கு இந்த ஸோப்பையே உபயோகிக்கிறார்கள். லக்ஸ். டோய்லெட் **ஸோப்பின்** பொங்கி எழும் வெண்மையான நுரையானது உடம்பிலும் ரோமக் கண்களிலும் சேரும் அழுக்கை அறவே எடுத்துவிடுகிறது. இப்படி சுத்தம் செய்யாவிடில் சருமத்தின் அழகை கெடுத்துவிடும்.

மிகவும் சுத்தமான சாமான்களிலிருந்து செய்யப்படும் இந்த ஸோப் ஆனந்திக்கச் செய்யும் வாசனையுடன் கூடியது. ஒரு கட்டி உபயோகித்துப்பாருங்கள். ஸினிமா நடிகைகள் தங்கள் அழகை விருத்தி செய்யும் வழியை நீங்களும் கைக்கொள்ளுங்கள். லக்ஸ் டோய்லெட் ஸோப்பையே தவறாமல் தினமும் உபயோகியுங்கள்.

# LUX TOILET SOAP

X-LTS 361-288A TAMIL — LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ், சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 3. காட்சி 5.

இடம்:—வடபுறத்து நிரைசாய்க்கும் அமர்க்களம்.

(துரியோதனனுதியர் நிரை கவருகின்றனர். பேடி தேர்செலுத்த உத்தரன் வந்தனன்.

**உத்தரன் :—** (படையைக்கண்டஞ்சி அம்மம்ம! சுயோதனன்றனையை எண்ணவும் முடியுமா! அந்தரத்திற் செறிந்திருக்கும் உடுக்குலம்போல மண்ணிடங்கொள்ளாது விளங்குகின்றதே. ஜெயராமச்சந்திரனின் துங்க நன்மரபினில் யானவதரித்திடினும், மாசுணமுயர்த்த கோமகன் படைகண்டு என்மனம் திகிலடைகின்றதே, அந்தோ!

(கை கால் மெய் நடுங்கின. நாவறண்டு வெய்துயிர்த்துச் சொற்றடுமாறினது. கிரீடமேவிய சிரசுமசைந்தது.)

**பேடி :—**

"அஞ்ச லஞ்சல்நீ; பகைவரை யாருயிரடுதல், அஞ்ச லென்றிவை யிரண்டலாற் றணிவுவே றுண்டோ! வெஞ்ச மந்தனில் வந்துபுண் படாதினி மீண்டால், வஞ்ச நெஞ்சுடை வஞ்சிய ரென்சொலார்? மறவோய்!"

"நிலையு முட்டியும் நிலைபெற நின்றுநேர் டடத்தின், சிலைவ ளைத்துவெஞ் சிலீமுகஞ் சிற்சில தொடுத்து, மலையி லக்கெனவாரையும் மலைந்திடு; மலைந்தால், அலைகடற்புவி யரசரி லாரெதிர் நிற்பார்!"

வலியோனே! நீ அஞ்சவேண்டாம், பகைவரைக் கொல்லுதல் அன்றேல் இறத்தல் என்ற விவ்விரண்டேயன்றிச் செய்யத்தக்கது வேறென்! கொடிய போர்முனைக்கு வந்து மார்பிற் புண்ணுண்டாகும்படி அயர் செய்து வேறலுறுது திருப்புவையேற் சபடமான மனங்களையுடைய நாரியர்தாமும் எதுதான் புகலார்? போருக்குரிய பைசாசம், மண்டலப், ஆவீடம், பிரத்கியாலீடம் என்ற பாலவகை நிலையிலும், கையை முட்டியாகப்பிடித்தலும் கலங்காமனின்று; வலிய வில்லை வளைத்து, நேராக வெவ்விய பாணங்கள் சிலவற்றை அநுசந்தித்துப் பகைவரை மலையிலக்காகக் கொண்டு போரைப் புரிகுவை; புரியின் திரையெறிகின்ற கடல்சூழ்ந்த பூமியையாளும் அரசரில் யாவர் எதிர்ப்பார்? (படைகளைச்சுட்டி) மாற்றுனின் சேனைகளில் இவை வெம்பரிப் படைகள்; இவை சொரிகின்ற மும்மதக் கயப்படைகள்; இவை பரிகள் பூட்டிய தேர்ப்படைகள்; இவை காலாட் படைகளென் றறிவாயாக.

**உத்தரன் :—**(படைகளைப் பாராது) பிருகந்நளே! யாம் திருப்பியேகுவதே நன்று.

**பேடி :—**(அச்சத்தால் இளைத்த உத்தரன் மேனியை நறும் பனிநீரினால் விளக்கி) ஐயா! நீ அயர்ந்து முநிகிடாதொழி. கொடிக ளுயர்த்திய செறுநரை இமைப்பொழுதிற் றனித்தனியே தோற்றேடச்செய்து நிரையும் பெயர்த்து நல்குவன்.

(பேடியின் பேச்சைச் செவிக்கொளாது உத்தரன் கொடிஞ்சியினின்றும் குதித்தோடினன். பேடி அவன் பிறகோடிக் கட்டிக் கொணர்ந்து தேரொடும் பிணித்து, வாயுவேகமாய் வன்னிமரத்தடிக்குத் தேரைச் செலுத்தித்தன் படைகளை எடுத்து மீண்டனன். தெவ்வர் நிரைகளைச் சாய்த்தனர்.)

**உத்தரன் :—**பேடி! வன்னிமரத்தடி ஏகி நீ கொணர்ந்த படைக்கலந் தன்னை எங்ஙனம் பெற்றனை?

**பேடி :—**இவை கானகமுறையும் காண்டீப மன்னன் படைக்கலமாகும்.

**உத்தரன் :—** அன்னவ னிப்போ எங்கிருக்கின்றனன்?

**பேடி :—**உத்தர குமார!

"கிரீடி யெங்குள னென்றெனைக் கேட்டனீ கேண்மோ!, இருடி யாகிநின் றுதையோ ராசனத் திருக்கும், புருட னிப்பதி புகுந்தநாள் வந்துடன் புகுந்தோர், அரிடமானதன் விதியினுற் பேடியு மானுன்."

உந்தையோடு சமாசனம் வகித்திருக்கும் கங்காமுனியென்றபெயரையுடைய உத்தமன் இவ்விராட நகரையடைந்த காலத்திற்றானும் உடன் வந்து சேர்ந்து ஓர் துர்ப்பாக்கியமான தன் ஊழினுற் பேடியுமாயினன். அஞ்ஞாதவாசத்துக்குரிய யாண்டின்னமும் முடிந்திலது. முடிவதற்கின்னமும நான்கு கடிகைகள் கழியவேண்டும். ஆதலின் நீ அஞ்சுவதை நிறுத்தித் தேரைச் செலுத்துவாயாக.

(உத்தரனது கட்டை அவிழ்த்தனன். உத்தரனவனை அரிச்சுனனென்று மதித்து வணங்கினன். அன்னுனுக்கு அரிச்சுனன் அசுவமந்திரோபதேசம் செய்து வலவனுக்கினன்.)

**துரோணராதியோர் :—** ஆ, கொடிஞ்சியை விட்டுக் குதித்துத்தாவிய கோமகனிப்போ கோலநற்சாரதியாயினன். ஆயின், நாம் முன்னமே ஐயுற்ற பேடியும் நரனுகவேண்டும்.

**பேடி :—**(வில்வளைத்து) உத்தர! ஒவ்வொரு அநு சந்தானத்திலும் கோடி கோடி பாணங்களைத் தொடுத்துப் பகைவரைச்செறுப்பன். நீ அஞ்சாது தேரைச் செலுத்துவை.

(உத்தரன் தேரைச் செலுத்தினன். பேடி விற்பிரயோகம் புரிந்தனன். எண்ணிறந்த மன்னர் மாண்டனர்.)

**விதுரன் :—**(துரியோதனனை விளித்து) நாகவெங்கொடியோய்!

"அன்று போலல னருச்சுன னம்பிகா பதிபாற், றன்று போர்புரிதவத்தினுற் சுடுகணை பலபெற், றன்றுபோரினு லவுணரை யமருக்காக, வென்று போனகம் நுகர்ந்துபொற் றருமலர் வேய்ந்தான்.

தன்னிலத்தினிற் குறுமுய றந்தியின் வலிதென், றிங்கி லத்தினிற் பழமொழியறிதி நீ இறைவ! எங்கி லத்தினு முனக்கெளி தாயினு மிவர் நம், நன்னி லத்தினில் வரவமர் தொடங்குத னன்றால்,"

அரிச்சுனனுவன் முன்போலல்லன். தவஞ்செய்து அம்பிகாபதியிடத்து நெருங்கியமர் செய்தற்கான கொடிய பல அத்திரங்களைப் பெற்றுத் தேவர்கள் பொருட்டு நிவாதகவசர் காலகேயராதியஅசுரரைப் போரிலே செயித்து, வானேருணவாம் அமிர்தத்தை உண்டு, பஞ்சதருக்களின் பொன்மலர்மாலையையும் சூடினன். அரச கேள்! எவ்விடந்தன்னிலும் தெவ்வரையொறுத்தல் உனக்கெளிதாயினும் "தன்னிலத்திற் குறுமுயல் தந்தியினும் வலியது," என்று வழங்கும் பழமொழியை நீ அறிவையாதலின் இவர்கள் நமது நன்னுட்டுக்கு வந்தபின் அமர்செய்யத்தொடங்கின் அவரை வெல்லுதல் எளிதேயாகும்.

**வீட்டுமர்—துரோணர் :—**அரசே எமது கருத்தும் இதுவேயாகும்.

(துரியோதனன் மனங்கொதித்தனன்.)

**கன்னன் :—**வணங்காமுடியோய்! எதிரியின் தேரோ என்று, தனித்தேரின் மேனின்று வீரவெஞ்சிலை குனித்தகைவீரனும் பேடியேயாவன். எதற்காக மனமுடைந்து பயப்படவேண்டும்? கவர்ந்த கோநிரையை இடையரோடுங் கொண்டேயேகுக. எஞ்சியசேனை பேடியை எதிர்க்க நிற்பதாக.

(சுயோதனன் ஒருகூற்றுச்சேனையோடும் யாதவரொடும் நிரைகொண்டேகப்பேடி சென்றெதிர்த்துப்போர் செய்தவற்றை மீட்டனன். நான்கு கடிகைகளும் சென்றன. ஊர்வசியின் சாபம் நீங்கிப்பேடி அரிச்சுனனுயினன். அன்னவன் அனுமனை நினைக்க, அனுமக்கொடியை முடியிற் கொண்டுள கொடிஞ்சியும் எதிரே வந்தது. இதிலேறி உத்தரன் செலுத்தப்பொலிவுற்று விளங்கிச் சங்கநாதமும் சிங்கநாதமும் செய்தனன் அரிச்சுனன். இம் முழக்கங்களுக்கு உத்தர னஞ்சி விழ, அவனை மூர்ச்சைதெளிவித்துத் துரியோதனனெதிரே தேர்விட ஏவிப் பலரைக் கொன்றழித்தனன்.)

**வீட்மோர் :—** துரோணச்சாரியாரே! பற்குணன் வருகின்ற வீரப் பொலிவைப் பாரும். அவன் வரும் வேகத்தையும் பொலிவையும் நோக்குமிடத்துத் தான்பெற்ற விசயனென்ற காரணப்பெயரைத் தனக்குத் தகுவதாக நிலைநாட்டாது நீங்கான். உரியநாள் வருமுன் வெளிப்பட்டனனோ என்று காலக்கணிதம் செய்து பார்ப்பீராக.

**துரோணர் :—**காலக் கணிதம்செய்து பார்க்குமளவில் அஞ்ஞாதவாசங் கழிந்தேவிட்டது.

**துரியோ :—**(காலக் கணிதந்தவறுவகைக் கூத்தாடி) காண்டீபன் காலந்தவறித் தன்னைக் காட்டியே விட்டனன்.

**வீட்மோர் :—** துரியோதனு! அஞ்ஞாத வாசகாலம் நீங்கிவிட்டது. ஆயாசங்கரித்து அகங்களிப்பது அறிவின்மையாகும்.

**துரியோ :—** அங்ஙனமாயின் போரைச் செய்குவம்.

**துரோணர் :—**ஏ உரககேதன! நின்கூற்று மிகவும் தகாதென்றுணர்வாய். இதுகாறும் நின் தீங்குகட்கெல்லாம் நீங்கி, அவற்றால் மென்மேலும் பஞ்சவர் வலியுடையராய் விளங்கக்கண்டும், இன்னமும் அவரைச் செறுக்கத்துணிவது வேரோடு மாள்வதற் கேதுவாகும். அவர் நற்குணம் நற்செய்கை கடவுள் பத்தியிற் சிறந்தவராதலின் நீ அவரை வெற்றியடைவதும் அரிதேயாகும். தோற்றேடுதலே உனக்குக் கிடைக்கும் பயனென்றறிகுவை. ஆதலி னிப்போ அரிச்சுனனேடு நீ இணங்குவதே சால்புடைத்து. (தொடரும்)


## மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50.
ருத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரிலவந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சந்தனவில்லை, சாம்பிராணிப் பதங்சம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்டர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. மூலம் பெற விரும்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும. தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்:

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.



## சுத்தமான கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

**ஆ. சு வேதாரணியம்பிள்ளை,**
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னுகம்.

(50) 1-12-35×12-36.

சிறுகதை

# வைரவகோவில் விளக்கு.

(வெள்ளவத்தை, திரு. சிவபாதசுந்தரம்.)

மாலைப்பொழுது வந்ததும் சேற்றுக்குளத்து வைரவகோவில் கிணற்றடியில் வழக்கம்போல் பெண்கள் கூடிவிட்டனர். நாகம்மாவுக்கும் பாக்கியத்துக்கும் ஏதோ நல்லகாலமாய் முன்னிருந்த பழைய கோபம் மாறி இன்று சிநேகமேற்பட்டு வெற்றிலை பாக்குப் பகிர்ந்து மென்று கொண்டு அடுத்த வீட்டுத் தங்கமுத்துவின் கணவன் செல்லப்பா கொழும்பிலிருந்து தனது மனைவிக்குப் புதுவருடத்துக்கனுப்பிய பாடிப்பேட்டைச் சேலையின் நிறத்தைப்பற்றி இழிவாகப் பேசி நகைத்தனர். கைம்பெண்ணை சின்னத்தங்கச்சி இவர்கள் பேசுவதையெல்லாம் காதில் போட்டுக்கொண்டு தன் பழைய சீவியத்தை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

இக்கூட்டம் நெடுநேரம் தங்கள் [illegible] இடைஞ்சல்களையும் அயல் வீட்டு எதிர் வீட்டுக் கதைகளையும் பேசிமுடித்துக்கொண்டு குடங்களில் நீர்நிரப்பி எழுந்திருக்கையில்தான் நமது சின்னத்தங்கத்தின் பேத்தி சிவக்கொழுந்து வந்துகொண்டிருந்தாள். எப்பொழுதுமே வாய்க்காரியான பாக்கியம் சிவக்கொழுந்துவின் நெற்றியில் துலங்கும் குங்குமப்பொட்டையும் அவளது அன்னநடையினழகையும் கண்டு சகியாது மற்றவர்களிடம் "பாருங்கள் அவளுக்கு அலங்காரம் மாத்திரம் குறையாது" என்று சொல்லிவிட்டுச் சிவக்கொழுந்தை நோக்கி "என்ன சிவக்கொழுந்து இப்போதான் வாறாய். விரைவாகக் குடத்தை மினுக்கித் தண்ணீரெடுத்துக் கொண்டுவருவாயானாற் சொல்லுநிற்கிறோம். நாங்கள் வந்து நெடுநேரமாய் விட்டது" என்றாள்.

சிவக்கொழுந்து மிகவும் பணிவாக "ஐயோ எனக்காக நீங்களெல்லாரும் காத்திருக்க வேண்டாம். குழந்தைப்பிள்ளைக்காரி சுந்தரத்தையும் மறித்து வைத்துக் கொண்டிருக்கிறீர்களே! நான் ஆறுதலாகத் தண்ணீர் அள்ளிக் கொண்டு வாறேன். விளக்கும் கொழுத்த வேண்டும். நீங்கள் போங்கள்" என்று சொல்லி மற்றவர்களையனுப்பிவிட்டுத் தன் வழி நடந்தாள்.

நிலப்பான்மையோ, தெய்வகடாட்சமோ? அல்லது அவ்வூர்ப் பெண்கள் கூடிப்பேசுவதற்கோ சேற்றுக்குளத்து வைரவகோவிலடியில் நல்ல தண்ணீர்க் கிணறொன்றிருந்தது. குளத்தடியில் அரசமரமொன்றும் பூவரசமரமொன்றும் இணைந்து கொண்டு நின்றபடியால் ஒருகாலத்தில் வைரவசூலமொன்றைக் கந்தர் வளவு மூத்ததம்பியார் நாட்டிவைத்தார். அது காலக்கிரமத்தில் சேற்றுக்குளச் சனங்களால் பொங்கல் பொங்கியும் இளைக்கட்டியும் ஆதரிக்கப்பட்டு இப்பொழுது மூத்ததம்பியார்பூட்டன் பொன்னரால் அதன்மேல் ஒரு சிறு கொட்டில் போடப் பட்டிருக்கிறது. பொன்னர் இறந்து பத்துப் பன்னிரண்டு வருடங்களாகின்றன. அவருடைய தாய்க்கிழவி சின்னத்தங்கமும் தங்கச்சியின் மகள் சிவக்கொழுந்துவுந்தான் அந்த வைரவ கோவிலுக்கு வெள்ளியும் செவ்வாயும் விளக்கு வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். பொன்னர் உயிரோடிருக்கும்பொழுது குளக்கரையில் தோண்டுவதற்குச் சுலபமாயிருந்தபடியால் குளத்தில் குளிக்க வரும் பள்ளர் சிலரைக் கொண்டு சிறு கிணறொன்று தோண்டுவித்திருந்தார். அது 'திருமஞ்சன'க் கிணறாகப் பாவிக்கப்பட்டு வந்தது. அவ்விடத்திலுள்ள கிணறுகளிலும் பார்க்க நல்ல தண்ணீருடையதாகையால் யாவராலும் குடிக்கப் பாவிப்பதற்கும் விரைவில் துவரம்பருப்பு அவிய விடுவதற்கும் உபயோகிக்கப்பட்டு வந்தது. அதனாற்றான் மேலே சொல்லப்பட்ட நமது பெண்மணிகள் காலைமாலைகளில் ஒன்று கூடுவார்கள்.

வெள்ளிக்கிழமை பொழுதுபடும் நேரம் சிவக்கொழுந்து வழக்கம்போல் தனது சருவக்குடத்தை மினுக்கிக் கழுவி நீர் நிரப்பிவிட்டுக் கால்முகம் சுத்தி செய்து கொண்டு வைரவகோவில் விளக்கேற்றச் சென்றாள். அருகே குளத்திலிருந்த தவளைகள் ராகதாளமின்றிப் பாடின. அரசமரத்தின் கிளைகளில் நாள் முழுதும் பறந்து திரிந்து வயிறார உணவருந்தி வந்து கூடிய காக்கைகள் தம் மனைவிமக்களுடன் ஆனந்தங்கொண்டு ஆரவாரித்தன. பக்கத்திலே படர்ந்து கிடந்த முல்லைக் கொடியில் மொய்த்த வண்டுகளின் ரீங்கார ஒலியுடன் முருக மூர்த்தி கோவில் பண்டாரம் ஊதிய சங்கின் ஒலியும் சேர்ந்து முழங்கின. இந்த ஒலிகளின் நடுவே 'பித்தா பிறைசூடி' பாடிக்கொண்டு சென்ற சிவக்கொழுந்து, கறையானரித்த விட்டமொன்றில் தொங்கிக்கொண்டிருந்த கண்ணாடி விளக்கில் தேங்காயெண்ணெயை வார்த்துத் திரியைத் தூண்டிவிட்டு நெருப்புக்குச்சி தட்டிப் பற்றவைத்தாள். கோவிலின் எதிர் முகமாய் நின்றாளாதலால் பளிச்சென்று உள்ளிருந்த வெள்ளிச் சூலாயுதம் மின்னியது.

சாதாரணமாய் இருட்டிலிருந்த சூலாயுதம் வெளிச்சத்தைக்கண்டவுடன் மின்னிப் பிரகாசித்ததெனச் சிவக்கொழுந்துவுக்குத் தோற்றவில்லை. ஒருவித உணர்ச்சிபெற்றவளாய் அதிசய சம்பவமொன்று நிகழ்ந்ததுபோல மெய் விதிர்ப்ப இருதயம் துடிதுடிக்கப் பயமும் களைப்பும்கொண்ட முகத்தோடு சூலாயுதத்தையே நோக்கினாள். சிறிது நேரத்தில் அற்புதமானதொன்றும் நிகழவில்லையென்று திடமுற்றாளேனும் சிவக்கொழுந்துவின் மனதில் தனது வாழ்நாளில் நடந்த பல சம்பவங்கள் ஒன்றின்பின் னொன்றாய் உதயமாயின.

சூலாயுதத்தின் தோற்றத்துடன் இரும்பிலடித்து நாட்டப்பட்டிருந்த அதற்கு, ஐந்து வருடங்களின்முன் வெள்ளித்தகடு சாத்திய தனது கணவன் சிற்றம்பலத்தின் நினைவு வந்தது. கடந்த நான்குவருட காலமாய் ஏதோ ஒரு சிறிது அபிப்பிராயபேதம் காரணமாக ஏழைக்கிழவி சின்னத்தங்கத்தையும் பேத்தியையும் விட்டு 'நீள நெடுக'ச் சென்ற சிற்றம்பலத்தைப் பற்றி அறிவிப்பார் யாருமில்லை. விவாகமாகி ஒருவருட காலம் இன்பமாயிருந்த குடும்பத்தில் திடீரென இப்பிரிவு நேர்ந்தது. இதற்கெல்லாம் காரணம் சீதனப்பணமென்று கேள்வி. சிவக்கொழுந்து 8 வயதாயிருக்கையில் பெற்றார் இறந்துபோயினர். தாயினுடைய சீதனக் காணியாயிருந்த பனங்காணியொன்றும் மரவள்ளி நடப்பட்டிருந்த இரண்டரைப்பரப்புத் தோட்டமும் சிவக்கொழுந்துவைச் சேர்ந்தன. தகப்பனாரும் ஏதோ புகையிலை வியாபாரத்தில் 80 பவுண் தேடி வட்டியில் போட்டிருந்தார். சின்னத்தங்கந்தான் இடியப்பமும் புட்டும் அவித்து விற்றுச் சிவக்கொழுந்துவை வளர்த்து இராமநாதருடைய மகன் சிற்றம்பலத்தை விவாகம்செய்து வைத்தது. பனங்காணியும் தோட்டமும் 75 பவுண் ரொக்கமும் 35 பவுணுக்கு நகையும் சீதனமாகக் கொடுபட்டது. சின்னத்தங்கத்தின் வீட்டிலேதான் புருஷனும் மனைவியும் வசித்து வந்தார்கள். "இந்தக்கட்டை போனபின் இந்தவீடு முங்களைத்தானே சேரும்" என்று கிழவி அடிக்கடி சொல்வது வழக்கம்.

சிற்றம்பலம் இளமைதொடக்கம் ஒரு சுருட்டுக்கடையில் சம்பளத்துக்கு நின்று மாதம் மாதம் தனக்குக் கிடைத்ததைச் சேர்த்துவைத்துச் சிலகாலம் சென்றதும் தனக்கென ஓர் கடை இரத்தினபுரியில் தொடக்கிப் பிரதானமாகப் புகையிலையும் சுருட்டும் சிறிது புடைவையும் வைத்து வியாபாரம் நடத்திவந்தார். காலவித்தியாசத்தால் நட்டமதிகமாகிக் கடையை மூடவேண்டி வந்துவிட்டது. இதனால் மனம்நொந்த சிற்றம்பலம் தனது மனைவியிடம் வந்து யாவற்றையும் சொல்லிச் சீதனப்பணத்தைக்கொண்டு வியாபாரத்தைக் காப்பாற்றலாமென்று யோசனை கூறினார். குணவதியான சிவக்கொழுந்து தானெப்போ தனது கணவனுக்கு உதவி புரிவதென்று காத்துக்கொண்டிருப்பவளாதலால் இந்த யோசனைக்கு மறுத்தாளல்லள். ஆனால் சின்னத்தங்கம் குறுக்கிட்டு வாயில்வந்தபடி ஏசத்தொடங்கினாள். "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடேறாது. ஏதோ பெரிய வியாபாரியென்று சொல்லிச் சம்மந்தம் செய்துவிட்டு இப்போ என்னடா என்றால் பெண்டாட்டி சொத்தையுமழிக்க யோசனையாம். இருவருமாய்ச் சேர்ந்து என்னத்தையாலும் செய்யுங்கள். ஆனால் இன்றுதான் கடைசிநாள். நாளைக்கு இந்த வீட்டுத் திண்ணையிலும் உட்காரமுடியாது" என்று அடக்குமுறைச் சட்டம் கொடுத்துவிட்டாள். நினையாப் பிரகாரம் பேத்தியாரின் சொற்கள் கிளம்பவே சிவக்கொழுந்துவின் கண்களில் நீர் வடிந்தது. என்ன செய்வதெனத் தோற்றாத விழித்தாள். கணவனின் கதியை நினைத்துப் பரதவித்தாள். ஆனால் சிற்றம்பலத்துக்குக் கோபமதிகரித்தது. கிழவியின் சொற்கள் நாராசமாயிருந்தன. கிழவியில் கொண்ட கோபம் சிவக்கொழுந்துவின் மேலா தீர்க்கவேண்டும்? முன்தானைச் சேலையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தலைவாசல்தூணோடு சாய்ந்துகொண்டு விம்மி விம்மி யழுத சிவக்கொழுந்துவின் கண்களில் பளீரென்று இரண்டு அடிகள் விழுந்தன. அவ்வளவுதான். தோற்பெட்டியொன்று தயாரானது பெட்டகத்திலிருந்த சரிகைச் சால்வையை யெடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு குடையுடன் வெளிக்கிளம்பினார் சிற்றம்பலம். இன்னும் வந்து சேரவில்லை. நிற்குமிடத்தை யறிவாருமில்லை.

இந்தச் சங்கதிகள் யாவும் தொடுத்தாற்போல் ஒன்றன்பின் னொன்றாய் வைரவகோவில் முகப்பில் நின்ற சிவக்கொழுந்துவின் மனத்தில் தோன்றின. பாவம் இளம்பெண். ஆக ஒருவருட காலம் அன்றிலும் பேடும் போல இணைபிரியாது இல்லத்திருந்த இவர்களுக்கு அகாலப்பிரிவு துன்பத்தைக் கொடுத்தது. நான்குவருடப் பிரிவு நாற்பது வருடம்போல் சிவக்கொழுந்துவின் முகத்தில் முதுமையைக்காட்டியது. இப்பொழுது அவளேற்றிய விளக்குத்தானும் சிறிது ஒளிபெறச் செய்யவில்லை. நெடுநேரம் யோசனையிலிருந்தவள் திடீரெனத் தன் பேத்தியாரை நினைத்து, "என்னசெய்துவிட்டேன்; ஒரு காரணமுமில்லாமல் இவ்வளவுநேரமும் நிற்கிறேனே" என்று பரபரப்புடன் தண்ணீர்ச் சருவத்தைத் தலையில் எடுத்துக்கொண்டு கடுகி நடந்தாள்.

பின்புற வாயிலால் வீட்டையடைந்ததும் தண்ணீர்க்குடத்தை வைத்துவிட்டுப் "பெத்தாச்சி" என்றழைத்தாள். பால் கறந்துகொண்டிருந்த சின்னத்தங்கம் "அங்கே வைத்துப் போட்டு அடுப்பிலிருக்கிறதைப் பார்த்துக்கொள்; இந்தப் பாற்சொட்டைக் கறந்துகொண்டுவாறேன்" என்றாள். சிவக்கொழுந்து முன்தானைச்சீலையால் முக வியர்வையைத் துடைத்துக்கொண்டு தலைவாசல் விளக்கேற்றுவதற்காக முற்றத்தில் வந்தாள். வந்ததும் திடுக்கிட்டாள். இரண்டு 'டிறங்கு'ப் பெட்டிகள் முற்றத்தில் கிடந்தன. அருகில்நின்ற வேப்பமரவேரில் கையில் குடையுடன் ஒரு ஆணுருவம் உட்கார்ந்திருந்தது. அதுதான் "காணமற்போன சிற்றம்பலம்." சிவக்கொழுந்துவின் மார்பு துடித்தது. ஆச்சரியமும் சந்தோஷமும் பெருக அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். சிற்றம்பலம் மெதுவாக எழுந்துவந்து "சிவக்கொழுந்து! ஏனிப்படி வாடிப் போயிருக்கிறாய். அதிகமாகப் பட்டினி கிடந்திருக்கிறாய்போலிருக்கே" என்றுசொல்லி அன்பொழுக அவளைத் தழுவிநின்றார். சிவக்கொழுந்துவின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் சொரிந்தது. நாததடுமாற "நாதா! இவ்வளவுகாலமும் ஏறிட்டுப் பார்க்கமாட்டேனென்றிருந்தீர்களே! முன்னை வினைப்பயனா இது? ஆயினும் என்னைப் போற் பாக்கியசாலி யார் இருக்கிறாள்? சென்ற கணவனைப் பெற்றுவிட்டேனல்லவா?" என்றுசொல்லிக் கனிந்த நகையுடன் நிமிர்ந்து கணவனை நோக்கினாள். "பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ."

காதலர்களின் இந்த நிலையை அப்பொழுதுதான் பாற்செம்புடன் வந்த சின்னதங்கம் கண்டதும் திகைத்துப்போனாள். சென்ற சிற்றம்பலத்தார் திரும்பிவிட்டார். அதைவிட முற்றத்தில் இரண்டு பெரிய பெட்டிகள் கிடக்கின்றன. உள்ளம் பூரித்தது. அநுபவசாலியானபடியால் சின்னத்தங்கம் சமயோசிதமாய் "என்ன தங்கச்சி பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? இங்கேவா; அடுப்பிலிருந்த சொதியை இறக்கிச் சோற்றைக்கொடு" என்றாள்.

உணவருந்தியபின்னர் சிற்றம்பலம் தன் மனைவிக்குத் தான் சிங்கப்பூருக்குச் சென்றிருந்ததாயும் அங்கேயொரு சிறு உத்தியோகத்திலிருந்து பொருளீட்டியதாயும் பழைய நினைவுவரவே திரும்பி வந்ததாகவும் சொன்னார். சிவக்கொழுந்துவின் ஆனந்தத்துக்கு அளவில்லை. இருவரும் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு வெளியே காற்று வாங்க வந்தனர். அப்பொழுதும் சேற்றுக்குளத்து வைரவ கோவில் விளக்கு மின்னி மின்னி யெரிந்தது. சந்திரனும் புன்னகை புரிந்தான்.

நீங்கள்
**யோசிக்கவேண்டியதில்லை!**
ஓர்முறை பரீட்சியுங்கள்
உண்மையை அறிவீர்கள்
உங்கள் லில்லிபுளுட், ஆர்மோனியங்கள் பழுதடைந்துவிட்டதா? அப்படியானல் அவை எவ்வித பழுதடைந்தவை யாயினும் புதிதுபோற் திருத்திக் கொடுப்போம். வேலைகள் திருப்தியில்லாவிடின் கூலி இனும்! ஷை கருவிகள் புதிதாயும் உண்டாக்கப் பெறும். குளோக், உவாக்ஷ், தையல் மெஷீன்களும், போன், பிடில், ஓர்ஹன், ரைப்மெஷீன் முதலியனவும் விசேடமாய் திருத்தப்பெறும். ஷை கருவிகட்குத் தேவையான புதிய பாகங்கள் விற்பனைக்கிருக்கின்றன.
**ஜீ. எம். பொன்னுத்துரை அன் பிறதர்**
32, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்
(95) 15-3-36—4

## கரந்தைத் தமிழ்ச்சங்கம் தஞ்சை.

### போதுக்கூட்டம்

### பாரதியாருக்கு ஆதரவு

1936, மார்ச்சு, 20-ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருவாளர் பண்டிதர் L. உலகநாதபிள்ளையவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அது போது மன்னர் பிரான் ஜார்ஜு அரசர், தமிழ்ப்புலவர் கா. நமசிவாய முதலியார், சங்க உறுப்பினர் மீ. திருவேங்கடஞ் செட்டியார் இவர்கள் பிரிவாற்றுமைக்கு இரங்கல் முடியும், எட்டாவது எட்வர்டு பட்டமெய்தியமைக்கு மகிழ்ச்சியும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு இக்கல்லூரியில் பயிலும் கள்ள மாணவர்கட்கு தொண்ணூறு ரூபா பரிசளிக்கப்பெற்றது. பின்னர் திருவையாறு புலவர் R. வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் மு. இராகவையங்கார் அவர்களின் பொருளதிகார ஆராய்ச்சியில் பிழை பட்ட பகுதிகளை தக்க சான்றுடன் மறுத்து ஒருவிரிவுரை நிகழ்த்தியதும், இச்சங்கத் தலைவரும் செந்தமிழ்ப்புரவலரும் இராவ்சாகிபுமாகிய திரு. த. வே. உமாமகேசுவாம்பிள்ளை அவர்களால் கீழ்க்குறித்த முடிபுகள் முன் மொழியப்பெற்று புலவர் அ. பொன்னண்ணுக்களத்தில் வென்றுர் அவர்களால் துணை மொழியப்பெற்று யாவராலும் ஏற்றுக்கொள்ளலாயின.

முடிபு:- 1. நமது மன்னர் பெருமானுகிய ஐந்தாம் ஜார்ஜு காலமானதுபற்றி இக் கூட்டம் துயருற்று அவர் தம் நல்லாவி இறைவனடியில் இனிது அமைதியுற்றிருக்குமாறு வேண்டுகின்றது.

2. தமிழ்ப்பேராசிரியரும் தமிழ்ப்புலவர்தம் உறுதுணையாளரும் தமிழ் மாணவர்கட்கு அரிய நூல்கள் எழுதியுதவியவரும் தமிழ்த்தொண்டில் சிறந்து விளங்கியவருமாகிய திரு. கா. நமசிவாய முதலியாரவர்கள் காலஞ்சென்றது குறித்து இக்கூட்டம் துயருற்று அவர் இறைவனடி எய்திப் பேரின்பப் பெருவாழ்வுற வேண்டுகின்றது. இத் துயரச்செய்தியை அவர்தம் அருமைக் குடும்பத்தினர்க்கு இக் கூட்டம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. இங்சங்கத்துக்கு அன்பர்களுள் ஒருவராகிய திரு. மீ. திருவேங்கடஞ் செட்டியாரவர்கள் காலஞ்சென்றது குறித்து இக்கூட்டம் வருந்தி அவர் இறைவனடி எய்திட வேண்டுகின்தது.

4. நமது மன்னர் பெருமானுகிய எட்டாவது எட்வர்டு மன்னர் நீடிய ஆயுளும் நிறைந்த பெருவாழ்வுகளும் எய்தித்தம் குடிமக்களுக் கெல்லாம் நல்வாழ்வடைவித்துவர இக் கூட்டம் இறைவனடியை என்றும் இறைஞ்சுகின்றது.

முடிபு:- 5. (a) திரு இராகவையங்கார் அவர்கள் இயற்றிய தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி என்னும் நூல் தொல்காப்பிய நூலில் இல்லாத கொள்கைகளையும் பொருள்களையும் தக்க சான்றுகளின்றித் தம் மனத்திற் கிசைந்த வாறெல்லாம் நூற்கருத்தாகக் கூறி யுள்ளது. "ஐயர்" "மேலோர்" "கீழோர்" முதலிய சொற்களுக்குத் தவறுன பொருளுரைத்துளது. ஆகவே அது தமிழுலகின் மதிப்பில் மிக மிகத் தாழ்வுறுகின்றது.

(b) நூல் தோன்றிய காலத்தே திரு. பா. வே. மாணிக்கநாயகர் அவர்களும் பின் பண்டிதர் திரு. ந. மு. வெங்கடசாமி நாட்டார் அவர்களும் இதுபோது பேராசிரியர் திரு. S. சோமசுந்தரபாரதியார் அவர்களும் தக்க ஏதுக்களால் ஐயங்கார் அவர்களின் ஆய்வுரையானது பிழைபட்டதெனநாட்டிய உண்மையைக் கடைப்பிடித்து தெருட்சி யடையாது மீண்டும் மீண்டும் கூறியதே கூறும் ஐயங்கார் அவர்களின் வன்கண்மை மிகமிகக் கண்டிக்கற்பாலது.

(c) தொல்காப்பிய நூலின் உண்மைக் கருத்துக்களைத் திரித்து அவற்றிற்கு முற்றும் முரணுன கொள்கைகளை நாட்டவும் தமிழ் மக்களின் சீரிய பண்புகளை மறைத்து அவர்கள் கற்பொழுக்க மறியாத மாந்தர் எனும் திரிபுணர்ச்சியைப் பரப்பவும் குறிக்கொண்டு எழுதப் பெற்ற இந்நூல் மாணவர் பயிலுதற்குரிய தன்றென்பதைப் பல்கலைக்கழகங்களின் தமிழ்க்கழகங்கள் உணர்ந்து ஆவனபுரியும்கடப்பாடுடையன.

(d) இந்நூலில் மறைமுகமாக எழுதப் பெற்றிருக்கும் பொய்யுரைகளை வெளியாக்கி தமிழ் மக்களின் மேதக்க பண்புகளை உலகறியச்செய்து பழிநீக்கிய தமிழ்ப்பேராசிரியர் திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்களின் புலமைத்திறனையும் வீரச்செயலையும் தமிழுலகு வியந்து நன்றிபாராட்டற்பாலது.

கடிதம்.

## பாணந்துறை சைவ மகாசபை

நிகழும் பவ ஆண்டு பங்குனித் திங்கள் 8-ம் நாள் (21.3. 36) சனிக்கிழமை பிற்பகல் 8 மணியளவில் பாணந்துறை ஸ்ரீ சுமங்கல வித்தியாலய மண்டபத்தில் கொழும்பு ஆசிரியகலாசாலை உபந்நியாசகர் திருவாளர் சி. க. இராசசிங்கம் B.A.(Lond) அவர்களின் தலைமையின்கீழ் ஓர் சைவ மகாசபை தேவாரபாராயணத்துடனுரம்பமாயது. அத்தருணம் பாணந்துறை சைவ நன்மக்கள் பலர் சமுகமளித்தனர்.

வரவேற்புப்பா படிக்கப்பட்டதும், அக்கிராசனர் முன்னுரை கூறிய பின்னர் கொழும்பு வைத்திய சுகாதாரப்பகுதிச் சேவையாளரும் சித்தாந்த பண்டிதரும் சைவானுஷ்டான சீலருமாய திருவாளர். செ. சின்னத்தம்பி அவர்கள் "தொண்டின்சிறப்பு,, என்னும் விடயத்தைப் பீடிகையாகக்கொண்டுசொல்பொருட்சுவைகள் ததும்ப உபந்நியாசித்தனர். பின் திருவாளர் வே. செல்லையா உபாத்தியாயரவர்கள் தொண்டின் சிறப்பை விரித்துக் கூறியும் தலைவரவர்கட்கு நல்லுரை பகர்ந்தும் தமது குறிப்புரையை முடித்தனர்.

தலைவர் தமது குறிப்புரையை முடித்து சங்கப்பெயரைத் தீர்மானிக்கும்படி கேட்டுக் கொள்ளவே "பாணந்துறை சைவ மகா சபை" என்பதே பொருத்தமான பெயரெனத் தீர்மானிக்கப்பட்டுச் சபையோரா லங்கீகரிக்கப்பட்டது.

இம்மகாசபையை உயரிய நோக்கத்துடன் செவ்வனே நடத்தி வருதற்கு அக்கிராசனர், காரியதரிசி, தனாதிகாரி ஆகிய உத்தியோகத்தினருட்பட 21 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு நிர்வாக சபையை நியமிக்கவேண்டுமெனத் தீர்மானித்து கேனமுல்லை அரசினர் கழகப் பிரதம ஆசிரியர் திருவாளர் சி கார்த்திகேசு அவர்களை அக்கிராசனராகவும், திரு இ. செல்லத்துரை, (ஓவசியர்) திரு. நாச்சியப்ப செட்டியார், திரு. சுப்பையாநாடார் என்போர்களை உபதலைவர்களாகவும், திரு. செ. கந்தையா உபாத்தியாயரவர்களைக் காரியதரிசியாகவும், திரு. V. சண்முகமவர்களை உப காரியதரிசியாகவும், திரு. V. இராசரத்தினம் சிருப்பர் அவர்களை தனாதிகாரியாகவும், திரு. R.M.K. சிவசங்கரம்பிள்ளை அவர்களை உபதனாதிகாரியாகவும், திரு. V. விஜயரத்தினம் அவர்களைக் கணக்குப் பரிசோதகராகவும் சபையோர் நியமித்தனர். திரு. கந்தையா, திரு. வ. இ. கதிரவேலு, திரு. மு. வே. நாகலிங்கம்- திரு. பொ. செல்லத்துரை, திரு. ச. சுப்பிரமணியம், திரு. S. சண்முகம், திரு. பாலத்துறைநாடார். திரு. ப. சிதம்பரநாடார். திரு. வீ. மாணிக்கநாடார். M. வலதுபிள்ளை, திரு. பழ. சோமசுந்தரஞ்செட்டியார், திரு. வே. செல்லையா உபாத்தியாயர். திரு. க. கந்தையா ஆகிய சைவ நன் மக்கள் பதின்மூவர் நிர்வாக சபைக் கௌரவ அங்கத்தினராக நியமனம் பெற்றனர்.

சங்க ஸ்தாபனத்தை ஒட்டிக் காரியதரிசி அவர்கள் சில பிரமாணங்களை வாசித்துச் சபையின் அங்கீகாரத்தைப்பெற்றனர்.

தலைவரவர்கள் தம்மை அன்புடன் வரவேற்றமைக்காகத் தம்முடைய மனமார்ந்த நன்றியைக் கூறுவதாகவும் "இச் சைவமகாசபை" என்றும் நிலைபெற எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டும் என்றுங்கூறித் தமது முடிவுரையை முடித்தனர்.


சபையோரின் சிறியவேண்டுகோளைப் பெரிதெனமதித்து பரிவுடன் தலைமை வகித்து இன்புடன் சங்கத்தை நிறைவேற்றிய சபைத்தலைவருக்கும், உடல் நலங்குன்றியபோதும் உண்மைத் தொண்டாற்ற முன்வந்த உபந்நியாசகருக்கும், சங்க ஸ்தாபனத்திற்காய் அல்லும் பகலுமோயாதுழைத்து உடல் பொருள், நலங்களையும் பொருட்படுத்தாது பெரு முயற்சி செய்த புண்ணிய சீலராம் திரு. இ. செல்வத்துரை (ஓவசியர்) அவர்கட்கும், இவருக்குடனின்றுதவி புரிந்த திரு. S.A. அப்பாபிள்ளை அவர்கட்கும் ஒத்துழைப்பின் இன்றியமையாமையை உணர்ந்து, உண்மைத் தொண்டாற்றி உத்தம ஊழியராயிருத்தல வசியம் என ஓர்ந்து சமுகந்தந்து சபையைச் சிறப்பித்த சைவநன்மக்கட்கும் காரியதரிசி அவர்களால் நன்றி கூறத் தேவாரபாராயணத்துடன் இனிதே நிறைவேறியது.


கடிதம்



வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# "நாட்டுச்சீவனசாஸ்திர பாடபுத்தகம்"

**A Text Book of Rural Science (Tamil)**









ஆக்கியோன்:

சுன்னுகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியர்

**திரு. இ. தர்மலிங்கம் அவர்கள்**

இந்நூல் தமிழ் J. S. C., S. S. C., ஆசிரிய தராதரப் பத்திர வகுப்புகளுக்குரிய பாட அட்டவணையை முற்றுக அநுசரித் தெழுதப்பட்டது.

சமீபத்தில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு அருந்துணையாயுள்ளது.

சிறந்த விஷயங்களைக் கொண்டது.

பல சித்திரங்களைக்கொண்டு மிளிர்வது.

வண. சுவாமி ஞானப்பிரகாசர், யாழ்ப்பாணம், அரசினர் மாதிரித்தோட்ட அதிபர் திரு. M. R. M. ஜெபரத்தினம், வித்தியாதரிசகர் திரு. சே. தியாகராசா, அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபராயிருந்து இளைப்பாறியிருக்கும் திரு. அ. பொன்னையா, பரமேஸ்வரக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் திரு சு. நடேசபிள்ளை ஆதியோரினதுமதிப்புரையைக் கொண்டது.

மூன்னூறு பக்கங்களுடையது!

குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது!


**விலை ரூபா 2.** தபாற்செலவு சதம் 25.

வடஇலங்கைத் தமிழ்நூற்பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

கிடைக்குமிடம்:-

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.**






தவத்தால் தன்உயிரைத் தனக்குரித்தாகப் பெற்றவனை எல்லா உயிரும் வணங்கும்.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 29th March 1936, Sunday. { No. 37

அகில இலங்கை

## ஆதாய சமுதாயம்

மாதமொன்றுக்கு ரூபாய் 2 வீதம் 100 மாசங்களுக்குச் செலுத்தி ரூபாய் 275 பெறமுன் வாருங்கள்.

கமம், வியாபாரம் ஆதிய வற்றுக்கு முதல்பெற விரும்பினுல் மேற்படி சமுதாயத்தில் வந்து ஏலவே சேர்ந்து கொள்ளுங்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க எமது சமுதாயத்தை யாதரியுங்கள்.

எம் தேசப்பணத்தை எம் தேச சமுதாயங்களில் செலுத்தி செல்வப்பேற்றை யடைய முன்வாருங்கள். வருடமொன்றுக்கு ரூபாய் 24 செலுத்தி அங்கத்துவம் பெறுவோருக்கு இலகுவான முறையில் இறுக்கக் கூடிய கடன்கள் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றேம்.

உயர்ந்த வட்டி விகிதத்தில் தவணைவைப்பு, நடைவைப்பு, சம்பாத்திய வைப்புகளுக்கு பணம் ஏற்றுக் கொள்வோம். அங்கத்துவம் பெற விரைந்து வாருங்கள். தாமதமடைந்து மனம் வருந்தாதீர்கள். வேண்டிய விபரங்கட்கு கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதி அறிக.

*Manager*

**LANKA BENEFIT CO.,**

Vannarponnai

(175) 5-8-34.

திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி

**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்

**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்

ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்

**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறேம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்,

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

**விலை நிதானம்! நயம் சரக்கு!**

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**


நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்
நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்
யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## பவுண்மார்க் ஓடுகள்



இப்பொழுதும்
விசேடமாக மதிப்புப்பெறும்
**பவுண்மார்க் ஓடுகள்**
இவைகளே.

எப்பொழுதும் **நன்கு**
மதிப்புடன் அழகு மிளிரும்
உன்னத மாளிகைகளில்
வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பெலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். **பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.**

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை / பறங்கித்தெரு }
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை

ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

**SRI LANKA BOOK DEPOT**

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

**வண்ணார்பண்ணை**

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு
வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும்,

வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பேன்சில், பேனு முதலியனவும், கோப்பி (Ex. Copy)
கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான
எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி"யி லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் ஞு மார்ச் மீ 29-ந உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.